# நாடோடி

## நாடகமே உலகம்

604

பிரசுரம்
நாடோடி
தியாகராயநகர் :: சென்னை 17

முதற் பதிப்பு நவம்பர் 1943
இரண்டாம் பதிப்பு பிப்ரவரி 1944
மூன்றும் பதிப்பு ஏப்ரல் 1947

விலை ரூபாய் மூன்று

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி, MS. 524.
நாடோடி MS. 120

# முன்னுரை

**நா**டோடியின் முதல் கட்டுரையை நான் எழுத்துப பிரதியில் படித்தபோது, எனக்கு ஒரு பெரிய கவலை உண்டாயிற்று.

"அடாடா! கட்டுரை இவ்வளவு அழகாயிருக்கிறதே! இதை எல்லாரும் படித்து அநுபவிக்க வேண்டுமே!" என்ற கவலை தான்,

நல்ல விஷயம் எதைப் படித்தாலும் எனக்கு அப்படித் தான் கவலை ஏற்படுவது வழக்கம். படிப்பதில் மட்டுமல்ல—நல்ல பாட்டைக் கேட்டாலும், நல்ல சித்திரம் அல்லது சிற்பத்தைப் பார்த்தாலும், "ஆகா! இதை எல்லாரும் பார்த்து அநுபவிக்க வேண்டுமே?" என்று கவலைப் படுவேன். எனக்குத் தெரிந்த சிநேகிதர்களிடமெல்லாம் ஒவ்வொருவராகச் சென்று சொல்லிவிட்டு வரலாம் என்று தோன்றும். அவர்கள் கவனிக்காமல் அலட்சியமா யிருந்தால் கோபம்வரும். அவர்களும், 'பேஷ்' என்று சொல்லிவிட்டாலோ பிரமாதமான சந்தோஷம் ஏற்படும்.

இந்த இயல்பைக் குறித்து ஒரு சமயம் அறிஞர் டி. கே. சி. அவர்களிடம் பிரஸ்தாபித்தேன். அதற்கு அவர், "இது உம்முடைய இயல்பு அல்ல, ஐயா! கலைகளுக்கே உரிய இயல்பு. இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பே திருவள்ளுவர் இந்தக் கலை இயல்பை அறிந்து சொல்லியிருக்கிறார்" என்றார்.

"எந்தப் பாட்டில்?" என்று கேட்டேன்.

**தாமின் புறுவ(து) உலகு(இ)ன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்**

என்ற குறளை டி. கே. சி. எடுத்துக் காட்டினார். இந்தக் குறளுக்கு அந்த அர்த்தம் உண்டென்று அதுவரையில்

எனக்குத் தோன்றவில்லை. அப்படித் தோன்றாமல் செய்வதற்குப் பரிமேலழகர் ஒத்தாசை செய்திருக்கிறார். "காமுறுவர்" என்றால், "பின்னும் அக் கல்வியையே விரும்புவர், அதாவது, மேலும் மேலும் கல்வி கற்பார்கள்" என்று அவர் அர்த்தம் செய்து, இந்தக் குறளுக்கே அர்த்தமில்லாமல் அடித்திருக்கிறார்.

மேற்படி குறளுக்கு டி. கே. சி. கொள்ளும் பொருள் வருமாறு:

"உலகத்தில் தனித்தனியாக மனிதன் அநுபவிக்க வேண்டிய இன்பங்கள் இருக்கின்றன; கூட்டமாகச் சேர்ந்து அநுபவித்தற்குரிய இன்பங்களும் இருக்கின்றன. ஒருவனுக்குப் பணம் தனியாகவேண்டும்; வீடு தனியாக வேண்டும்; நில புலங்கள் சொந்தமாக வேண்டும். நம்முடைய துணியை இன்னொருவர் கட்டிக் கொள்வதை நாம் விரும்புவதில்லை. நம்முடைய பைஸிகிளில் இன்னொருவர் ஏறுவது நமக்கு வெறுப்பை யளிக்கிறது. நம்முடைய பௌண்டன் பேனாவை இன்னொருவர் தொட்டாலே கோபம் உண்டாகிறது. தமக்கென்று தனி வீடு வேண்டுமென எல்லாரும் விரும்புவார்கள்.

ஆனால் இலக்கியம், சங்கீதம், ஓவியம் முதலிய கலைகள் விஷயத்தில் இதற்கு நேர் விரோதமான உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. நாம் ரஸித்த கவிதையை இன்னொருவருக்குச் சொல்லி ரஸிக்கப் பண்ணுவதில் நமக்கு இரட்டிப்பு இன்பம் உண்டாகிறது. நாம் அநுபவிக்கும் சங்கீதத்தை இன்னும் பத்துப் பேர் அநுபவித்தால், நம்முடைய சந்தோஷமும் பன்மடங்கு ஆகிறது.

இதைத்தான் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். கலைகளை நன்கு கற்றறிந்தவர்கள் தாங்கள் அநுபவித்த கலை இன்பத்தை உலகமெல்லாம் அநுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படி உலகம் அநுபவிப்பதைக் கண்டு அவர்கள் அதிகமாய் இன்புறுகிறார்கள்."

டி. கே. சி. யின் மேற்படி விளக்கத்தை யெல்லாம் கேட்டுவிட்டு நான், "வள்ளுவரிடமிருந்து ஒரு விஷயத்தில்

மாறு படுகிறேன்" என்றேன். "எதில்?" என்று கேட்டார். "கற்றறிந்த பெரியார்களுக்குத்தான் அந்தச் சுபாவம் என்பது இல்லை. அரை குறையாகக் கற்றவர்களுக்கும் அந்த இயல்பு இருக்கத்தான் செய்கிறது" என்றேன்.

**நா**டோடியை நடுவில் விட்டுவிட்டு எங்கேயோ போய் விட்டோம். ஆனால் நாம் அவரை விட்டாலும் அவர் நம்மை விடமாட்டார். அடுத்த வீட்டு அண்ணா சாமி ஐயரைப் போல் திடுதிப்பென்று வந்து நம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வார். பிடித்துக் கொண்டு அவருடைய ஜாலக் கண்ணாடியை நம் எதிரே நீட்டுவார். நம்மிடமுள்ள கோணல் மாணல்களை யெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுவார்; சிரிப்பு மூட்டுவார்.

தமிழ்நாட்டு வசன இலக்கியத்தில் நாடோடி ஒரு தனி வழியை உண்டுபண்ணிக் கொண்டார். அதிலே மேலும் மேலும் முன்னேறிச் சென்று வருகிறார். நல்ல வசன நடைக்கு இருக்கவேண்டிய எல்லா இலட்சணங்களும் அவருடைய நடையில் நன்கு அமைந்திருக்கின்றன. அதில் எளிமை இருக்கிறது; தெளிவு இருக்கிறது; இலேசான, உயர்தர நகைச் சுவை இருக்கிறது.

உண்மையான நகைச்சுவை ஆசிரியனை வேதாந்திக்கு ஒப்பிடலாம். உலகிலுள்ள இன்பங்களையும் துன்பங்களையும் வேதாந்தி சம நோக்குடன் பார்க்கிறான். நகைச்சுவை ஆசிரியனும் அப்படித்தான். வாழ்க்கையிலுள்ள கஷ்டங்கள், சுகங்கள் எல்லாவற்றிலும் அவன் நகைச் சுவையைக் காண்கிறான். தான் காண்பதோடு நில்லாமல், நமக்கும் எடுத்துக் காட்டுகிறான். நகைச்சுவை ஆசிரியனுடைய கண்கள் வழியாகப் பார்க்கும் போது நமக்கும் உலகத்திலுள்ள இன்ப, துன்பங்கள் எல்லாம் சமமாகப் போய்விடுகின்றன. எல்லாவற்றிலும் சிரித்து மகிழ்வதற்குரிய அம்சங்களையே காண்கிறோம். அப்போது உலகத்து இன்பங்களை நன்கு அநுபவிக்க முடிகிறது; உலகத்தின் துன்பங்களோ சகிக்கக் கூடியவை ஆகின்றன.

'நாடோடி தமிழ்நாட்டுக்கு அத்தகைய அரிய தொண்டைச் செய்து வருகிறார். நமது தினசரி வாழ்க்கையை நகைச்சுவைக் கண்கொண்டு பார்த்து, அதில் நாம் காணாத அதிசயங்களையும் ஹாஸ்யங்களையும் கண்டு, நமக்கும் எடுத்துச் சொல்கிறார். சொல்வதைத் தெளிவான உயிருள்ள தமிழ் நடையில் சொல்கிறார். அவருடைய கட்டுரைகளைப் படிக்கும் போது நமக்கு வார்த்தைகளின் மேல் ஞாபகம் நிற்பதே இல்லை. அநேகமாய் முதல் வரியிலேயே விஷயத்துக்குள் போய்விடுகிறார். கடைசி வரியில் வந்துதான் நிற்கிறார்.

இப்படி, வார்த்தையில் நமது கவனத்தை நிறுத்தாத நடைதான் உயர்ந்த நடை; அதுதான் எழுதுவதற்கு மிகவும் கடினமான நடை. படிக்கும்போது "ஒன்றுமே கஷ்டமில்லையே; ரொம்ப எளிதாயிருக்கிறதே!" என்று தோன்றும்; எழுதிப்பார்த்தால்தான் அதன் கஷ்டம் தெரியும்.

நாடோடியின் கட்டுரைகள் முதன் முதலாக இப்போதுதான் புத்தக உருவத்தில் வருகின்றன. நாடோடியின் முதல் கட்டுரையைப் படித்தபோது எனக்கு ஏற்பட்ட கவலை இப்போது இல்லை. அவருடைய கட்டுரைகளைத் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான தமிழர் ஆர்வத்துடன் படித்து அநுபவிக்கிறார்கள். இந்தப் புத்தகத்துக்குத் தமிழ் நாட்டில் தக்க வரவேற்பு இருக்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இதைத் தொடர்ந்து இன்னும் பல நாடோடி நூல்கள் வெளியாகுமென்று எதிர்பார்க்கிறேன்.

**'கல்கி' காரியாலயம்,**
**2-10-1943**

**கல்கி**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நாடகமே உலகம் | ... | 9 |
| அப்பா ஆபீசுக்குப் போகிறார்! | ... | 28 |
| காப்பிச் சண்டை | ... | 37 |
| ஐயா, அடுத்த வீட்டுக்காரரே! | ... | 44 |
| கடவுளுக்குக் கண் இல்லையா? | ... | 49 |
| சம்பந்தி அவர்களுக்கு | ... | 60 |
| சமாதான சங்கடம் | ... | 65 |
| பரீட்சையில் ஏன் தேறவில்லை? | ... | 74 |
| "அப்பவே சொன்னேனே, கேட்டயா?" | ... | 84 |
| சாப்பாடும் கூப்பாடும் | ... | 90 |
| கண்ணன் காட்டிய வழி | ... | 98 |
| திருச்சி ஸ்தல புராணம் | ... | 105 |
| வரதட்சிணை வேண்டாம்! | ... | 113 |
| நல்ல வேளை | ... | 121 |
| கம்பர் குறை தீர்ந்த படலம் | ... | 128 |
| அலாரம் கடிகாரம் | ... | 139 |
| அமளி துமளி | ... | 149 |
| ஒண்டுக் குடித்தனம் | ... | 163 |
| கதர் வாங்கிக் கட்டாது | ... | 169 |

## நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்

பிழைக்கும் வழி

இதுவும் ஒரு பிரகிருதி

ஒரு நாள் கூத்து

அட பரமசிவா!

எங்கள் குடும்பம் பெரிது!

படித்த பெண் வேண்டாம்!

ஹே! அனுராதா!

என்னைக் கேளுங்கோன்னு!

ஏழையாவது எப்படி? (அச்சில்)

# நாடகமே உலகம்

[நாடக மேடையை வாழ்க்கையை அனுசரித்துத் திருத்தி யமைக்கப் பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. அவை ஒன்றும் இதுவரை பலன் தரவில்லை. ஆகையால், வாழ்க்கையைத் தான் நாடக மேடையை யனுசரித்து அமைத்து விடலாமே என்ற அபூர்வ யோசனை தோன்றிற்று, அதன் விபரீத பலனைக் கீழே காண்க]

## காட்சி 1.

[புருஷன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கிறான். மனைவி வருகிறாள்.]

**மனைவி** :—நாதா! நமஸ்கரிக்கின்றேன்.

**புருஷன்** —ஸர்வ மங்களானி பவந்து! ஸர்வ மங்களானி பவந்து! மாதே நீ என்னைக் கோரிவந்த காரணம் யாதோ? நான் அதை அறியலாமோ?

**மனைவி** :—நாதா! எதுவும் தாங்கள் அறியாத காரியம் ஒன்றுமில்லை. எப்படியும் நான் வாய் விட்டு சொல்லத்தான் வேண்டுமென்றால் சொல்லுகிறேன். ஆனால்.......ஆனால்........ நான் சொன்னால் நீங்கள் கேட்பீர்களோ............மாட்டீர்களோ........ என்றுதான்...........

[தயங்குகிறாள்.]

**புருஷன்** :—என் பிரிய ஸகி! என் மேல் ஏன் உனக்கு இத்தனை சந்தேகம்? பவழம் போன்ற

உன் வாயிலிருந்து முத்துப் போன்ற சொற்கள் உதிர, நீ கேட்டு, நான் இல்லை யென்று இதுவரை சொன்னதுண்டா? என் உடல், பொருள், ஆவி, என் சட்டைப் பையில் இருக்கும் காலணு, எதை வேண்டுமானாலும் கேள். இதோ கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்.

[பாடுகிறார்.]

**தயக்கம் ஏனோ பெண்ணே !**
**மயக்கம் கொள்ளாதே மானே !**
**ஸரிகம பதநிஸ—தயக்கம் ஏனோ பெண்ணே !**
**என் உடல், பொருள், ஆவி,**
**என் சட்டைப் பை காலணு......**
**எது வேண்டுமானாலும் கேள்**
**கொடுக்கவே சித்தமானேன்**

**(தயக்கம்)**

மனைவி :—நாதா !

**ஐப்பசி மாதம் தீபாவளிப் பண்டிகை**
**வரப்போகுது ஐயா—குழந்தைகள்**
**மனதைப் புண்ணுக்காமல் கொண்டாட வேண்டும்**
**உத்தாரம் தாரும் மெய்யா**

புருஷன் :—அவ்வளவுதானே ?

**கண்மணி உந்தன் இஷ்டம் போலவே**
**நடத்துவாய் பண்டிகையை !**
**காந்தன் நானும் அநுமதி தந்தேன்**
**கலக்கம் கொள்ளாதே கண்ணே.**

[என்ன, பாட்டுக்கள் ஒரு தினுஸாக இருக்கின்றனவே என்று யோசனை பண்ணுகிறீர்களா ? ஆனல் நாடகப் பாட்டு என்றல் அப்படித்தா னிருக்

கும், அவற்றிற்கு இலக்கணம், இலக்கணம் ஒன்றும் கிடையாது. வெறும் வசன நடையையே இழுத்தாற்போல் உச்சரிப்பதற்குத்தான் நாடக மேடையில் பாட்டு என்று பெயர்.]

மனைவி :—நாதா! மிகவும் சந்தோஷம். இருந்தாலும் பணம் இல்லாமல் பண்டிகையைக் கொண்டாட முடியாதே. அதுதான் சற்று கலங்குகிறேன்.

புருஷன் :—ஆ! என்ன வார்த்தை சொன்னாய்! என்ன வார்த்தை சொன்னாய்!! பணம்! பணம்!!

[மேலும் கீழும் உலாவுகிறார்.]

பிரியே! நான் எவ்வளவோ படித்துப் படித்துச் சொல்லியும், ஏன் உனக்கு அந்தப் பணத்தின் மேலுள்ள மோகம் இன்னும் குறையவில்லை? பணம் இருந்தால்தான் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட முடியும் என்றால், அப்பொழுது நாம் பணத்திற்கு அடிமைகள் என்றல்லவோ அர்த்தமாகிறது! சுதந்திர வேட்கையை விரும்பும் இந்த நாளில் நாம் பணத்திற்கு அடிமையாகலாமா? ஒரு பெரிய ஞானி பாடிய பாட்டை நீ கேட்டதில்லையா? இதோ நான் பாடுகிறேன் கேள்.

**பணமே, உன்னால் என்ன குணமே**
**தண்டம் பண்ணினேன் சற்றும் என்**
**கண்ணின் முன் நில்லாதே (பணமே)**

பணம்! பணம்!! இனிமேல் அந்த நாராச வார்த்தையை என் காதில் போடாதே.

**மனைவி**:—என் பிராணபதி! கிருதார்த்தை யானேன்! என்னுடைய அறியாமையினால் பணம் இல்லாவிடில் தீபாவளிப் பண்டிகை கொண்டாட முடியாது என்று நினைத்தேன். இப்பொழுது உங்கள் பாட்டை கேட்ட பிறகுதான் அஞ்ஞான இருளில் உழன்று கொண்டிருந்த என் அபலை மனது ஞான சூரியனைக் கண்டது! என்னைச் சூழ்ந்திருந்த மாயை நீங்கியது. தாங்கள் செய்த இத் தருமோபதேசத்திற்கு நான் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! நாதா, தங்களை நமஸ்கரிப்பதைத் தவிர அடியாளால் செய்யக் கூடியது வேறு ஏதேனும் உளதோ?

[நமஸ்கரிக்கிறாள்.]

## காட்சி 2.

[ஆபீஸ் மானேஜர் தமது ஆபீஸ் அறையில், மேலும், கீழும் உலாவிக் கொண்டு தமக்குத் தாமே பேசிக் கொள்ளுகிறார். தயவு செய்து அவர் ஏதோ பயித்தியம் என்று நினைத்து விடாதீர்கள். நாடகத்தில் இந்த மாதிரி தனக்குத் தானே பேசிக்கொள்ளும் கட்டங்கள் அநேகம் உண்டு.]

ஆ! என்ன வாசித்து என்ன? என்ன பாஸ் பண்ணி என்ன? என்ன உத்தியோகம் பார்த்து என்ன! நூற்றுக் கணக்கில் சம்பளம் வாங்கித் தான் என்ன? கோபம் என்பது என்னை விட்டு அகலவில்லையே! ஏ கோபமே! நீ பெரிய பாவி! நீ பெரிய

சத்துரு! உலகங்கள் அழிவது உன்னுல் தான். ஏ கோபமே! சீ! என் முன் நில்லாதே. ஓடிப் போ!

[ பாடுகிருர் ]

விருத்தம்

**கோபமே பாவங்களுக் கெல்லாம் தாய்தந்தை,**
**கோபமே குடிகெடுக்கும்—கோபமே......**
**தரனுன்ன, தரனு, தரனுன்னு, தரனு......**

ஆ! நமது குமாஸ்தா மணி அய்யர், நம்மிடம் எவ்வளவு விசுவாசத்துடன் உழைத்தவர்! அவர் செய்த ஒரு சிறு தப்பிதத்துக்காக—பென்ஸிலால் எழுது என்று சொல்லியதை இங்கியால் எழுதிய தற்காக—தீபாவளிச் செலவுக்கு, அவர் கேட்ட 'லோ'னை 'சாங்ஷன்' செய்ய முடியாது என்று சொல்லி விட்டேனே! பாவி நான்! தீபாவளி யன்று புது உடைகள் இல்லாமல் அவர் குழந்தைகள் எப்படி வாடுகின்றனவோ! புதுப் புடவை யில்லாமல் அவர் மனைவி என்ன வருத்தப் படுகிருளோ அல்லது தன் புருஷனைத்தான் என்ன கடிந்து கொள்கிருளோ! மணி அய்யர்தான் தம் மனைவி மக்களுக்கு என்ன ஆறுதல் சொல்லுவாரோ! என்னைத்தான் வைவாரோ! பாவி நான்! இந்த பாவத்திற்காக, நான் இதே பாவ பூமியில், இதே ரூ. 500 சம்பளத் தில், இதே ஆபீஸில், இதே மானேஜராகப் பிறந் தாலும் போதாது, போதாது, போதவே போதாது!

[ தம் தலையில் அடித்துக் கொண்டே பாடுகிருர். ]

தாளம் : ஆதி ] [ ராகம் : சாமா

பல்லவி

சாந்தமுலே ஏஏஏகா செளக்யமுலே ஏஏஏது
ஊஊ ஊஊ ஊஊ ஊஊ

## காட்சி 3.

[ குழந்தை விசாலம் அழுது கொண்டே தன் தகப்பனரிடம் வருகிருள். ]

தகப்பனர் :—குழந்தாய் ! எப்பொழுதும் தாமரை மலர்போல் மலர்ந்திருக்கும் உன்னுடைய திரு வதனம் ஏன் இன்று வாடி வதங்கி சோபை யற்று விளங்குகிறது ? என்னல் அதைப் பார்க்கச் சகிக்க வில்லையே ! கண் கூசுகிறதே உனக்குத் தீங்கிழைத் தவர் யார் , சொல் ! இதோ இந்தக் கத்தியால் அவர்களை எமனுலகிற்கு அனுப்புகிறேன்.

[ தம் பேனக் கத்தியைச் சாவிக் கொத்தி னின்றும் கழற்றிக் கொண்டே பாடு கிருர் . ]

யார் செய்தார், எவர் செய்தார், சொல், சொல், சொல்!
ஏன் செய்தார், எப்ப செய்தார், கொல், கொல், கொல்!

விசாலம் :—தந்தையே ! ஏன் தங்களுக்கு இத்து ணைப் பதட்டம் ? இந்தப் பேனக் கத்தியை மடக்கி சாவிக் கொத்தில் போடுங்கள். பூர்வ ஜென்மத்தில் பாவி நான் என்ன பாவம் பண்ணினேனே, இந்த ஜன்மத்தில் இப்படிக் கஷ்டப் படுகிறேன். போன ஜன்மத்தில் யாருடைய பட்டாஸைப் பிடுங்கிச்

சுட்டேனே, இந்த ஜன்மத்தில்—ஆ சொல்ல முடிய வில்லையே ! நா குழறுகிறதே—இந்த ஜன்மத்தில் அடுத்தாத்து சீனு என்னுடைய பட்டாசுக் கட்டைப் பிடுங்கிக்கொண்டு ஓடி விட்டான்.

[ பாடுகிருள் . ]

**என்ன பாவம் செய்தேனே நான்**
**என் பட்டாஸைப் பறிகொடுக்க (என்ன)**
**போன ஜன்மத்தில் நானே**
**யார் கட்டைப் பிடுங்கினேனே**
**இந்த ஜன்மத்தில் சீனு**
**என் பட்டாஸைப் பிடுங்கிக் கொள்ள (என்ன)**

பிதா ! நான் போன ஜன்மத்தில் பண்ணின பாவ புண்ணியங்களின் பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கின்றேன். அதற்காகத் தாங்கள் ஏன் வருத்தப்பட்டுக் கண்ணீர் உகுக்கிறீர்கள் ! இந்தாருங்கள் கைக்குட்டை. கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள்.

[ கைக்குட்டை கொடுக்கிருள் . ]

**தகப்பன்** :—குழந்தாய் விசாலம் ! நீ படும் வருத்தம்தான் என்னையும் இப்படி வருத்தத்துக் குள்ளாக்கி விட்டது இருக்கட்டும். இதோ போய் அந்தச் சீனுவைச் சித்ரவதை செய்கிறேன், பார். நீ பட்டாசு சுடவாவது, அதை அந்தப் பயல் பிடுங்கிக் கொள்வதாவது? எல்லாம் அவன் அப்பன் கொடுக்கும் இடம்தான்.

[ பாடுகிருர் . ]

**பார்க்கின்றேன், ஒருகை,**
**விட்டேனே, இனி நான்— (பார்க்கின்றேன்)**

## காட்சி 4.

[தீபாவளி முடிந்து விட்டது. தலை தீபாவளிக்காக மாமனார் வீட்டிற்கு வந்திருந்த மாப்பிள்ளை ஊருக்குப் புறப்பட்டுப் போகப் போகிறார். மூட்டையெல்லாம் கட்டியாகி விட்டது. வாசலில் கட்டை வண்டி நிற்கிறது. (கிராமாந்தரம். அதனால்) வாசலில் மாமனார் நிற்கிறார். உள்ளே மாப்பிள்ளை தம் மனைவியிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போக வேண்டுமென்று காத்திருக்கிறார்.]

**காதலன்** (தனக்குத்தானே):—ஆ! என் காதலியைக்காணோமே! ஐந்தரை நிமிஷங்களுக்கு முன்பே இங்கு வருகிறேன் என்று சொன்னாளே!........ஒரு வேளை என்னைச் சோதிப்பதற்காக, இந்த மேஜைக்கடியில் எங்காவது ஒளிந்து கொண்டிருப்பாளோ? (யோசிக்கிறான்) ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும். இதோ தேடிப் பார்க்கிறேன் (தேடுகிறான்)........ஆ! மேஜைக்கடியிலும் என் காதலியைக் காணோமே! நான் ஊருக்குப் புறப்பட்டுப் போக வேண்டிய வேளை வந்து விட்டதே! ஈசா! நான் என்ன செய்வேன்! ஏது செய்வேன்! இதுவும் உன் திருவிளையாடலா?

[மேலும் கீழும் உலாவுகிறான். அடிக்கடி கைக்கடியாரத்தைப் பார்க்கிறான். பெருமூச்செறிகிறான். பாடுகிறான்.]

இன்னும் வரக் காணேனே
என்னருமைக் காதலியை
இதற்கேது நான் செய்வேன்
ஈசனுக்குக் கண்ணில்லையா (இன்னும்)

இதோ இங்குள்ள நாற்காலியில் அமர்கிறேன். ஈசன் விட்ட வழி விடட்டும்.

[உட்காருகிருன். காதலி அவன் பின் புறமாக வந்து அவன் கண்களைப் பொத்துகிருள்.]

காதலி :—நாதா! உங்கள் கண்ணைப் பொத்தினது யார் என்று சொல்லுங்கள், பார்க்கலாம்.

காதலன்:—ஆ! இது யாரா யிருக்கலாம்! இதோ யோசித்துப் பார்க்கிறேன்! (யோசிக்கிறான்) என்னை 'நாதா' என்று கூப்பிட்ட குரல் என்னுடைய காதலியி னுடையதாய்த் தானிருக்க வேண்டும். (தன் கண்களினின்றும் அவள் கைகளை விடுவித்துக் கொண்டே) ஆ! காதலி! நான் உனக்காக இந்த அறையில் எத்தனை நிமிஷங்களாகக் காத்துக் கொண்டிருப்பது! இந்த ஏழு நிமிஷங்கள் இருபத்து மூன்று செகண்டுக்குள் என் மனம் என்ன பாடு பட்டுவிட்டது!

காதலி :—ஆ! பிராணநாதா! நான் நான்........ ஹூம் (வெட்கத்தோடு) பௌடர் பூசிக் கொண்டிருந்தேன். அதனல் நாழியாகி விட்டது........நாதா! நீங்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போகப் போகிறீர்களாமே. நான் எப்படி உங்களை விட்டுத் தனித்திருப்பேன்!

[பாடுகிருள்.]

ஐயோ! என்ன செய்குவேன் நானே
எந்தன் உயிர்க் காந்தரே
எப்படித் தனித்திருப்பேன்? எப்படித் தூங்கி
உய்வேன்?

காதலன் :—கண்ணே! கவலைப்படாதே! நாம் என்ன பண்ணலாம்? எல்லாம் ஈசன் செயல். இந்தா, நான் ஊருக்குப் போகவேணும். விடை கொடுப்பாய்.

[பாடுகிறான்.]

போய் வருவேன், கண்ணே. நானே
போய் வருவேன்
பூ நகர் நாடி, படிப்பினைத் தேடி, தாராய்
விடை பெண்ணே!

காதலி :—நாதா உங்களுக்கு இது நியாயந்தானா? இது தருமமா? இது முறையா? என்னை இப்படித் தனியே விடுத்துச் செல்கிறீர்களே!

[பாடுகிறாள்.]

விருத்தம்

இது தருமந்தானோ, இது முறையோ,
இது நியாயந்தானோ, தானோ, தானோ, தானோ......

காதலன் :—கண்ணே! கலங்காதே. கிறிஸ்துமஸ் விடுமுறை விட இன்னும் ஒரு மாதந் தானிருக்கிறது. அப்பொழுது நான் கட்டாயம் உன்னை வந்து பார்க்கின்றேன். அது வரையில் என் ஞாபகார்த்தத்துக்கு இந்த போட்டோவை வைத்துக் கொள். (போட்டோ ஒன்று கொடுக்கிறான்) இந்தா நாழியாகிறது.

வண்டி காத்துக் கொண்டிருக்கிறது. நான் போய் வருகிறேன்.

[போகிறான்.]

**காதலி :**—ஆ என் நாதா !

[கீழே விழுந்து மூர்ச்சையாகிறாள்.]

## காட்சி 5

[ஒரு திருடன் பாடிக்கொண்டே வருகிறான்.]

**தில்லாலக்கடி, தில்லாலக்கடி, தில்லாக் குயிலே**
**மயிலே தில்லாலக் குயிலே**
**கோட்டை கொத்தளம் குப்பைத் தொட்டி யாவும் தாண்டிடுவேன்,**
**ஆமாண்டா யாவும் தாண்டிடுவேன்.**

[தனக்குள், ஆனால் வெளிப்படையாக]

நானும் திருட வேண்டாம், திருட வேண்டாம் என்று தான் பார்த்தேன். ஆனால் பொழுது விடிந்தால் தீபாவளியாச்சே! குழந்தைகளுக்குப் பட்டாசு, புதுத் துணி முதலியவை வாங்கிக்கொண்டு போக வேண்டாமா! திருடுவது பாவம்தான். ஆனால் தீபாவளி சமயத்தில் குழந்தைகளுக்குப் பட்டாசு வாங்கிக் கொடுக்காமல் இருப்பது இதை விடப் பெரிய பாவமல்லவா? ஒரு நல்ல காரியத்திற்காக ஒரு கெட்ட காரியம் செய்யலாம் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே. அதை அநுசரித்து அதோ அங்கே தெரியும் வீட்டில் என்னுடைய குழந்தைகளுக்கு வேண்டிய பட்டாசும், புதுத் துணியும் திருடிக் கொண்டு போகிறேன்.

[போலீஸ்காரன் வருகிறான்.]

**போலீஸ்காரன்** :—அதோ ஒரு திருடன் பாடிக் கொண்டே வருகிறான் போலிருக்கிறது. இந்தப் பாட்டுப் பாடும் போது உண்டாகும் சந்தோஷத்தை உத்தேசித்தாவது திருடனைப் போய் விடலாம் போல் தோன்றுகிறதே! அவன் என்ன செய்கிறானென்று இந்த மரத்துக்குப் பின் புறம் ஒளிந்து கொண்டு பார்ப்போம்.

**திருடன்** :—இதுதான் சரியான வேளை. இதோ இந்த மரத்தின் மீதேறி மாடிக்குத் தாவுகிறேன்.

**போலீஸ்காரன்** :—யாரங்கே? நில். இந்த நள்ளிரவில் திருட புறப்பட்டது யார்?

**திருடன்** :—அண்ணே! நான்தான், திருடன். கோபித்துக் கொள்ளக் கூடாது. என் குழந்தைகளுக்குப் பட்டாசும், புதுத் துணிகளும் கொண்டு போய்க் கொடுப்பதற்காகத் திருடப் புறப்பட்டேன்.

**போலீஸ்காரன்** :—அட பாவி! நீ இத்தனை நேரம் என்ன பாவம் செய்ய இருந்தாய்? திருடினால் நரகத்தில் விழுந்து கஷ்டப்படவேண்டும் என்று தெரிகிலையோ, மூடா! நமது பெரியவர்கள் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்பதை அறிகிலையோ அறிவிலீ! உனக்குப் பட்டாசும், புதுத் துணிகளும் வேண்டுமென்றால் பகவானைப் பிரார்த்தனை செய்வது தானே? வா, என்னுடன். உனக்கு பகவானைப் பிரார்த்தனை செய்வதற்குச் சொல்லிக் கொடுக்கிறேன். வீணைகத் திருட்டுத் தொழில் செய்து பாவத்திற்கு ஆளாகாதே. [இருவரும் பாடுகிறார்கள்.]

ரகுபதி ராகவ ராஜாராம்.
பட்டாசு கொஞ்சம் தருவாராம்,
ரகுபதி ராகவராஜாரா......ம்
வேஷ்டியும் புடவையும் கொடுப்பாராம் (ரகுபதி)

## காட்சி 6

[புருஷனும், மனேவியும். மனேவி மூலே முடுக்குகளில் எதையோ தேடிக் கொண்டிருக்கிருள். புருஷன் வருகிருன்.]

புருஷன் :—கண்ணே! எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. சற்று அன்னம் போடுவாயா? ஹா! கண்கள் சோருகின்றனவே! மயக்கம் வருகிறதே!

[பாடுகிருன்]

(உத்தியோகப் பட்டமெல்லாம் என்ற மெட்டு.)

பசியால் உடல் மெலிந்தேன் கண்ணே
ருசியாய் அமு தளிப்பாயே ...
அரைக்கணமும் பொறுக்க மாட்டேன்
அன்னமே சொன்னேன்.

மனேவி :—நாதா! இதோ தங்கள் பசியை யாற்றுவேன்! தங்களுக்கு இல்லாத அன்னமா?

[பாடுகிருள்]

கறியிருக்கு குழம் பிருக்கு
எந்தன் காந்தனே .........
கவலே யின்றிப் புசித்து நீரும்
களிப்புறு வீரே!

புருஷன் :—(பாடுகிருன்)

குழம்பும் கறியும் இருந்த தாலும்
சாதம் வேண்டாமோ.........
சாதம் என்ன ஆச்சு தென்று
சொல்லுவாய் பெண்ணே.

(பசியால்)

**மனைவி** :—ஹா! என்ன சொன்னீர்கள்! சாதமா! ஹே! ஜகதீசா! நான் என்ன பண்ணுவேன்? ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாய்? குழம்பும் கறியும் பண்ணினவள் இன்னும் சாதம் சமைக்கவில்லையே! நான் என்ன பண்ணுவேன்! நாதா, என்னைச் சற்று இப்படித் திரும்பிப் பாருங்கள். (பக்கத்தில் போய் அவன் தலையைத் திருப்புகிறாள்.) பசியால் மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள் போலத் தோன்றுகிறது. டிபன் சாப்பிட்டு அரை மணி நேரத்துக்கு மேலாகி விட்டதே. களைப்பா யிருக்காதா? நான் இப்பொழுது தான் ஐந்து நிமிஷத்துக்கு முன்னால் காப்பி குடித்தேன். எனக்கே களைப்பாயிருக்கிறது. பாட முடியவில்லை.

**புருஷன்** :—ஹா! என் கண்மணி! என்ன சொன்னாய்? இன்னும் சாதம் சமைக்கவில்லையா!

**மனைவி** :—நாதா! நான் என்னத்தைச் சொல்லப்போகிறேன்? இப்பொழுது தான் குழம்பும், கறியும் பண்ணினேன். இன்னும் சாதம் சமைக்கவில்லை. அரிசி வைத்த இடம் ஞாபகத்தில் இல்லை, அதைத்தான் இப்பொழுது தேடிக் கொண்டிருந்தேன். தாங்களும் வந்தீர்கள்.

புருஷன் :—ஹா! தேடிக் கொண்டிருக்கிருயா? எனக்கு மூச்சுப் போய் விடும் போல் இருக்கிறதே!

மனைவி :—நாதா! நான் என்ன செய்யப்போகிறேன்! ஹே! ஜகதீசா! நீ தான் எனக்கு இந்த ஆபத்து சமயத்தில் வந்து உதவி புரியவேண்டும்.

*அந்த மிகுந்த முகுந்தன் மருகனே வா வா*
*நீ வா வா நீவா....... வா*
*குழம்பும் கறியும் பண்ணி வைத்தேன் சாதம் சமைக்க வா வா*
*நீவா வா நீவா...... வா. (அந்த)*

தொகையரு

*இந்தா உன் அரிசி என்று எடுத்துக் கொடுப்பாய் ஐயா*
*அரனுக்கு உபதேசித்தவா.......*
*அடியாள் புகழ் சென்னைமா நகர் கந்தனே சிவன் மைந்தனே*
*நீ வா வா.....நீவா ....வா (அந்த மிகுந்த)*

[பாடுகிருன்.]

ஹே! அனாத ரட்சகா, ஆபத் பாந்தவா, நீ தான் இந்த சமயத்தில் என்னை ஆதரிக்க வேண்டும்.

[இந்த சமயத்தில் வாசலில் ஒரு பிச்சைக்காரன் குரல் கேட்கிறது.]

பிச்சைக்காரன் :— அம்மா தாயே! இரண்டு நாளாய்ப் பட்டினி. மத்தியானச் சோறு ஏதாவது இருந்தால் போடுங்களேன், தாயே!

மனைவி :—ஹா! இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. பகவான் தான் இவ்வேழையின் அபயக்

குரலைக் கேட்டு இப்பிச்சைக்காரன் ரூபத்தில் வந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. நாதா! கவலைப் படாதீர்கள். மத்தியானச் சாதம் பாக்கியிருப்பது இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வந்தது. அதைப் போடுகிறேன், சாப்பிடுங்கள். அதற்குள் பகவான் நான் அரிசி வைத்த இடத்தைக் காட்ட மாட்டாரா?

**புருஷன் :—**என் பிரியே! உன் தெய்வபக்திக்கு மெச்சினேன். நீ மாத்திரம் பகவானைத் துதித்து, உனக்கு மத்தியானச் சாப்பாடு ஞாபகம் வராவிட்டால் நான் இத்தனை நேரம் யமலோகத்தில் தான் இருந்திருப்பேன். எல்லாம் பகவான் செயல். அந்த பகவான் நாமத்தைத் துதிப்போம் வா!

**இருவரும் :—**(பாடுகிறார்கள்)

## காட்சி 7

[கோர்ட்டு நியாயாதிபதி, வாதி, பிரதி வாதி, வக்கீல்கள், சேவகன் எல்லாரும் கோர்ட்டில் இருக்கின்றனர்.]

**நியாயாதிபதி :—** சேவகா! இன்று ஏதேனும் கேசுகள் உண்டா?

**சேவகன் :—**உண்டு சாமி! யாரோ இரண்டு பேர் வந்திருக்கிறார்கள்.

**நியாயாதிபதி :—**அப்படியா! அவர்களை வரச் சொல்.

[இரண்டு பிராமணர்கள் வருகிறார்கள்.]

பிராமணோத்தமர்களே, ஆசனத்தில் அமருங்

கள். வழக்கைத் தொடுப்பதற்கு முன் கடவுள் வணக்கம் செய்வோம்.

[பாடுகிறார்கள்]

*அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்......*

நியா :—வாதியவர்களே! தாங்கள் இனிமேல் தங்கள் கேஸை ஆரம்பிக்கலாம்.

வாதி :—நியாயாதிபதியவர்களே! இதோ இருக்கும் பிரதிவாதி என்னிடம் நூறு ரூபாய் கடனுக வாங்கிக்கொண்டார். அதை இப்பொழுது திருப்பிக் கொடு என்று கேட்டால் கொடுத்துவிட்டேன் என்கிறார்.

நியா :—சரி. இதோ நிற்கும் பிரதிவாதியவர்கள் இதோ நிற்கும் வாதியாகிய தங்களிடம் நூறு ரூபாய் கடனுக வாங்கிக்கொண்டார். இப்பொழுது திருப்பிக் கேட்டதற்குக் கொடுத்துவிட்டேன் என்று சொல்கிறார். இதுதானே தங்கள் வழக்கு?

வாதி :—ஆமாம் ஆமாம்.

நியா :—தாங்கள் பணம் கொடுத்ததற்கு ஏதேனும் அத்தாட்சி இருக்கிறதா ?

வாதி :—பகவான் தான் அத்தாட்சி.

பிரதி :—இல்லே, நான் இருக்கிறேன், அத்தாட்சி. அவர் பணம் கொடுத்தது வாஸ்தவம் தான்.

நியா :—அப்படியானல் அதைத் திருப்பிக் கொடுக்கத் தங்களுக்கு ஆட்சேபம் ஏனே?

பிரதி :—தர்ம துரை யவர்களே! ஆட்சேபம் தான். ஏனெனில் நான் ஏற்கெனவேயே அதைத் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

நியா :—நான் இந்த தர்ம சங்கடத்துக்கு என்ன பண்ணுவேன்? வாதி கொடுக்கவில்லை என்கிறார். பிரதி வாதியோ கொடுத்து விட்டேன் என்கிறார்! நான் என்ன பண்ணுவேன்! ஜகதீசா! நீ தான் இந்த வழக்கைத் தீர்த்து வைப்பதற்கு எனக்கு ஒரு வழி சொல்ல வேண்டும். வக்கீல்களே! இந்த வழக்கைத் தீர்ப்பதற்கு ஏதாவது வழி உண்டா?

வக்கீல்கள் :—தரும துரையவர்களே! பகவானிடம் முறையிட்டுக் கொள்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?

நியா :—சரி அப்படியே. இதோ வேண்டிக் கொள்கிறேன்.

[பாடுகிறார்]

**ஆண்டிப் பண்டாரம் உன்னை வேண்டிக் கொண்டேனே**
**—பழனி**
**ஆண்டிப் பண்டாரம் உன்னை வேண்டிக் கொண்டேனே**
**வாதி தான் கொடுத்த பணம்பிரதிவாதி கொடுத்திட்டாரோ**
**கொடுக்காமல் தான் அவரும் பேசாமல் இருந்திட்டாரோ,**
**(ஆண்டி)**

வாதி, பிரதி வாதிகளே! நான் தெய்வத்தை ராகம் போட்டுப் பாடிப் பிரார்த்தித்தும் அவர் இன்னும் பிரத்தியட்சமாகாமல் இருக்கிறார். ஒரு வேளை அவர் வேறு கோர்ட்டில் ஆஜராகி யிருக்கிறாரோ,

என்னமோ? இன்று இரவு நான் என் அப்பன் சந்நிதானத்தில் போய் முறையிடப் போகிறேன். நாளைக் காலை நீங்கள் இருவரும் இங்கு வாருங்கள். என் அப்பன் என்ன சொல்லுகிறானோ, அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

[பாடுகிறார்].

**ரகுபதி ராகவ ராஜாராம்!**
**வழக்கைத் தீர்த்துக் கொடுப்பாராம்!**
**ரகுபதி ராகவ ராஜாராம்!**
**வழக்கே இல்லாமல் செய்வாராம்.** (ரகுபதி)

# அப்பா ஆபீசுக்குப் போகிறார்!

[இந்தக் காலத்துப் பசங்களே மிகவும் பொல்லாதவர்கள், ஸார்! நம்ப மூத்த பையன் இருக்கிறனே, அவனுக்கு வயது பதிமூன்றுதான் ஆகிறது. ஆனால் அவனுக்கு இருக்கும் கொழுப்பைப் பாருங்களேன்! நான் ஆபீசுக்குப் போவதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறன்!]

எங்க அப்பா ஆபீசுக்குப் போவதே ஒரு தனி அழகு. அவர் தினம் காலையில் எழுந்திருப்பது ஆறு மணி. ஆனால் காப்பி சாப்பிட ஏழு மணி ஆகிவிடும். இந்த ஒரு மணி நேரம் ஏதாவது காரியம் பண்ணுவார் என்று நினைக்கிறீர்களோ? அதுதான் கிடையாது. கூடத்துக்கும் சமையல் அறைக்கும் ஆயிரம் நடை நடப்பார்.

"என்னடி! காப்பி ஆயிடுத்தா, இல்லையா!" என்று அம்மாளை ஆயிரம் தடவை கேட்பார். அம்மாளும், "என்ன, இறக்கை கட்டிண்டு பறக்கிறேளே! போட்டுத்தானே ஆகணும்?" என்று ஆயிரம் தடவை பதில் அளிப்பாள்.

கடைசியாக, ஒரு வழியாக, ஏழு மணிக்குக் காப்பி வந்ததும், அதைக் குடித்து விட்டுத் திண்ணைக்குப் போய் விடுவார். வெற்றிலை, பாக்கு, புகையிலை சகிதம் பத்திரிகை படிக்கத்தொடங்குவார்.

இவர் பத்திரிகை படிக்க ஆரம்பிக்க வேண்டியது தான் தாமதம், அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் வந்து விடுவார். உடனே ஊர் வம்பு ஆரம்பித்து விடும். இரண்டு பேரும் பேசுவார்கள், பேசு சுவார்கள், அப்படிப் பேசுவார்கள், எட்டரை மணி வரைக்கும். இதற்குள் அம்மா என்னை அப்பா விடம் பத்துப் பதினைந்து தடவைக்கு மேலேயே தூது அனுப்பி விடுவாள்.

"வெந்நீர் போட்டு ஆறுகிறது; குளிக்க வரச் சொல்லு. மார்க்கட்டுக்குப் போய் ஏதாவது கறி காய் வாங்கிக்கொண்டு வரச் சொல்லு."

இதுதான் அப்பாவுக்கு அம்மா சொல்லி யனுப்பும் சமாசாரம், ஆனால் அப்பா ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாமல் என் மேல் சீறி விழுவார். "போடா! உன் வேலையைப் பாரடா. ஏதாவது புஸ்தகத்தை எடுத்துப் படிடா!" என்பார்.

அடுத்தபடியாக அம்மா என் பத்து வயது தங்கை லட்சுமியை அனுப்புவாள். அப்பா, "போடி உள்ளே, பொம்மனாட்டியாய் லட்சணமாய்" என்று சொன்னதும் அவள் அழுது கொண்டே உள்ளே திரும்பி விடுவாள்

என் கடைசி தங்கை பேபி தான் பாக்கி. ஆனால் அம்மா அவளை அனுப்ப மாட்டாள். "பேபி! உங்கப்பா என்னடி பண்ணுகிறார் வாசலில்! வெந்நீர் ஆறிப் போகிறதேடி! மார்க்கட்டுக்குப் போய், கறிகாய் வாங்கிக் கொண்டு வரவேண்டாமாடி?"

என்று அப்பா காதில் படும்படியாகக் கத்துவாள். ஆனால் அப்பா இதற்கெல்லாம் அசைந்து கொடுக்க மாட்டார்.

நல்ல வேளையாக இந்த சமயம் அண்ணாசாமி அய்யரின் மனைவி அடுத்த வீட்டிலிருந்து கத்துவது கேட்கும். "அம்பி! அப்பா எங்கேடா போய் விட்டார்! ஒரு கைக் குழந்தைக்காரி ஒண்டியாகத் திண்டாடுகிறாளே யென்று துளி கூடக் கிடையாது இந்தப் பிராமணனுக்கு. போயும் போயும் என்னை இங்கே கொண்டு வந்து தள்ளினாளே, எங்கம்மா!" என்று அந்த அம்மாள் கூச்சல் போடுவாள்.

அவ்வளவுதான். "இதோ வந்து விட்டேன்" என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுவார் அண்ணாசாமி அய்யர். அப்பாவும் வேறு வழியின்றி உள்ளே ஓடுவார்.

உள்ளே வந்ததும், அம்மாவை நாலு வசவு வைது விட்டு, பையை தூக்கிக் கொண்டு மார்க் கட்டுக்குக் கிளம்புவார். "வெந்நீர் ஆறிப்போகிறதே! குளிக்கிறதா யிருந்தால் குளித்து விட்டுப் போங்களேன்" என்று அம்மா சொல்வது அவர் காதில் விழாது.

**போய்** அரைமணி நேரங் கழித்து, அதாவது ஒன்பது மணிக்கு மார்க்கட்டிலிருந்து திரும்பி வருவார். ஆனால் உடனே உள்ளே வந்து கறிகாயைக் கொடுப்பார் என்கிறீர்களோ! அதுதான் கிடை

யாது. கறி காய்ப் பையைக் கையில் பிடித்துக் கொண்டே வாசலில் நிற்கும் அண்ணுசாமி அய்யரு டன் பேசிக் கொண்டே நிற்பார்.

"சமையலுக்கு நாழியாகி விட்டதேடா! இப் படிக் கறிகாயைக் கையில வைத்துக் கொண்டு நின்றால் நான் என்ன பண்ணுவது?" என்று அம்மா கதறுவாள்.

கடைசியில் நான் போய்க் கறிகாய்ப் பையை அப்பா கையிலிருந்து வாங்கிக் கொண்டு வருவேன். அம்மா வெகு ஆவலாக அதை என்னிடமிருந்து பிடுங்கி அப்பா என்ன வாங்கிக் கொண்டு வந்திருக் கிறார் என்று பார்ப்பாள். அதில் கட்டாயம் அம்மாளைத் திகைக்க வைக்கும்படியான காரியம் ஏதாவது இருக்கும். ஒன்று, அன்று அமாவாசையா யிருக்கும். அன்றைக்கு என்று வெங்காயமும் முள்ளங்கியும் வாங்கிக்கொண்டு வந்து நிற்பார். இல்லாவிடில் முதல் நாள் தான் கத்திரிக்காய் நாலு வீசை வாங்கிக் கொண்டு வந்திருப்பார். இன்றைக் கும் அதையே இரண்டு வீசை வாங்கிக் கொண்டு வந்து நிற்பார்.

கூடத்தில் உள்ள கடிகாரம் மணி பன்னி ரண்டு அடிக்கும். அதாவது சின்ன முள் ஒன்பதி லும், பெரிய முள் பன்னிரண்டிலும் இருக்கிறது என்று அர்த்தம். அதாவது அப்பொழுது மணி ஒன்பது அடித்துப் பத்து நிமிஷம்!

மணி சத்தம் கேட்டதும் அப்பா பரக்கப் பரக்க உள்ளே ஓடி வருவார்.

“என்னடி, சமையல், கிமையல் ஆச்சா, இல்லையா? தினம் உன்னால் லேட்டு.”

“என்னால் என்ன லேட்டு? காலம்பர எழுந்ததிலிருந்து அந்த அடுத்த வீட்டுப் பிராமணனோடு ஊர் வம்பு அளங்கோ. கடைசியில் என்னை விரட்டுங்கோ. .... ஆமா, அமாவாசையும் அதுவுமாய் இப்படி வெங்காயத்தை வாங்கிக் கொண்டு வந்து நிற்கிறேளே.......”

“சரிடி, சரி. உன் வாயை அடக்கு. வெந்நீர் எங்கே வைத்திருக்கே, வெந்நீர் எங்கே?”

“எல்லாம் முற்றத்தில்தான் இருக்கிறது.”

“சரி, சரி, என் துண்டு எங்கே?”

அவ்வளவுதான். துண்டுவேட்டை ஒரு கால் மணி நேரத்துக்கு நடக்கும். கடைசியில் பேபி அதைச் சித்தாடையாகக் கட்டிக் கொண்டிருப்பது தெரியும். அவளுக்கு இரண்டு பூசை விழும்.

**து**ண்டைக் கட்டிக்கொண்டு அப்பா குளிக்க ஆரம்பிப்பார். ஒரு சொம்பு ஜலம் விட்டுக் கொண்டதும், “இது என்ன ஜில்லென்று இருக்கிறது? ரொம்ப அழகா யிருக்கிறது. நீ வெந்நீர் போட்டு வைத்திருக்கும் லட்சணம்!” என்பார்.

“நான் என்ன பண்ணுவேன்? காலம்பர எட்டு மணிக்குப் போட்ட வெந்நீர் இன்னும் சூடா யிருக்

குமா, என்ன?'' என்று சமையல் அறையி லிருந்து பதில் வரும்.

அப்பா குளித்து முடிகிற சமயம் அம்மா வெளியில் வருவாள். அப்பாவைப் பார்த்து விட்டு, "அட ராமா!" என்று மூகவாய்க் கட்டையில் கையை வைப்பாள்.

"ஏன் இப்படிப் பச்சை தண்ணீரை அள்ளி, அள்ளிக் கொட்டிக்கிறேள்?"

"பச்சைத் தண்ணீரா? எல்லாம் நீ போட்டு வைத்திருக்கும் அழகு வெந்நீர்தான்!"

"நான் போட்டதுக்கு என்ன குறைச்சல்? நான் ஜோடு தவலையில் அல்லவா வெந்நீர் போட்டு வைத்திருந்தேன்? நீங்கள் வெந்நீர்த் தவலையில் உள்ள பச்சை ஜலத்தேனு அள்ளி அள்ளிக் கொட்டிக்கிறேள்?"

குளித்து விட்டுச் சாப்பிட உட்காருவார். மணி ஒன்பதரை ஆகியிருக்கும். குழம்பு ஊற்றுகிற போது, "இன்னொரு கல் உப்பு வேணும்" என்பார். அம்மா குழம்புக்கு ஒரு ஸ்பூன் உப்பைப் போட்டு விட்டு குழம்பைக் கலக்கி ஊற்றுவாள்.

"இது என்ன இப்படி உப்புக் கரிக்கிறது?"

"நீங்கள் தானே இப்பொழுது உப்பைப் போடச் சொன்னீர்கள்?"

"நான் எதற்கு உப்புப் போடச் சொன்னேன்?

கறிக்குன்னு உப்பு போடச் சொன்னேன்?" இந்த ரீதியில் சாப்பாடு நடக்கும்.

**சா**ப்பாடு முடிந்ததும் டிரஸ் பண்ணிக் கொள்ள ஆரம்பிப்பார். கட்டிக் கொள்வதற்காகப் பெட்டியி லிருந்து ஒரு வேஷ்டியை எடுப்பார். மடிப்பைப் பிரித்தால் வேஷ்டி நடுவில் கிழிந்திருக்கும். "இந்த வண்ணான், தடியன், எதைக் கண்டாலும் கிழித்து விடுகிறான். அவன் அடுத்த மாதச் சம்பளத்தைப் பிடித்து விடுகிறேன் பார்" என்று சொல்லிக் கொண்டே, அதைத் தூக்கி எறிந்துவிட்டு, இன்னொரு வேஷ்டியை எடுப்பார்.

"நீங்கள் வண்ணானுடைய இரண்டு மாதச் சம்பளத்தை வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளுங்கள். எனக்கு அக்கரையில்லை" என்று சொல்வது போல் அதுவும் கிழிந்திருக்கும். பெட்டியில் வேறு வேஷ்டியும் இருக்காது. முனகிக் கொண்டே முதல் வேஷ்டியையே கிழிசல் தெரியாமல் ஒரு விதமாகக் கட்டிக் கொள்வார். ஷர்ட்டையும், கோட்டையும் மாட்டிக் கொள்வார்.

"இந்தாடி, காப்பியும், டிபனும் எடுத்து வை. மணி ஒன்பதே முக்கால் ஆயிடுத்து."

"அதோ பையில் வைத்திருக்கிறேன். எடுத்துண்டு போங்கோ."

பையை எடுத்துக் கொண்டு வாசல் வரையில் ஓடுவார். அப்பொழுதுதான் அவருக்குப் பௌண்

டன் பேனா ஞாபகம் வரும். உடனே திரும்பி வந்து பேனாவை எடுத்துக் கொண்டு புறப்படுவார்.

“ஆமாம். தலைப்பாகையை எடுத்துக் கொள்ளாமல் போகிறீர்களே ?” என்பாள் அம்மா.

“ஆமாண்டி, ஆமா” என்று ஆணியில் மாட்டப் பட்டிருக்கும் தலைப்பாகையை எடுப்பார். இவர் இழுக்கும் வேகத்தில் அது அவிழ்ந்து போய்விடும்.

“பரவாயில்லை நான் ஆபீஸில் போய்க் கட்டிக் கொள்கிறேன்” என்று அதைத் தோளில் போட்டுக் கொண்டு ஓடுவார்.

**அ**ப்பா அந்தண்டை போனதும், இந்தண்டை அவர் என்னென்ன சாமான்கள் மறந்து வைத்து விட்டுப் போய் விட்டார் என்று கண்டு பிடிப்பது எங்கள் வேலை. நான் அவருடைய சட்டைப் பைகள், டிராயர், பீரோ எல்லாவற்றையும் குடைந்து பார்ப்பேன். அவருடைய மூக்குக் கண்ணாடி, டிராம் பாஸ், ஆபீஸ் சாவி, மணிபர்ஸ் முதலிய சாமான்கள் அகப்படும்.

இவற்றை எடுத்துக் கொண்டு அப்பாவிடம் கொடுப்பதற்காக நான் டிராம் ஸ்டாண்டிற்கு ஓடுவேன். நான் பத்தடி தூரம் போயிருப்பேன், அம்மா என்னைக் கூப்பிடுவாள். திரும்பி வந்து, என்ன வென்று விசாரிப்பேன்.

“அம்பி ! அப்பா காப்பியையும் டிபனையும் எடுத்துண்டு போகல்லேடா !”

" அதுதான் பை எடுத்துண்டு போனரே!"

"அது கறிகாய்ப் பையிடா!"

நானும் அம்மாவும் சிரிப்போம். பிறகு நான் எல்லாச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு ஓடுவேன். அதற்குள் அப்பா டிராம் ஏறி யிருப்பார்.

ஆனல் டிராம் வேகம்தான் உங்களுக்குத் தெரிந்தது ஆச்சே. ஆகையால் நடந்து போயே, அதைப் பிடித்து, அப்பாவிடம் சாமான்களை ஒப்புவித்து விட்டுக் கறிகாய்ப் பையைத் திரும்ப வாங்கிக் கொண்டு வருவேன்.

கடைசியில் நான் வீட்டுக்குத் திரும்பி வந்து பள்ளிக்கூடம் போகிற சமயமா யிருக்கும், அப்பா ஆபீஸிலிருந்து ஒரு பியூன் வந்து நிற்பான்.

" ஐயா ஆபீஸ் கட்டை மறந்து வச்சுட்டு வந்துட்டாங்களாம். வாங்கிக்கிணு வரச் சொன்னுங்க" என்பான்!

அப்பா ஆபீசுக்குப் போகிற லட்சணத்தைப் பார்த்தேளோ, இல்லையோ!

# காப்பிச் சண்டை

## காட்சி 1

[வெங்கட்ராமய்யரும், அவர் மனைவி சுந்தரியம்மாளும்.]

வெங்கட்ராமய்யர் :—நானும் பத்து நாளாய்ப் பார்க்கிறேன், ஒரு நாள் பார்த்தாற்போல் ஒரு நாள், தினம் இந்த மாதிரி காப்பியில் ஜலத்தைக் கொட்டி வைக்கிறாயே !

சுந்தரி :—நன்றாகத்தானே போட்டேன்.

வெங் :—நன்றாகப் போட்டாயா ? கழுநீர் கூடக் கொஞ்சம் நன்றா யிருக்கும்.

சுந்த :—அது என்னமோ? யார் கண்டா? கழுநீர் எப்படி யிருக்குமென்று நான் குடித்துப் பார்த்த தில்லை.

வெங் :—சீ ! கழுதை! என்ன அதிகப் பிரசங் கித்தனம்? நான் மாத்திரம் குடித்துப் பார்த்திருக் கிறேனா ?

சுந்த :—அது என்னமோ, யார் கண்டா ?

வெங் :—ஆமாம், நீ பேச மாட்டாயா ? இந்த மாதிரி பேசிப் பேசித்தான் துளிர் கண்டு விட்டாய் !

சுந்த :—ஆமாம். நான்தான் பேசுகிறேன் ! ஒவ்

வொருத்தர் அவா அகமுடையானிடம் பேசுகிற தைப் பார்த்தால் நீங்கள் மலைச்சு போயிடுவேள்.

வெங் :—என்ன இருந்தாலும் உன்னைப் போல் வாயாடிகளாய் ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

சுந்த :—நான் வாயாடிதான். ஏன், நல்லவளாய், வாயாடியா யில்லாமல் ஒருத்தியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறது தானே ?

வெங் :—உன்னைக் கட்டிக் கொண்டு நான் அவஸ்தைப் படுகிறது போதாதா ? இன்னொருத்தி வேறு வேண்டுமா ? ஏன் காப்பி தண்ணியா யிருக்கிறது என்று கேட்டால் இத்தனை வார்த்தையா ? அத்தனைக்கும் நான் ஒவ்வொருத்தனைப் போல் சாமான்கள் வாங்கிப் போடாமல் இருக்கிறேனா ? வீட்டில் காப்பிக் கொட்டை யில்லையா, சர்க்கரை யில்லையா, என்ன இல்லை ?

சுந்த :—ஆமாம். ரொம்ப வாங்கிப் போட்டு விட்டீர்கள் ! பத்து நாளாக வீட்டில் காப்பிப் பொடி இல்லை. பக்கத்து வீட்டில் இரவல் பொடியல்லவா வாங்கிக் கொண்டு வருகிறேன் ?

வெங் :—ஏன் இரவல் பொடி வாங்கவேண்டும் ? நான்தான் காப்பிக் கொட்டைக்காக நாலு ரூபாய் கொடுத்தேனே !

சுந்த :—அதைத்தான் நான் போன மாதம் கடன் கட்டாய்ப் புதுச்சேரிப் புடவை யொன்று

வாங்கினேனே, அதற்காகப் புடவைக் காரனுக்குக் கொடுத்து விட்டேனே!

வெங் :—புடவைக்காரனு! ஏது புடவை? எனக்கு ஒன்றும் சொல்ல வில்லையே!

சுந்த :—சொல்லாமல் என்ன! அதுதான் அன்றைக்கு நீங்கள் ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது சொன்னேனே?

வெங் :—நல்ல சமயம் பார்த்தாய் சொல்வதற்கு! இந்த மாதிரி எனக்குத் தெரியாமல் புடவையும், கிடவையும் வாங்குகிறது. கடைசியில் காப்பி பொடி கடன் வாங்கினேன், காப்பி தண்ணியாய்ப் போட்டேன் என்கிறது. இந்த இழவுக்கு இனிமேல் வீட்டிலேயே காப்பி போடவேண்டாம். நான் ஹோட்டலில் போய்ச் சாப்பிடுகிறேன்.

சுந்த :—ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அப்படியே வீட்டில் இருக்கிற எல்லாருக்குமே ஆளுக்கு ஒரு சேர் காப்பி வாங்கிக் கொடுத்து விட்டுப் போங்கோ. எனக்கும் வேலை லாபமாக இருக்கும்.

வெங் :—காப்பி சரியாக போடத் தெரியல்லை, நீ பேச மாட்டாயா?

சுந்த :—என்னமோ ஒரு நாளைக்குத் தண்ணியாகப் போய்விட்டதாக்கும்! அதற்கு இந்தச் சண்டையா? இத்தனை நாளாகச் சரியாகப் போடவில்லையா?

வெங் :—ஒரு நாளா? நானுந் தான் பார்க்கிறேன். பத்து நாளாக இந்த மாதிரிதான். அதுவும் அம்மா ஊரிலிருந்து வந்ததிலே யிருந்து இப்படி தான். அவளைக் கண்டால் உனக்கு ஆகுல் தானே! அவளை வீட்டை விட்டுத் துரத்துவதற்காகத் தான் இப்படித் தண்ணிக் காப்பியாய்ப் போடுகிறாய் போலிருக்கிறது?

சுந்த :—ரொம்ப அழகா யிருக்கிறது நீங்கள் சொல்லுகிறது! நானும் சொல்ல வேண்டாம், அம்மா கோபித்துக் கொள்ளுவாரே யென்று பார்த்தேன். பத்து நாளாய் நான் ஒன்றும் காப்பி போட வில்லை. அம்மா வந்ததிலே யிருந்து அவர்தான் போடுகிறார். கழுநீரோ, கிழுநீரோ, அவரையே கேளுங்கோ!

வெங் :—அட பரமசிவா! அப்பவே சொல்லக் கூடாதோ? நீயாக்கும் என்று நினைத்தல்லவா இத்தனை நாழி கோபித்துக் கொண்டேன்?

சுந்த :—ஆமாம் நீங்கள் இதற்குத்தான் கோபித்துக் கொள்ளுகிறீர்களா? எதற்கெடுத்தாலும் தான் கோபித்துக் கொள்ளுகிறீர்கள். பிறத்தியார் குற்றத்துக்கெல்லாம் நான் வார்த்தை வாங்க வேண்டியிருக்கிறது.

[அழுகிறாள்]

வெங் :—சரி, அழாதே போ. ஆமாம், புடவைக்காரனுக்கு எத்தனை பாக்கி?

சுந்த :—பத்து ரூபாய்.

வெங்:—சரி, இந்தா. அவன் கடன் எதற்கு? இந்தப் பத்து ரூபாயை அவனிடம் கொடு. அம்மா காதில் பட்டு அவள் எங்கேயாவது சண்டைக்கு வந்துவிடப் போகிறாள். நீ பேசாமல் போ.

[சுந்தரியம்மாள் உள்ளே போகிறாள்.]

## காட்சி 2

[வெங்கட்ராமய்யரும் அவருடைய தாயாரும்]

தாயார் :—என்னடாப்பா! நானும் இரண்டு நாழியாய்ப் பார்க்கிறேன், என்னமோ பொறி, பொறி யென்று பொறிந்து கொண்டிருக்கிறாயே, என்ன சமாசாரம்?

வெங் :—என்ன சமாசாரமா? இதோ போட்டிருக்கிறாயே காப்பி, அந்த அழகு காப்பியைப் பற்றித்தான். இதைச் சாப்பிடுவதற்கு, வெறும் வெந்நீரைச் சாப்பிட்டு விட்டுப் போகலாமே.

தாயார் :—வெந்நீராடாப்பா அது? என்னமோ உன் அகமுடையாள் கைக் குழந்தையை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறாளே யென்று பத்து நாளாய் நான் தினம் அடுப்பை மூட்டிப் போட்டுக் கொடுத்தால் உனக்குக் கஷ்டமாய்த்தா னிருக்கும்.

வெங் :—போட்டால் சரியாகப்போட வேண்டாமென்று சொல்லி யிருக்கிறதா? இந்த மாதிரி

ஜலத்தைக் கொடுப்பதற்குக் கொடுக்காமலேயே இருக்கலாமே ?

**தாயார் :**—ஆமாண்டாப்பா ! எல்லாம் அகமுடையாள் போட்டாள் அமிர்தமாய்த்தானிருக்கும், நான் ஏதாவது பண்ணினுல் உனக்கு நன்ருயிருக்காதுதான். நாலு நாளாய்ச் சோறு துளிகூட வேண்டியிருக்கவில்லை. எதிலே கண்டாலும் உப்பை ஒரு கலம் அள்ளிக் கொட்டி விடுகிருள். அதுக்கெல்லாம் நீ ஏதாவது சொல்லுகிருயா ?

**வெங் :**—எதுக்கு எதை இழுக்கிருய், அம்மா ? நான்தான் உங்கள் சமையல் பேச்சுக்கே வருவதில்லையென்று சொல்லி விட்டேனே. ஏதோ ஒரு புருஷன் இடுப் பொடிய ஆபீஸில் வேலை செய்துவிட்டு வருகிருனே, அவனுக்கு நன்ருகச் சமைத்துப் போட வேண்டாமா என்று இருந்தால்தானே ? பத்து நாளாக நீ சமைக்கிருயா, அல்லது அவள் சமைக்கிருளா எனறு தெரியவில்லை. நான் ஏதாவது சமையல் நன்ருயில்லை யென்று கோளாறு சொன்னுல் அன்றைக்கு என்று நீ பண்ணின சமையலாய்ப் போய் விடுகிறது. நீ பொலு பொலு என்று சண்டைக்கு வந்து விடுகிருய்.

**தாயார் :**—ஆமாம். நான் சண்டைக்காரிதான், நான் எது செய்தாலும் என் கை நிறக்காது. உம்.... உன்னைச் சொல்வானேன் ? என்னைக் கண்டால் பிடிக்கவில்லை யென்ருல் சொல்லேன். நான் வேணுமானுல் ஊருக்குப் போய் விடுகிறேன்.

வெங் :—என்னம்மா! நான் ஒன்று சொன்னல் நீ ஒன்று சொல்லுகிருய்? ஏம்மா இப்படிக் காப்பியைத் தண்ணியாய்ப் போட்டிருக்கிருய் என்ருல்....

தாயார் :—காப்பியா! அட பாவிப் பிள்ளை! நான் காப்பிப் பொடி இல்லேன்னு இன்னிக்கு டீன்னு போட்டுக் கொடுத்தேன்! டீக்கும் காப்பிக்கும் வித்தியாசம் தெரியாதவனுக்குத் தான இத்தனை வாய்?

வெங் :—என்ன!.......என்ன!.......டீயா........?

[ வெங்கட்ராமய்யர் மூர்ச்சையாகிருர். ]

# ஐயா, அடுத்த வீட்டுக்காரரே!

ஐயா, அடுத்த வீட்டுக்காரரே! நான் கோடம் பாக்கத்தில், தங்கள் பக்கத்து வீட்டுக்குக் குடி வந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகப் போகின்றன. ஆனல் தாங்கள் என்னுடன் இன்னும் ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லை. இத்தனைக்கும் தாங்கள் காலையில் ஆபீஸுக்குச் செல்வதற்காகப் பிடிக்க ஓடும் 9-27 வண்டியைப் பிடிப்பதற்காகத் தான் நானும் ஓடுகிறேன். தங்களுக்கு 'டிமிக்கி' கொடுப்பதுபோல் தான் அந்த வண்டி எனக்கும் 'டிமிக்கி' கொடுக்கிறது. பிறகு அடுத்தபடியாக வரும் 9-32 வண்டியில் தாங்கள் பிடித்துக் கொண்டு பிரயாணம் செய்யும் கம்பத்தைப் பிடித்துக் கொண்டுதான் நானும் பிரயாணம் செய்கிறேன். சாயந்திரமும் தாங்கள் திரும்பி வரும் 5-21 வண்டியில் தான் நானும் வீடு திரும்புகிறேன்.

ஐயா, ரயிலில் வேண்டாம், தினம் காலையில் எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்று கதறும் பிச்சைக்காரனை, உங்கள் வீட்டு வாசலில் நின்று கதறுவதாக நினைத்துக் கொண்டு, விரட்டுவதற்காகக் குச்சியும் கையுமாகத் திண்ணைக்கு ஓடி வருகிறீர்களே, அப்பொழுதாவது பேசக் கூடாதா?

இல்லை, கொல்லையில் நான் வாழை இலை நறுக்கும் போதெல்லாம், எங்கே தங்கள் மரத்தில் நறுக்கி விடப் போகிறேனே என்று பார்ப்பதற்காக, கொல்லைப் பக்கம் ஓடி வருகிறீர்களே, அப்பொழுதாவது பேசக் கூடாதா?

**பே**சினல் தங்கள் சமாசாரம் எல்லாம் எனக்குத் தெரிந்துவிடும் என்ற காரணங் கொண்டு தாங்கள் பேசாமல் இருப்பதாகத் தெரிகிறது. நான் தங்களைப் பற்றி மிக மதிப்பாக எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமென்பது தங்கள் எண்ணம். இல்லையா? பாவம், தங்கள் நடத்தைக்கு இதுதான் காரணம் என்ருல், எனக்குத் தங்களைக் கண்டு பரிதாபப் படவே தோன்றுகிறது. ஏனெனில், தங்கள் காரியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும், ஐயா, தெரியும்! நான் குடி வந்த புதிதிலேயே தெரியும்!

தங்களுக்கு 200, அல்லது 300 சம்பளம் என்று நான் நினைத்துக் கொள்ள வேண்டும் என்பது தங்கள் எண்ணம். அன்றைக்கு ரயிலில் கூட என் காதில் விழும்படியாக, பக்கத்தில் இருந்தவரிடம் தங்களுக்கு 200 ரூபா சம்பளம் என்று சொல்லிக் கொண்டீர்கள். ஆனல் அதைக் கேட்டபோது எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. தங்களுக்கு சம்பளம் 57 தான் என்பதும், மாமனரிட மிருந்து மாதம் 50 ரூபாய் சம்பளம் வருகிற தென்பதும் எனக்குத் தெரியும். நடுவில் மாமனர் தாம் அனுப்ப

வேண்டிய சம்பளத்தை அனுப்பாமல் போகவே, தாங்கள் கோபித்துக் கொண்டு தங்கள் மனைவியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிய விஷயமும் எனக்குத் தெரியும்.

தங்கள் காரியாலயத்தில் தாங்கள் ஏதோ மேலதிகாரி என்று நான் நினைத்துக் கொள்ள வேண்டு மென்பது தங்கள் எண்ணம். ஆனல் தாங்கள் குமாஸ்தாதான், அதுவும் மேலதிகாரிகள் மிகவும் அதிருப்தி கொண்டுள்ள குமாஸ்தா என்பது எனக்குத் தெரியாதா, என்ன ? இது வரை நான்கு தடவை தங்களை வேலையை விட்டு நீக்க உங்கள் காரியாலயத்தில் பிரயத்தனம் செய்தார்கள் என்பதும், ஒவ்வொரு தடவையும் தங்கள் மாமனர் வந்து மேலதிகாரிகளுக்கு வாக்கரிசி அழுதார் என்பதும் எனக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண் டீர்களா, என்ன ?

இது போகட்டும், தங்களுக்குப் பிடித்த கறிகாய்கள் என்னென்ன, பிடிக்காத கறிகாய்கள் என்னென்ன வென்று சொல்லட்டுமா ? சொன்னல் தாங்களே திகைத்துப் போய் விடுவீர்கள். இல்லை, தங்கள் கல்யாண சமயத்தில் நடந்த சண்டை, சச்சரவுகள் என்னென்ன என்று தங்களுக்கு ஞாபக மூட்டட்டுமா ? நாலாம் நாள் கல்யாணத் தன்று பெண்ணுடன் பேச விடவில்லை என்று கோபித்துக் கொண்டு பிள்ளையார் கோவிலில்

போய்ப் படுத்துத் தூங்கிய சமாசாரம் எனக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டீர்களா, என்ன ?

நீங்கள் அண்ணன் தம்பிகள் எத்தனை பேர், ஒவ்வொருவருக்கும் எங்கெங்கே வேலை, உங்கள் தங்கையை எங்கே கொடுத்திருக்கிறீர்கள், அவளுக்கு எத்தனை குழந்தைகள் என்றெல்லாம் தகவல் வேண்டுமா ? இதோ சொல்லத் தயாரா யிருக்கிறேன்.

இவ்வளவு தூரம் போவானேன், தாங்கள் வீட்டில் என்றென்றைக்கு கடு கடு என்று விழுந்தீர்கள், என்றென்றைக்குச் சுமுகமாக இருந்தீர்கள் என்று சொல்லட்டுமா ?

**எ**ன்னடா, இவனுக்கு இத்தனை விவரங்கள் எப்படித் தெரிந்தது, பெரிய துப்பறியும் நிபுணரான ஷெர்லாக் ஹோம்ஸ் கூடத் தோற்றுப் போய் விடுவார் போலிருக்கிறதே என்று தங்களுக்குத் தோன்றலாம். ஆனல்,ஷெர்லாக் ஹோம்ஸ் துப்பு விவரிப்பதுபோல் நானும் துப்பு விவரிக்க ஆரம்பித்தால், “ பூ ! இவ்வளவுதானு !” என்பீர்கள்.

ஐயா, நாமிருவரும் தான் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வில்லையானுலும் என் மனைவியும், உங்கள் மனைவியும் சந்தித்துப்பேசுகிருர்கள் என்கிற விஷயம் ஞாபகமிருக்கட்டும். இது தெரிந்தும் தங்கள் வண்டவாளம் எல்லாம் எனக்குத் தெரியவராது என்று தாங்கள் எப்படி நினைத்தீர்கள் ?

அவை உங்கள் மனைவியிடமிருந்து என் மனைவிக்கும், அவளிடமிருந்து எனக்கும் வந்து சேர்ந்து கொண்டிருக்கும் என்று ஏன் தாங்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை ?

இதைப்போல் என் சமாசாரமும் தங்களுக்குப் போய்க் கொண்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஏன், இந்தக் கட்டுரை நான் எழுதிக் கொண்டிருக்கும் விஷயம் இதற்குள் தங்களுக்குப் போய்ச் சேர்ந்திருந்தாலும் நான் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இப்படிக்கு,

**தங்களைக் கண்டு பேச ஆவலாக இருக்கும்**

**தங்கள் அடுத்த வீட்டுக்காரர் "நாடோடி"**

# கடவுளுக்குக் கண் இல்லையா ?

## காட்சி 1.

[வைகுந்தத்தில் ஸ்ரீ மகா விஷ்ணுவும் திரிலோக சஞ்சாரியான நாரதரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

**நாரதர்** :—நான் பூலோகத்துக்குச் சென்றிருந்த போது ஜனங்கள் எல்லாரும் தங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள் ........

**மகா விஷ்ணு** :—என்ன, என்னைப் பற்றியா ? பூலோகத்து ஜனங்களுக்கு என் ஞாபகம் இன்னுமா இருக்கிறது ?

**நார** :—என்ன போங்கள் ! அதை ஞாபகம் என்றே சொல்லிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. தங்களைத் தூஷிக்க அல்லவா செய்கிறார்கள் ? போன இடத்தில் எல்லாம் ஜனங்கள், " கடவுளுக்குக் கண் இல்லையா ? கடவுளுக்குக் கண் இல்லையா? " என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

**மகா** :—சரி. அதற்காக என்ன ?

**நார** :—நான் இப்பொழுது என்னுடன் கூடக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறேனே அந்த மானிடன்........

**மகா** :—என்ன, மானிடனைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீரா !

நார :—ஆம். அவனும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தான். அதற்காக, தங்களிடம் வந்தால் தாங்கள் தக்க பதில் சொல்லி அனுப்புவீர்கள் என்று நினைத்து அவனை இங்கு அழைத்து வந்தேன்.

மகா :—அட நாராயணா !

[சோர்ந்து போய் பெருமூச்செறிகிறார்.]

நார :—நாங்கள் தான் செய்வது இன்னதென்று தெரியாமல் விழிக்கும்போது தங்கள் நாமத்தை உச்சரிக்கிறோம். தாங்களும் ‘நாராயணா’ என்று தங்கள் பெயரையே சொல்லிக் கொண்டால்?

மகா :—என்ன நாரதரே! என்னைப் பெரிய சங்கடத்தில் மாட்டி வைத்து விட்டு, ஒன்றும் தெரியாதவர் போல் நடிக்கிறீரே! உலகில் நடக்கும் காரியங்களுக் கெல்லாம் நான் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? இல்லை, அப்படிச் சொன்னால்தான் இவனுக்குப் புரியப் போகிறதா?

நார :—அது என்னமோ உங்கள் பாடு, அவன் பாடு !

மகா :—சரி, அவனை இங்கு அழைத்துக் கொண்டு வாரும்.

## காட்சி 2.

[ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மாயையால் வைகுந்தத்தில் ‘ஆபீஸ்’ அறை ஒன்று உண்டாகி விட்டது. அதில் மகாவிஷ்ணுவின் அந்தரங்கக் காரிய தரிசியான ஸ்ரீ கணேசர் ஒரு மேஜை

யின் முன்னால் உட்கார்ந்து ஏதோ சில கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், ஒரு மூலையில் மறைவாக நாரதரும் பூலோகத்தி லிருந்து வந்த மானிடனும் உட்கார்ந்து அங்கே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.]

**கணேசர்** (மிகவும் சலிப்பாக) :—நல்ல வேலை! நல்ல உத்தியோகம்! ஏதோ ஒரு மாதம் லீவ் எடுத்துக் கொண்டோம், அக்கடா என்று இருந்தோம் என்று கிடையாது. தினம் இந்தக் கடிதங்களைப் படிக்கிறதும், அவற்றை மகா விஷ்ணுவிடம் காட்டுகிறதும், இதே பிழைப்பாய்ப் போய்விட்டது. நாம் பாட்டில் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டோம், சிவனே யென்று மாமனார் வீட்டில் இருந்தோம் என்று இல்லை. என்ன ஜன்மம்! என்ன ஜன்மம்!

[பெருமூச்சு விடுகிறார். மகாவிஷ்ணு வருகிறார்.]

**மகா** :—என்ன கணேசரே! இன்றைக்குச் சட்டுப் புட்டுன்னு எல்லாம் ஆகணும்! எனக்கு வெளியில் கொஞ்சம் வேலை யிருக்கிறது. இன்றைக்குப் பார்வதி தேவி பங்களாவில் ஏதோ ஒரு 'டீ பார்ட்டி' யாம். அதற்குத் தேவலோக ஸ்தீரிகளெல்லாரும் போகிறார்களாம். தானும் போகத்தான் வேண்டும் என்று லக்ஷ்மி பிடிவாதம் பிடிக்கிறாள். ஆகவே அவளை நான் அங்கே அழைத்துச் செல்ல வேண்டும்.

**கணே** :—சரி, அப்படியே!

மகா :—அது என்ன, ஒரே குவியல் குவியலாய்க் கடிதங்கள் சேர்ந்து விட்டன! சரி, நேற்று சாயந்திரம் நான் எந்த 'பைல்' (file) பார்த்துக் கொண்டிருந்தேன்?

கணே :—மூலா நட்சத்திர மண்டலத்தைப் பற்றிய 'பைலை'ப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்.

மகா :—ஆம், அதை அழிப்பதற்கான ஏற்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக நடக்கட்டும் என்று உத்தரவு இட்டேனே! ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டீரா?

கணே :—எடுத்துக் கொண்டேன். அங்கு யுத்தம் மூளும்படி செய்திருக்கிறேன்.

மகா :—யுத்தத்தில் நல்லவர் கெட்டவர் என்று யாரையும் வித்தியாசம் பார்க்க வேண்டாம். எல்லாரும் மடிய வேண்டியது தான், தெரிந்ததா?

கணே :—அப்படியேதான் உத்தரவு கொடுத்திருக்கிறேன்.

மகா :—அங்குள்ள ஜீவ கோடிகள் இதைப் பற்றி என்ன சொல்லிக் கொள்ளுகிறார்கள்? இப்படி வித்தியாசம் பாராமல் எல்லாரையும் கொல்லுகிறேனே என்று என்னைத் தூஷிக்கிறார்களா?

கணே :—அப்படி யொன்று மில்லை.

மகா :—அப்படி யொன்று மில்லையா? பின் எங்கிருந்து இப்படி ஏகப்பட்ட மனுக்கள் வந்து குவிந்திருக்கின்றன? அதோ உம் வலது கை யண்டை

கோபுரம் போல மனுக்கள் இருக்கின்றனவே, அவை எங்கிருந்து வந்தவை ?

கணே :—பூலோகத்திலிருந்து.

மகா :—பூலோகமா ! ........அது எங்கிருக்கிறது, பூலோகம் ? அது நான் கேள்விப்பட்ட உலகமாகவே இல்லையே! அது எந்த மண்டலத்தைச் சேர்ந்தது ?

கணே :—சூரிய மண்டலத்தைச் சேர்ந்த பூலோகம்தான்.

மகா :—சூரிய மண்டலமா ! ........(யோசிக்கிறார்)

கணே :—தாங்கள் கூட அங்கே சில அவதாரங்கள் எடுத்தீர்களே, ஞாபகமில்லையா ?

[மகாவிஷ்ணு துள்ளிக் குதிக்கிறார்.]

மகா :—ஓ ! அதுவா ? இப்பொழுது தான் ஞாபகம் வருகிறது, அது என்ன, இன்னுமா இருக்கிறது ? அதை நான் அழித்து விட்டதாக வல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறேன் !

கணே :—தாங்கள் அதை அழிக்க வில்லை. ஆனால் அந்தச் சிரமத்தைக் கூட அவர்கள் தங்களுக்கு வைக்க மாட்டார்கள் என்று தோன்றுகிறது. அங்கே எப்பொழுது பார்த்தாலும் சண்டையும் பூசலும் தான்.

மகா:—எப்படியாவது தொலைந்து போகிறார்கள். அதோ பக்கத்தில் ஒரு குவியல் இருக்கிறதே, அது எங்கிருந்து ?

கணே :—பூலோகத்திலிருந்து.

மகா :—அதோ அது ?

கணே :—அதுவும் பூலோகத்திலிருந்துதான்!

மகா :—அதோ அது?

கணே :—அதுவும் அங்கிருந்து தான்.

மகா :—இது என்ன ஆச்சரியம்! இத்தனை மனுக்களும் பூலோகத்தி லிருந்தா வந்திருக்கின்றன?

கணே :—பூலோகத்தைத் தவிர, வேறு எங்கிருந்தும் ஒரு மனுவும் இங்கு வருவது கிடையாது.

மகா :—என்ன விந்தை! என்ன விந்தை! நான் எத்தனை அண்டங்கள், பிரமாண்டங்கள் படைத்திருக்கிறேன். அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தப் பூலோகம் ஓர் அணு மாத்திரம். அப்படி யிருக்க இவர்கள் மாத்திரம் ஏதாவது எழுதிக் கொண்டே யிருக்கிறார்களே! இவர்கள் அப்படி என்ன தான் எழுதுகிறார்கள்?

கணே:—சொல்லப் பயமாய் இருக்கிறது, பிரபோ!

மகா :—தைரியமாய்ச் சொல்லும். பயப்படத் தேவையில்லை.

கணே :—எல்லாரும் தங்களுக்குக் கண் இல்லையா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மகா :—அப்படி என்றால்? ........

கணே :—உலகத்தில் நல்லவர்கள் கஷ்டப் படுகிறார்களாம், கெட்டவர்கள் சுகப் படுகிறார்களாம். இன்னும் உலகில் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குக் காரண — காரியம் தெரிய வில்லையாம். இதை யெல்லாம் கடவுளாகிய தாங்கள் கவனிப்ப

தில்லையாம். அதற்காகத் தான் அவர்கள் கடவுளுக்குக் கண் இல்லையா என்று கேட்கிறார்கள்.

**மகா** :—பேஷ்! பகு பேஷ்! (சிரிக்கிறார்) ரொம்ப அழகாயிருக்கிறது அவர்கள் கேள்வி! பூலோகம் ஒன்று இருப்பதாகக் கூட எனக்கு ஞாபகம் இல்லை. அப்படி இருக்கும்பொழுது அதைக் கவனிக்கவில்லை என்று குறை கூறுவது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது! ஆமாம், இந்தப் பூமியையே கவனித்துக் கொண்டிருந்தால் மீதியுள்ள அண்ட பிண்ட சராசரங்கள் பிரம்மாண்டங்கள் இவற்றையெல்லாம் எப்பொழுது கவனிப்பதாம்? ..........சரி, வேறு எந்த உலகத்திலிருந்தும் ஒரு குறையும் கிடையாதே?

**கணே** :—கிடையாது. அவர்கள் எல்லாரும் தங்களுக்குத் தெரியாத காரியமா என்று பேசாமல் இருக்கிறார்கள்.?

**மகா** :—பின் இந்தப் பூலோக வாசிகள் மாத்திரம் எதற்காக இப்படித் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்?

**மானிடன்** (இதுவரையில் வாயை மூடிக் கொண்டே இருந்தவன்) :—உங்களுக்குக் கண் இருந்தால் உங்களுக்கே தெரிந்திருக்கும்.

**மகா**:—யாரப்பா நீ....... (நாரதரைப் பார்த்து விட்டு) ஓகோ! நாரதரே தங்கள் காரியமா! யார் இவன்?

**நார** :—மகாவிஷ்ணு! இவன் ஒரு மானிடன்.

நான் சமீபத்தில் பூலோகத்துக்குச் சென்றிருந்த போது கடவுளுக்குக் கண் இல்லையா என்று கதறிக் கொண்டிருந்தான். அது தான் கூட்டிக் கொண்டு வந்தேன்.

மகா :—என்ன மானிடனே! இங்கு நடந்ததைப் பார்த்தபிறகாவது உன் சந்தேகம் தெளிந்ததா?

மானிடன் :—சந்தேகமாவது, தெளியவாவது! தாங்கள் ஒரு தடவை பூலோகத்துக்கு வந்து பார்த்தால் எத்தனை அக்கிரமங்கள் நடக்கின்றன என்று தங்கள் கண்ணாலேயே பார்ப்பீர்கள்.

மகா :—மானிடனே! நீ கூறுவது போல் உலகில் எத்தனையோ அக்கிரமங்கள் நடக்கின்றன என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் எத்தனையோ அண்டங்கள், பிரமாண்டங்களைக் கவனிக்க வேண்டிய நான் இவ்வளவு சின்ன பூலோகத்தைக் கவனிக்க எங்கே அவகாசம்?

மானிடன் :—அத்தனைப் பிரமாண்ட பூலோகத்தைப் பார்த்து........

மகா :—ஆம். உனக்கு அத்தனைப் பிரமாண்டமாய்த் தோன்றுவது எனக்கு ஓர் அணுவுக்குச் சமானம். ஆ.......பூலோகத்தைப் பற்றிய விஷயம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. காற்றில் எத்தனையோ கிருமிகள் இருக்கின்றன என்று கேள்விப் பட்டிருக்கிறாயா?

மானிடன் —நான் பள்ளிக்கூடத்தில் வாசித்த போது வாத்தியார் சொல்லி யிருக்கிறார்.

**மகா** :—இந்தக் கிருமிகள் ஒன்றுக் கொன்று என்ன சண்டை போட்டுக் கொள்கின்றன, எந்தக் கிருமியின் கட்சியில் நியாயம் இருக்கிறது, எந்தக் கிருமியின் கட்சியில் நியாயம் இல்லை என்றெல்லாம் நீ யோசித்துப் பார்த்திருக்கிருயா ?

**மானிடன்** :—கிடையாது.

**மகா** :—அந்தக் கிருமிகள் மனிதனைப் பார்த்து, "உனக்குக் கண் இல்லையா, எனக்கு நியாயம் வழங்கக் கூடாதா ?" என்று கேட்டால் நீ ஏதாவது பொருட் படுத்துவாயா ?

**மானிடன்** :—மாட்டேன்.

**மகா** :—உனக்கு அந்தக் கிருமி எம்மாத்திரமோ, அம்மாத்திரம் தான் எனக்கு உங்கள் பூலோகம். அப்படி யிருக்க அதை நான் கவனிக்கவில்லை என்று நீங்கள் எப்படிக் குறை கூறலாம் ?

**மானிடன்** :—நீங்கள் சொல்வது சரிதான், ஆனல்........

[ லட்சுமி வருகிருள். ]

**மகா** :—லட்சுமி ! வா, வா ! நீ எங்கே இங்கே வந்தாய் ?

**லட்சுமி** :—வந்தேனுவது ? சீக்கிரமாகப் புறப் பட்டு வாங்கோ என்று படித்துப் படித்துச் சொன்னேன். நீங்கள் என்னடா வென்ருல் இங்கே தமாஷ் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**நாரத** :—(கணேசரைப் பார்த்து இரகசியமாய்)

ஏது இன்று லட்சுமி தேவி வழக்கத்தை விட அதிகமாக வனப்புற்று விளங்குகிறார்கள் !

கணே (நாரதரைப் பார்த்து) :—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ரம்பை, திலோத்தமை, ஊர்வசி இவர்கள் கூட ஸ்ரீ லக்ஷ்மி தேவியாரைக் கண்டு தலை கவிழ வேண்டியதுதான்.

மகா :—இவர்கள் ஏதோ பேசிக் கொள்கிறார்கள். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே ?

லட்சுமி :—உங்களுக்கு எது தான் தெரியும் ?

மகா :—அது இருக்கட்டும் லட்சுமி! ஒரு தமாஷ் கேட்டாயா ? நாம் முன்பு பூலோகம் என்ற ஓர் இடத்தில் அவதாரம் எடுத்தோமே, ஞாபகம் இருக்கிறதா ? அங்குள்ள ஜனங்கள் எனக்குக் கண் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகிறார்களாம்.

லட்சுமி :—அவர்கள் சரியாய்த்தான் சொல்லுகிறார்கள். உங்களுக்குக் கண் இருந்தால் தானே ? எத்தனை சிரமப்பட்டுச் சிங்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் ! உங்கள் கண்ணுக்கு மட்டும் ஏன் அது ஒன்றும் தென்படவில்லை ? உங்களுக்குக் கண் இல்லை தான் !

மகா :—சரி, ஆரம்பித்து விட்டாயா, சண்டைக்கு ?

லட்சுமி :—ஏன் ஆரம்பிக்க மாட்டேன் ?

மானிடன் :—சரியாய்ப் போச்சு ! நம் வீட்டில் தான் சண்டை என்றால் இங்கு அதற்கு மேலே

இருக்கிறது. நான் போகிறேன் பூலோகத்துக்கு! நான் போகிறேன் பூலோகத்துக்கு! [ஓடுகிருன்.]

## காட்சி 3.

[வைகுந்தத்தில் மகாவிஷ்ணுவும் நாரதரும்.]

**மகா:**—நாரதரே! நீர் மாட்டில் நேற்று அந்த மானிடனைக் கூட்டிக்கொண்டு வரப் போக என் தலை தப்பினது தம்பிரான் புண்யமாய் விட்டது.

**நார:**—ஏன், என்ன விஷயம்? தாங்கள் தான் நேற்று பலே சாமர்த்தியமாக நடித்து விட்டீர்களே!

**மகா:**—நடித்தேனாவது! அவன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு கடைசியில் "ஆனல்—" என்று ஆரம்பித்தானே, கவனித்தீரா? என்னைப் பற்றி எனக்குத் தெரிந்ததுக்கும் மேல் இந்த மானிடர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிருர்கள். "கடவுள் என்ருல் ஒவ்வொரு அணுவிலும் இருக்கப் பட்டவராச்சே, அவருக்குத் தெரியாததா?" என்று கேட்க ஆரம்பித்தான். அதற்கெல்லாம் பதில் சொல்லிச் சாத்தியப்படுமா? அதற்காகத்தான் என் மாயையால் லட்சுமியை அங்கு வரச் செய்து, ஒரு சண்டையைக் கிளப்பி விட்டு அவனை விரட்டியடித்தேன்.

**நார:**—கபட நாடக சூத்ரதாரி என்று தெரியாமலா சொன்னுர்கள் பெரியவர்கள்?

**மகா:**—பின் வேறு எப்படி இருக்க முடியும், உம்மைப் போன்ற கலகப் பிரியர்கள் இருக்கும் பொழுது? [திரை]

## சம்பந்தி அவர்களுக்கு ...

**வ**ரும் தை மாதத்தில் எனக்குச் சம்பந்தியாக வரப் போகும் தங்களுக்கு அடியேன் "நாடோடி" அநேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும்.

இப்பவும் தங்கள் எல்லாருக்கும் பெண் பிடித் திருப்பதாகவும், வரும் தை மாதத்திலேயே கல்யா ணத்தை வைத்துக் கொண்டு விடலாமென்றும் எழுதியுள்ள கடிதம் கிடைத்தது. மிகவும் சந்தோஷம். இப்பவும் கல்யாண விஷயமாக ஒன்றிரண்டு விஷயங்கள் தங்களிடம் நேரிலேயே, லௌகீக விஷயமாகப் பேச்சு நடந்த போதே, சொல்லி விட வேண்டுமென்று இருந்தேன். ஆனல் வரதக்ஷிணை விஷயமாக நடந்த காரசாரமான விவா தத்தில் மறந்தே போய் விட்டேன்.

**இ**ப்பவும் வரதக்ஷிணைப்பேச்சு முடிந்து, நகைப் பேச்சு எழுந்ததும், "நகையைப் பற்றிப் புருஷா ளுக்கு என்ன, அதை யெல்லாம் பெண்டுகள் பேசிக் கொள்ளட்டும்" என்று சொல்லி விட்டு நீங்கள் வாசலுக்கு வந்தீர்கள். தங்கள் கூடவே நானும் வாசலுக்கு வந்தேன். ஆனல் அப்படி வந்தது எவ்வளவு பிசகாகப் போய்விட்டது என்பது இப்பொழுதுதான் தெரிகிறது. என்ன இருந்தாலும்

என் ஆத்துக்காரி இத்தனை அசடாக இருப்பாள் (அல்லது, தங்கள் சம்சாரம் இத்தனை கெட்டிக் காரியாக இருப்பாள் என்று வைத்துக் கொண்டா லும் சரிதான்) என்று நான் நினைக்கவே யில்லை. இத்தனை ரூபாய்க்கு நகை பண்ணுகிறேன் என்று பேசாமல் இத்தனை பவுனுக்குப் பண்ணுகிறேன் என்று பவுன் விலை தெரிந்த எந்த பொம்மனாட்டி யாவது ஒப்புக் கொள்வாளா, ஸ்வாமி? யானை விலை, குதிரை விலை என்று சொல்வார்கள். அது போய்ப் பவுன் க்ஷவர பிளேட் விலை யல்லவா விற்கிறது? பவுன் வாங்கி என் பெண்ணுக்கு நகை பண்ணு வதற்குப் பதில் மாப்பிள்ளைக்கு க்ஷவர பிளேட் வாங்கிக் கொடுத்தாலும் உபயோகமா யிருக்கும் என்று தோன்றுகிறது. இது விஷயமாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சென்னையில் மின்சாரக் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ள விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே. மாதம் பத்து 'யூனிட்'டுக்கு மேல் செலவழிக்க எனக்கு அதிகாரமில்லை. ஆகவே வீட்டில் இரண்டு பல்புகளுக்கு மேல் எரிய விட முடியாது. நிறைய லாந்தர்கள் வாங்கிப் போடுவோ மென்றாலும் மண்ணெண்ணெய் வாரம் அரைப் புட்டிக்கு மேல் (அதுவும் புட்டி உடைபடாமல்) கிடைக்காது. ஆகவே சம்பந்தி வீட்டார் எல்லாரும் ஆளுக்கொரு லாந்தர் (எண்ணெய், திரி, சகிதம்) கொண்டு வரும்படியாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

**அம்மா பெண்ணுக்குக் கல்யாணம்**
**அவாவாத்திலே சாப்பாடு,**
**கொட்டுமேளம் கோவிலிலே,**
**பாக்கு வெற்றிலை கடையிலே**

என்று நாடோடியாக ஒரு பாட்டு வழங்கி வரும் விஷயம் தங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தப் பாட்டின் இரண்டாவது வரியை மட்டும், அதாவது "அவா வாத்திலே சாப்பாடு" என்னும் வரியை மட்டும் கல்யாணப் பத்திரிகையில் குறிப்பாகச் சேர்க்க வேண்டி யிருக்குமோ என்று தோன்றுகிறது.

"என்னடா, சம்பந்தி இத்தனை பிசினாரியாய் இருக்கிறானே!" என்று தாங்கள் நினைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். ரூ. 3000 வரதக்ஷிணை கொடுக்க சம்மதித்த நான் (பயப்படாதீர்கள்! மாப்பிள்ளை டிரஸ்ஸுக்காக ரூ. 100-ம் சம்பந்தி ரயில் செலவுக்காக ரூ. 100-ம் தனியாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டது ஞாபகம் இருக்கிறது) செலவுக்குப் பயந்து கொண்டு இப்படிச் சொல்லுகிறேன் என்று தாங்கள் எண்ண மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

அரிசி முதலிய உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சம் தங்களுக்குத் தெரிந்ததே. நேற்று ஐந்து ரூபாய் அரிசிக்கு மேல் கொடுக்க முடியாது என்று மூக்கால் அழுத கடையில் இன்று அரிசியே கிடையாது என்று கையை விரிக்கிறான். பாக்கி

கறி காய் முதலியவையோ, மொச்சைக்காய் முதல் முள்ளங்கி வரையில், ஸோல்ஜர்களுக்குக் கண்டு பாக்கி இருந்தால்தான் நமக்கு. ஆகவே இந்த சமயத்தில் என்னுல் சம்பந்திப் பேருக்கு எப்படிச் சாப்பாடு போட முடியும் என்பதை நீங்களே சொல்லுங்கள்.

ஆனுல் ஒன்று. சாப்பாடு இல்லை என்ற விஷயத்துக்காக, காப்பியும் இல்லை என்று நினைத்து விடாதீர்கள். காப்பி எத்தனை டம்ளர் வேண்டுமானுலும் தாராளமாகச் சாப்பிடலாம். ஆனுல் அவரவர்கள் காப்பிக்கு வேண்டிய சர்க்கரையை அவரவர்கள்தான் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டால் தாங்கள் குற்றமாகக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

என்னடா, இப்படி அசந்துஷ்டியான விஷயங்களாகவே எழுதிக் கொண்டு போகிருனே என்று நினைக்காதீர்கள். பிசினுரித்தனமாக ஒரு நாள் கல்யாணம் பண்ணி விட்டு எல்லாரையும் விரட்டி யடிக்கிருர்களே, அப்படிப்பட்ட ஆசாமியல்ல நான். நாலு நாள் கல்யாணம் சம்பிரமமாக நடத்தப் போகிறேன். சாப்பாடு மாத்திரம் அவரவர்கள் வீட்டிலேயானுலும் கொட்டு மேளமும் பாக்கு வெற்றிலையும் நம் வீட்டிலேதான்.

ஆகவே, தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்து ஜனங்களுடன், லாந்தர், சர்க்கரை சகிதம் முன்ன

தாகவே வந்திருந்து, கல்யாணத்தை நடத்தி வைத்து, தம்பதியை ஆசீர்வதித்து, என்னையும் கௌரவப் படுத்தி அவரவர்கள் வீட்டில் சாப்பாட்டையும் முடித்துக் கொள்ளும்படியாய்க் கேட்டுக் கொள் கிறேன். வரதக்ஷிணை விஷயத்தில், "எனக்கு வரதக்ஷிணை வாங்கத் துளிகூட இஷ்டமில்லை. ஆனால் பெண்டுகள் சம்மதிக்க மாட்டேன் என்கிறார் களே" என்று சொன்னதுபோல், இது விஷயத் திலும், "எனக்குச் சம்மதந்தான். பெண்டுகளுக்குச் சம்மதமில்லையே, என்ன செய்வது!" என்று பாரத்தை அவர்கள் தலையில் போடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நாலு நாள் கல்யாணம் என்பது ஞாபகம் இருக்கட்டும்.

இப்படிக்கு
தங்கள் விதேயன்
"நாடோடி"

# சமாதான சங்கடம்

## காட்சி 1.

[சமாதான தேவதை தேவலோகத்தி லிருந்து பூலோகத்துக்கு வருகிருள்.]

**சமாதான தேவதை** :—நல்ல பிழைப்பு, நல்ல வாழ்க்கை இது! பேசாமல் ஒரு கால் கடுதாசியை எடுத்து இந்த வேலைக்கு ராஜிஞமா எழுதிக் கொடுத்து விட்டு, வீட்டில் நிம்மதியாக உட்காரலாம் என்று தோன்றுகிறது. இந்த சமாதானத்தைத் தூக்கிக் கொண்டு, வீடு வீடாக நான் எத்தனை வீடுகள் நுழைவேன்! விலைவாசிகளின் உயர்வால் கஷ்டப்படும் சில ஏழைகளைத் தவிர வேறு யாரும் சமாதானத்தைக் கோருவதாகத் தெரியவில்லையே! சரி, இதோ ஒரு சர்க்கார் குமாஸ்தா. இவராவது சமாதானத்தை விரும்புகிருரா என்று பார்ப்போம்!

[குமாஸ்தா இருக்கும் அறைக்குள் நுழைகிருள்.]

**குமாஸ்தா** :—யாரது, என்ன வேண்டும்?

**சமா** :—நான் சமாதான தேவதை. பூலோகத்தில், யுத்தத்திஞல் மக்கள் படும் கஷ்டத்தைக் காணச் சகியாமல் சமாதானம் கொண்டு வந்திருக்கிறேன்.

**குமாஸ்தா** :—ரொம்ப அழகாயிருக்கிறது! பத்து வருஷமாக வேலை இல்லாமல் திண்டாடின எனக்கு

இப்பொழுதுதான் யுத்த கால வேலை யொன்று கிடைத்திருக்கிறது. அது தங்களுக்குப் பொறுக்க வில்லை போலிருக்கிறது. இப்படித் திடுதிப் பென்று தாங்கள் சமாதானத்தைக் கொண்டு வந்து விட்டால் எங்கள் வேலை போய் விடாதா? அப்பொழுது நாங்கள் என்ன பண்ணுவது? எங்கள் பிள்ளை குட்டிகளின் கதி என்ன ஆவது, அம்மா? சமாதானம் இல்லை யென்று இப்பொழுது யார் அழுதார்கள்? பின்னல் மெள்ள வரலாம், போங்கள்!

[தேவதையை வெளியே அனுப்பிக் கதவை மூடிக் கொள்கிருர்.]

## காட்சி 2.

**சமாதான தேவதை**:—சரி, இது யாரோ கண்ட்ராக்டர் வீடு போலிருக்கிறது. இவரைப் பார்ப்போம்.

**கண்ட்ராக்டர்**:—யாரம்மா இது! சிவ பூஜையில் கரடி நுழைந்தாற்போல், நான் வேலையாக இருக்கும் பொழுது தொந்தரவு கொடுப்பது? நான் வேலை மும்முரத்தில் இருப்பது தெரியவில்லை?

**சமா**:—ஐயோ, பாவம்! ஆனல் இனிமேல் தாங்கள் இத்தனை கஷ்டப்பட்டு வேலை செய்யத் தேவை இருக்காது.

**கண்ட்**:—ஏன்?

**சமா**:—ஏனெனில், நான் சமாதான தேவதை. சமாதானம் கொண்டு வந்திருக்கிறேன்.

**கண்ட்**:—சமாதானமா! யாரடா அங்கே! இந்த

அம்மாளைக் கழுத்தைப் பிடித்துக் கல்தாக் கொடுத்துத் தள்ளு. ஏதோ இந்த யுத்த காலத்துக்குள் நாலு காசு சம்பாதித்து வைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் சமாதானம் கொண்டு வந்திருக்கிறார்களாம். சமாதானம்! என்னம்மா, இன்னும் நிக்கறே? மரியாதையா போறயா, இல்லை—

[சமாதான தேவதை அங்கிருந்து ஓடுகிறாள்.]

## காட்சி 3.

**சமாதான தேவதை** :—சீ! நல்ல பூலோகம், நல்ல மனுஷர்கள்! உலகம் ஆரம்பித்ததிலிருந்து இவர்கள் எத்தனை தடவைதான் சண்டை போட்டுக் கொள்வார்கள்! நாமும் எத்தனை தடவைதான் சமாதானத்தைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிறது! சரி, இது யாரோ பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர் வீடு மாதிரி தோன்றுகிறது. சர்க்கார் உத்தியோகஸ்தராதலால் யுத்தத்தினால் ஏற்படும் கஷ்டங்களை நன்கு அறிந்திருப்பார். கட்டாயம் சமாதானம் வேண்டுமென்று கோருவார். கேட்டுப் பார்ப்போம்.

**உத்தியோகஸ்தர்** :—யாரது, சமாதான தேவதையா? வரணும், வரணும். எங்கேயோ வழி தவறி வந்து விட்டாற் போலத் தோன்றுகிறதே!

**சமா** :—வழியும் தவறவில்லை, கிழியும் தவறவில்லை. எல்லாம் தங்களைப் பார்க்க வேண்டு

மென்று தான் வந்தேன். சமாதானம் கொண்டு வந்திருக்கிறேன்.

உத்தி :—சமாதானமா! ரொம்ப அழகா யிருக்கிறது! யுத்தம் வந்தாலும் வந்தது, மாதம் ரூ. 400 சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நான் இப்பொழுது ரூ. 4000 வாங்கிக் கொண்டிருக்கிறேன். அதைக் கெடுக்கப் பார்க்கிறீர்களா, என்ன? நான் இப்பொழுது 'காணமற் போன குண்டூசிகள் கண்ட்ரோல' ராக்கும்!

சமா :—ஓஹோ! அப்படியா? அப்படியானல் சமாதானம் வேண்டியதில்லை, தங்களுக்கு?

உத்தி :—இந்த யுத்தம் எனக்கு இப்போழுது வாங்கிக் கொடுக்கும் ரூ. 4000 சம்பளத்தை தங்களால் கொடுக்க முடியுமானல் பேஷாக சமாதானம் கொண்டு வாருங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை....ஆமாம், சமாதானம் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறீர்களே, எப்பொழுது முதற் கொண்டு இது அமலுக்கு வரவேண்டும் என்பதாக உத்தேசம்?

சமா :—ஏன், இந்த க்ஷணம் முதற் கொண்டே தான்.

உத்தி :—ஹஹ்ஹஹ்ஹா! சபாஷ்! பலே பேஷ்! என்னம்மா, இது மத்திய சர்க்கார் என்று நினைத்தீரா, அல்லது —

சமா: —ஏன், மத்திய சர்க்காரா யிருந்தால்?

உத்தி :—தங்கள் சமாதான திட்டத்தை நாங்கள்

ஒப்புக்கொள்ளுவதா, வேண்டாமா என்று தீர்மானிக்கவே இன்னும் மூன்று வருஷங்கள் பிடிக்குமே அம்மா!

சமா:—ஏன், மூன்று வருஷ காலம் எதற்காக?

உத்தி:—பின் மத்திய சர்க்கார் என்றால் கிள்ளுக்கீரையா, என்ன? இவ்வளவு பெரிய விஷயத்தைத் தீர்மானிக்கக் குறைந்தபட்சம் மூன்று வருஷங்கள் கூட எடுத்துக் கொள்ள வில்லையென்றால் இது என்ன மத்திய சர்க்கார் வேண்டிக் கிடக்கிறது? இத் திட்டங்களைப் பரிசீலனை செய்யக் கமிட்டி ஏற்படுத்த வேண்டாமா, அக்கமிட்டி ரிப்போர்ட் தயாரிக்க வேண்டாமா, அந்த ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்ய ஒரு வட்ட மேஜை மகாநாடு கூட வேண்டாமா, அந்த வட்ட மேஜை மகாநாட்டின் சிபார்சுகளை வாசித்துப் பார்த்து ஒவ்வொரு இலாகாவும் குறிப்புகள் எழுத வேண்டாமா, அப்படி ஒவ்வொரு இலாகாவும் எழுதின குறிப்புகளை அந்தந்த இலாகா காரியதரிசி சரி பார்க்க வேண்டாமா, அப்படி அவர்கள் சரி பார்த்ததை....

சமா:—தாங்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போவதைக் கேட்க எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. இப்பொழுதே சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நினைத்து அல்லவா—

உத்தி:—இப்பொழுதே சமாதானம் ஏற்பட வேண்டுமென்றால், தாங்கள் மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு முன்னரே, அதாவது, முன் யோ

சனேயாக, இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே, தங்கள் சமாதானத் திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கவேண்டும். சரி, எனக்கு நாழியாகிறது. சுண்டைக்காய் கண்ட்ரோலர் வீட்டில் இன்று வெண்டைக்காய் சாம்பார். சாப்பிட அழைத்திருக்கிறார். நான் போக வேண்டும்.

சமா :—சரி, நானும் போய் வருகிறேன்.

[வெளியே வருகிறாள்]

## காட்சி 4.

சமா :—இது என்ன போர்டு! "யுத்தத்துக்குப் பிந்தைய உலக மகாநா" டா? தேவலையே. அப்படியானால் இவர்கள் கட்டாயம் என்னை வரவேற்பார்கள், சந்தேகமில்லை.

மகாநாட்டின் தலைவர் :— யாரம்மா, என்ன வேண்டும்?

சமா :—யுத்தத்துக்குப் பிந்தைய உலகத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

தலைவர் :—ஆம்.

சமா :—அப்படியானால் நான் யார் என்று தெரிந்தால் மிகவும் சந்தோஷப்படுவீர்கள். நான் தான் சமாதான தேவதை.

எல்லாரும் :—சமாதான தேவதையா! அட ஈச்வரா!

[எல்லாரும் மூர்ச்சையாய்க் கீழே சாய்கிறார்கள். கொஞ்ச நேரம் கழித்துத்

தலைவர் மூர்ச்சை தெளிந்து எழுகிறார்.]

**தலைவர்** :—அம்மா, இன்னும் சமாதானத்தைக் கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்துவிட வில்லையே!

**சமா** :—இல்லை, அதற்காகத்தான் ஸ்ரீ சர்ச்சிலைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்.

**தலைவர்** :—நல்ல வேளை, பிழைத்தோம். சமாதான உலகம் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றியே நாங்கள் இன்னும் நிர்ணயம் செய்தாக வில்லை. அதற்குள் சமாதானத்தைக் கொண்டு வந்து குதித்து விட்டீரே! சரி, சமாதானத்தைக் கொண்டு போய் ஸ்ரீ சர்ச்சிலிடம் தானே கொடுக்கப் போகிறீர்கள்?

**சமா** :—ஆமாம்.

**தலைவர்** :—ரொம்ப நல்லதாகப் போச்சு. ஸ்ரீ சர்ச்சில் இருக்கிற வரையில் எங்களுக்குக் கவலை யில்லை. யாரப்பா அங்கே! இந்த அம்மாளை ஸ்ரீ சர்ச்சிலின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போ.

## காட்சி 5.

**சர்ச்சில்** :—யாரது? கையில் என்ன?

**சமாதான தேவதை**:—இல்லை, சமாதானம் கொண்டு வந்திருக்கிறேன். நான் வந்து—

**சர்ச்** :—தெரியுமே! தங்களை அந்தப் பயல் ஹிட்லர் அனுப்பினை, என்ன? நம்ப கை ஓங்க

ஆரம்பித்து விட்டது என்று தெரிந்து கொண்டு சமாதானம் கோருகிருஞ, என்ன?

சமா :—இல்லே, ஹிட்லர் அனுப்பவில்லே. நான் சமாதான தேவதை. தேவலோகத்திலிருந்து வரு கிறேன்.

சர்ச் (முகத்தைச் சுளித்துக் கொண்டு) :—அதற் குள் தங்களுக்கு என்ன அவசரம்? யுத்தம் இன்னும் நீடித்து நடக்கும் என்று நான் கூறிய ரேடியோப் பிரசங்கத்தைத் தாங்கள் கேட்க வில்லேயா, என்ன? இப்பொழுதே சமாதானம் ஏற்பட்டு விட்டால் என் வார்த்தை பொய்யாக அல்லவா போய்விடும்? சரி, தங்கள் சமாதானத்தை எடும், பார்க்கலாம்.

[சமாதான தேவதை தன் கையில் உள்ள கடிதத்தைக் கொடுக்கிருள். சர்ச்சில் வாசித்துப் பார்க்கிருர்.]

சர்ச் :—சட், இது உதவாது. உலக சமாதானம் அல்லவா கொண்டு வந்திருக்கிறீர்கள். இது வேண்டாம்!

சமா :—ஏன்?

சர்ச் :—ஐரோப்பா சமாதானம், ஆசியா சமா தானம் என்று இரண்டு பாகங்களாகப் பிரித்துக் கொண்டு வர முடியுமாஞல் கொண்டு வாரும்.

சமா :—இது முடியாத காரியம் ஆச்சே!

சர்ச் :—ஏன் முடியாத காரியம்? இவ்வளவு பெரிய கிணற்றை என்னே ஒரே யடியாகத் தாண்டச் சொன்ஞல் முடியுமா? முதலில் ஒரு பாதிக் கிணற்றை

தாண்டிக்கொண்டு பின்னல் மறு பாதி தாண்டலாம் என்று பார்க்கிறேன். அதைத் தவிர இன்னும் சில காரணங்களும் இருக்கின்றன. நாங்கள் இந்த யுத்தத்தை எதற்காக நடத்திக் கொண்டிருக்கிறோம், தெரியுமா ?

சமா :—உலகில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக என்று தாங்களே கூறியிருக்கிறீர்கள்.

சர்ச் :—'நான்ஸென்ஸ்.' அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. அப்படி நான் ஏதாவது கூறி யிருந்தாலும் "உளவளாக் கட்டைக்கு"க் கூறி யிருப்பேன். எங்கள் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காகத்தான் நான் அவதாரம் எடுத்திருக்கிறேன். ஆகவே இந்த யுத்தமும் அதற்காகவே என்பதில் சந்தேகமில்லை. இதற்கு ஐரோப்பிய சமாதானம் முன்னாலும், ஆசிய சமாதானம் பின்னாலும் வந்தால் தான் அநுகூலமாயிருக்கும்.

சமா :—அப்படி யென்றால்—

சர்ச் :—அப்படி யென்றால் தங்கள் சமாதானத்தை ஐரோப்பா சமாதானம், ஆசியா சமாதானம் என்று 'பாகிஸ்தான்' செய்ய முடியுமானல் என்னை வந்து பாருங்கள். இல்லாவிடில் தாங்கள் கொண்டு வந்திருக்கும் உலக சமாதானத்துக்கு யுத்தமே தேவலை.

சமா :—சீ ! நல்ல பிழைப்பு ! நல்ல உத்தியோகம் !

[சமாதான தேவதை மறைகிருள்.]

[திரை]

# பரீட்சையில் ஏன் தேறவில்லை?

இந்தத் தடவையும் நான் பரீட்சையில் தேற வில்லை. பரீட்சையில் நான் தேறாதது இது முதல் தடவை யல்ல. போன வருஷமும் தேறவில்லை. அதற்கு முந்தின வருஷமும் தேறவில்லை. அதாவது ஒரே வகுப்பிலேயே இப்பொழுது மூன்றாம் தடவை யாக "கோட்" அடித்து விட்டேன்.

அப்படி மூன்று தடவையும் ஒரே வகுப்பில் "கோட்" அடிக்க நான் ஏதாவது பெரிய பீ. ஏ., எம். ஏ., பரீட்சை கொடுத்தேன் என்று நினைக் கிறீர்களோ? ஏது, இப்பொழுது நான் இருக்கும் ரீதியில் அவற்றை எட்டிப் பார்ப்பது கூட முடி யாது போலிருக்கிறது. நான் வாசிப்பது இன்னும் அந்தப் பாழும் ஏழாம் வகுப்புத்தான்.

நான் முதல் தடவை "பெயில்" ஆனதும் அப் படியே எங்கேயாவது போய்த் தற்கொலை செய்து கொள்ளலாமா வென்று நினைத்தேன். அதற்காகப் பிரயத்தனம் கூடப் பண்ணினேன். என் நண்பன் ஒருவன் "மிகச் சுலபமான" வழி யொன்று சொல்லிக் கொடுத்தான். "பத்து டம்ளர் காப்பி சேர்ந்தாற் போல் குடித்தால், அப்படியே மயக்கம் போட்டு விழுந்து விடுவாய்" என்றான். இதற்காக நான் என் தகப்பனார் சட்டைப் பையிலிருந்து ஒரு

ரூபாய் திருடி, ஒரே ஹோட்டலில் பத்து டம்ளர் காப்பி வாங்கிச் சாப்பிட்டால் ஏதாவது சந்தேகப் பட்டுப் போலீஸாரிடம் ஒப்புவித்து விடுவார்கள் என்று பயந்து, பத்து ஹோட்டல்களில் தனித் தனி யாகப் பத்து டம்ளர் வாங்கிக் குடித்தேன். காப்பி மித மிஞ்சிக் குடித்ததினால் தலைவலியால் கஷ்டப்பட் டதும், ரூபாய் திருடியதற்காகத் தகப்பனாரிடம் உதை பட்டதும்தான் மிச்சம். நான் கொண்ட எண்ணம் ஈடேறவில்லை.

இரண்டாவது தடவை பரீட்சை தவறிப் போனபோது எங்கேயாவது ஓடிப் போய்விடலாமா வென்று தோன்றியது. கடைசியில் ரயில்வே ஸ்டே ஷனில் போய் உட்கார்ந்து கொண்டு எந்த ஊருக் குப் போகலாமென்று யோசனை பண்ணிக் கொண் டிருந்தேன். அப்பொழுது என் தகப்பனார் என்னை அங்கு தேடி வந்து, சிண்டைப் பிடித்து (இதற்குத் தான் சிண்டு வைத்துக் கொள்ளக் கூடாது என்கி றது!) வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் விட் டார்.

இப்பொழுது மூன்றாவது தடவையும் தவறி விடவே, எனக்கு ஞானோதயம் உண்டாகி விட்டது. "நான் ஏன் பரீட்சையில் தவறினேன்?" என்னும் விஷயத்தை ஆராயத் தொடங்கி விட்டேன். அந்த ஆராய்ச்சியின் மூலம் நான் கண்டு பிடித்த சில உண்மைகளைத்தான் ஒரு கட்டுரையாக எழுத ஆரம் பித்திருக்கிறேன்.

ஒரு பெரிய குடும்பத்தில் கடைசிப் பிள்ளை யாகப் பிறப்பதே கூடாது. அத்தகைய குற்றத்தை நான் செய்து விட்டேன். "எங்கள் குடும்பம் பெரிசு" என்று கிராமபோனில் யாரோ ஒரு அம்மா பாடி யிருக்கிருளே, அது எங்கள் குடும்பத்தைப் பார்த்த பிறகுதான் பாடியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. எனக்கு நான்கு அண்ணன்கள், மூன்று தமக்கைகள், இரண்டு தங்கைகள். இவர்க ளுடைய பெயர்களை யெல்லாம் சொன்னல், நிச்சய மாய் உங்களால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடி யாது. ஆகவே இவர்களை அண்ணன் நெ. 1, தமக்கை நெ. 2 என்று எண்ணிட்டே அழைக்கப் போகிறேன்.

என்னுடைய ஒரு நாள் வாழ்க்கையைப் பற்றி மாத்திரம் சொன்னல் போதும். நான் ஏன் தவருமல் பரீட்சையில் தவறிக் கொண்டு வருகிறேன் என்று நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

அண்ணன் நெ. 1 ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம் பெனி ஏஜெண்ட். பொழுது விடிந்ததும் விடியாதது மாக இவனிடம் யார் இன்ஷ்யூர் பண்ணுகிறேன் என்று சொல்லுகிருர்களோ, தெரியாது. காலை ஆறு மணிக்கே பூட்ஸைப் போட்டுக் கொண்டு டப், டுப் என்று எங்கேயோ புறப்பட்டுப் போய் விடுவான். காலையில் எழுந்ததும் அவன் பூட்ஸைத் துடைப்பது தான் எனக்கு முதல் வேலை. பல் தேய்ப்பது கூட

அப்புறம் தான். பூட்ஸை எவ்வளவு நன்றாகத் துடைத்தாலும், "டேய் மணி! ஏண்டா பூட்ஸை சரியாகத் துடைக்கவில்லை ?" என்று காதைப் பிடித்துக் கிள்ளி விட்டுப் போய் விடுவான்.

இவன் காதைப் பிடித்துக் கிள்ளினதற்காக அழுவதற்குக் கூட நேரம் இருக்காது. அதற்குள் அண்ணன் நெ. 2 கூப்பிடுவான். "டேய்! பிரஷ்ஷையும் பேஸ்டையும் எடுத்துக் கொண்டு வாடா!" என்று கொல்லைப் பக்கத்துக் குழாயிலிருந்தே கத்துவான். இவன் இப்பொழுதுதான் எம். பி. பி. எஸ். பாஸ் பண்ணி விட்டு ஒரு போர்டு தொங்க விட்டிருக்கிறான். அவன் தன் வண்ணான் கூலி, க்ஷவரக் கூலி, சினிமா செலவு இதற்கு மாத்திரம் சம்பாதித்துக் கொண்டால் போதும் என்று அப்பா சொல்கிறார். இவனுக்குப் பிரஷ்ஷையும் பேஸ்டையும் எடுத்துக் கொடுக்கணும். பிறகு மன்னி நெ. 2-க்கு ஒத்தாசையாக வென்னீர்த் தவலையைப் பிடித்து இவன் குளிப்பதற்காகக் கொல்லைப்புறம் வைக்கணும். அதற்குள், "டவல் கொண்டு வாடா கழுதை!" என்று கத்துவான். போய் டவல் எடுத்துக் கொண்டு வருவதற்குள் 'கழுதை' யை மன்னி நெ. 1 கூப்பிட்டு, "அம்பி! இந்தக் குழந்தையைக் கொஞ்சம் வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டேன்" என்று சொல்லி, வீறிட்டு அழுது கொண்டிருக்கும் குழந்தையைக் கையில் கொடுத்து விட்டுப் போய் விடுவாள்.

இந்தக் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டு வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. நம் முகத்தை எவ்வளவுக் கெவ்வளவு விகாரமாய் வைத்துக் கொள்கிறேமோ, அவ்வளவுக் கவ்வளவு குழந்தை சிரிக்கும். இப்படி குழந்தைக்கு அழகு காட்டிக் கொண்டிருப்பதற்குள், "டேய்! டேய்!! டவல்! டவல்!!" என்ற சத்தம் கொல்லையிலிருந்து கேட்கும். உடனேதொப்பென்று குழந்தையைக் கீழேபோட்டு விட்டு அண்ணன் நெ. 2-க்கு துவாலையை எடுத் துக் கொடுக்கணும். தலையைத் துவட்டிக் கொண்டே, "டேய், இடியட்! தடி மாதிரி நிக்கறயே! சைக்கி ளைத் துடைக்கிறதற்கு என்ன கேடு?" என்பான். இதற்குள் மன்னி நெ. 2 கூப்பிட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஹோட்டலிலிருந்து இரண்டு இட்டலி வாங்கிக் கொண்டு வரும்படி சொல்லுவாள். இவளு டைய தகப்பனர் பணக்கார ராதலால், இவள் தனக் கென்றே தனியாகப் பணம் வைத்துக் கொண்டிருந் தாள். இந்த மாதிரி ரகசியமாக இட்டலி வாங்கிக் கொடுப்பதற்காக எனக்கு அவ்வப்போது ஓரணவும், இரண்டணவும், சில சமயங்களில் சினிமாவிற்குப் போவதற்காக நாலணவும் கொடுப்பாள். இதனல் இவள் சொல்லை நான் தட்டுவதில்லை.

காசை எடுத்துக்கொண்டு வெளியில் போகப் புறப்பட்டேனே, இல்லையோ, "டேய்! எங்கேடா போறே, சைக்கிளைத் துடைக்காமல்?" என்று அண்ணன் நெ. 2 உறுமுவான்.

"இல்லேண்ணா, மன்னிதான் போகச் சொன்னாள்" என்றால், "எந்த மன்னி?" என்று கேட்பான். "சின்ன மன்னி" என்று சொன்னதும் 'கப்' பென்று அவன் கோபம் அடங்கிவிடும்.

**ஹோ**ட்டலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து சைக்கிளைத் துடைக்க ஆரம்பிப்பேன். சைக்கிளை முழுவதும் துடைப்பதற்குள் அண்ணன் நெ. 3 கூப்பிட்டு, "டேய்! இந்த சீட்டை எடுத்துண்டு லாண்டரிக்குப் போய் என் துணியை வாங்கிக் கொண்டு வா" என்பான். இவன் ஒரு வேலையில்லாப் பட்டதாரி. தினம் காலையில் வண்ணான் 'சூட்' டைப் போட்டுக்கொண்டு ஊர் சுற்றுவதுதான் இவன் வேலை. இவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருக்கும் அண்ணன் நெ. 2, "லாண்டரிக்குப் போவதாயிருந்தால் என் அழுக்குத் துணிகளையும் எடுத்துக் கொண்டு போ" என்பான். இதற்குள் தமக்கை நெ. 3, "அப்படியே எனக்கு ஒரு பச்சைக் கலர் ரிப்பன் வாங்கிக்கொண்டு வா" என்று சொல்லுவாள். இவளுக்குக் கலியாணமாகி மூன்று வருஷங்களாகியும், இவள் புருஷன் இவளை இன்னும் கூட்டிக்கொண்டு போகவில்லை. 50, 60க்கு எத்தனையோ வேலைகள் வந்தும் அவர் அவற்றை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். ஏதாவது பெரிய வேலை கிடைத்த பிறகுதான் இவளைக் கூட்டிக் கொண்டு போகப் போகிறாராம்! இதற்குள் தாயார், "ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து வாங்கிக்கொண்டு வாடா!

இந்த வீட்டில் எனக்கு மருந்து வாங்கிக் கொடுப்ப தற்குக் கூட ஒரு நாதி கிடையாது" என்று முணகு வாள். அப்பொழுது அண்ணன் நெ. 4 ஒரு சீட்டை என் கையில் கொடுத்து, " இந்தா. இதை என் சிநேகி தன் ராமசாமியிடம் கொடுத்து, அவன் கொடுக்கும் புஸ்தகத்தை வாங்கிக்கொண்டு வா " என்பான். இவன் பரீட்சை தேறுவதில் எனக்கு நிஜமாகவே அண்ணுத்தை. மூன்று வருஷங்களாக பீ. ஏ. பரீட்சையை முற்றுகை போட்டுக் கொண்டிருக்கிருன். இவன் நண்பர்களும் இது விஷயத்தில் இவனுக்குச் சளைத்தவர்களல்ல. இவனுடைய நண்பர்கள் வீடெல்லாம் எனக்குத் தெரியும். தினம் காலையில் அவர்களிடமிருந்து புஸ்தகம் வாங்கிக்கொண்டு வருவதற்கோ, அல்லது இவன் கொடுக்கும் புஸ்தகத்தை அவர்களிடம் கொண்டுபோய்க் கொடுப்பதற்கோ நான்தான் ஆள்.

இதற்குள் அப்பா கூப்பிட்டு, " ஏண்டா, மார்க் கட்டுக்குப் போய் ஏதாவது கறி காய் வாங்கிக் கொண்டு வருகிறதுதானே ? காலையிலிருந்து ஒரு காரியமும் செய்யாமல், வாசிக்காமலு மிருக்கிருயே ?" என்பார்.

இப்படியாகக் காலைப்பொழுது இம்மாதிரி காரியங்களிலேயே செலவழிந்து போய்விடும். நான் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நாளைப் போல் நாழி கழித்துத்தான் போகிறேனென்றும், வாத்தியாருக்கு

என்னைக் கண்டித்துக் கண்டித்து அலுத்துப் போய் விட்ட தென்றும் சொல்லவேண்டியதில்லை.

**சா**யந்திரம் பள்ளிக்கூடத்தை விட்டு வந்ததும் விளக்குகளுக் கெல்லாம் எண்ணெய் ஊற்றித் துடைக்க வேண்டும். இதற்குள் குழந்தை அழும்; மன்னி அதை என் மடியில் போட்டுவிட்டுப் போய் விடுவாள். காலையில் செய்ததுபோல் என் முகத்தை வக்கிரமாக வைத்துக் கொண்டால்தான் அதற்குத் திருப்தி! அப்படிச் செய்து கொண்டிருக்கும் பொழுதே வெளியில் சென்றிருக்கும் எல்லா அண் ணன்களும் வீட்டிற்கு வந்து விடுவார்கள். "டேய்! போய் ஒரு அணுவிற்குப் பூ வாங்கிக்கொண்டு வாடா!" என்று அண்ணன் நெ. 1 ஒரு அணுவை என் மேல் விட்டெறிவான். இதற்குள் அண்ணன் நெ. 2. "அப்படியே ஒரு பத்திரிகை வாங்கிக் கொண்டு வாடா!" என்று இன்னொரு அணுவை விட்டெறிவான். இதற்குள் மன்னி நெ. 2 ரகசிய மாகக் கூப்பிட்டு, இரண்டணுவைக் கையில் கொடுத்துத் தனக்குக் கடைப் பக்ஷணம் வாங்கிக் கொண்டு வரும்படி சொல்லுவாள். வெளியில் போய் இதை யெல்லாம் வாங்கிக்கொண்டு வந்த பிறகுதான் மன்னி நெ 1-க்கு வீட்டில் சாப்பாட்டுக்கு இலை இல்லையென்று தெரியவரும். இலைக்காக இன்னொரு நடை ஓடுவேன். நான் வெளியில் போயிருக்கும் சமயத்திற்குள் வீட்டில் நெய் இல்லை யென்று கண்டுபிடித்திருப்பாள். அண்ணன்மார்

களை நெய்க்குப் பணம் கேட்க வேண்டும். அண்ணன் நெ. 1, "என் கையில் ஒரு தம்படி கூடக் கிடையாது, போ" என்று சொல்லி விடுவான். அண்ணன் நெ. 2. "என்னிடம் ஒரு காசு கூடக் கிடையாது" என்று முதல் அண்ணன் சொன்னதையே சற்று மாற்றிச் சொல்வான். பணமில்லை யென்று கையை விரித்தது போதாதென்று, "ஏன் நெய் இல்லையென்று முன்னமேயே சொல்லக்கூடாது! எப்பொழுது கண்டாலும் கூறு வாயில் கேட்பது தான் இந்த வீட்டில் வழக்கம்" என்று உறுமுவான். கடைசியில் அப்பாவிடம் பணம் வாங்கிக்கொண்டு போய் நெய் வாங்கிக்கொண்டு வருவேன். திரும்பி வந்ததும் எல்லாருக்கும் இலைபோட்டு, முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பலகைகளையும், டம்ளர்களையும் தேடிப் பிடித்தாக வேண்டும்.

தினம் எல்லாருடனும் தான் நான் சாப்பிட உட்காருவேன். ஆனல் நான் சாப்பிட உட்கார்ந்தது அந்தக் குழந்தைக்கு எப்படியோ தெரிந்து விடும். தூளியில் படுத்துக் கொண்டிருக்கும் குழந்தை தேள் கொட்டினற் போல் வீறிட்டு அழும். உடனே நான் எழுந்து தூளியை ஆட்டியாக வேண்டும். தூளியை ஆட்டும் வரையில் வாயில் விரலைப் போட்டுக் கொண்டு பேசாமலிருக்கும். சற்று நிறுத்தினேனனல் திரும்பவும் அழ ஆரம்பித்து விடும். உடனே எல்லா அண்ணன்களும், ஒரே காலத்தில்,

பதினேழுரைக் கட்டை சுருதியில், "இதென்னடா, தலை வேதனையா யிருக்கிறது!" என்று கத்துவார்கள். ஆகவே அவர்கள் சாப்பிட்டு முடியும் வரையில் நான் தூளியை ஆட்டியாக வேண்டும்.

அவர்கள் சாப்பிட்டான பிறகு மன்னி நெ. 1. அதைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்து விடுவாள். ராத்திரிச் சாப்பாடு எனக்குத் தினம் "ஸ்திரீகள் பந்தி"யில் தான்.

நான் சாப்பிட்டு முடிவதற்கு மணி 9 ஆகிவிடும். அப்பா, "என் படுக்கையைக் கொண்டு போய்த் திண்ணையில் போட்டு விடேன்" என்பார். அண்ணன் நெ. 1, "கயற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து முற்றத்தில் போடு" என்பான். அண்ணன் நெ. 2, "போய் வண்டி கொண்டு வாடா, சினிமாவுக்குப் போகவேண்டும்" என்பான். அப்படியே வண்டி கொண்டு வந்து அண்ணாவையும் மன்னியையும் சினிமாவுக்கு அனுப்ப வேண்டும். அதற்குள் அம்மா, "காலைக் கடுக்கறது, சற்றுப் பிடியேன்" என்பாள்.

இப்படியாக நாள் முழுவதும் போய்க் கொண்டிருந்தால் நான் படிப்பது எங்கே? படித்துப் பாஸ் பண்ணுவது எங்கே?........இதோ அண்ணன் நெ. 1 எதற்கோ கூப்பிடுகிறான், கேட்டுவிட்டு வருகிறேன்.

# “அப்பவே சொன்னேனே, கேட்டயா?”

## காட்சி 1.

[வெங்கட்ராமய்யரும், அவர் மனைவி சுந்தரியம்மாளும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

வெங்கட்ராமய்யர் :—என்ன, நான் இப்பவே சொல்லி விட்டேன். பேசாமல் அந்த டில்லிப் பிள்ளையாண்டானுக்கே நம் லலிதாவைக் கொடுப்போம். இந்த உள்ளூர்ப் பிள்ளையாண்டானுக்குக் கொடுப்பதில் எனக்குத் துளிகூட இஷ்டமில்லை.

சுந்தரி :—ஏன் இஷ்டமில்லை? அவனுக்கு என்ன, அழகு இல்லையா, படிப்பு இல்லையா, பணம் இல்லையா........?

வெங்க :—அதைப் பற்றி யாரடி சொன்னு? நான் அதற்காகவா சொன்னேன்?

சுந்த :—பின் எதற்காகச் சொன்னேளாம்? கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த குழந்தையைக் கொண்டு போய்க் கண் காணாத இடத்தில் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே!

வெங்க :—நான் அதற்குச் சொல்லவில்லை யடி. உள்ளூரிலேயே சம்பந்தம் பண்ணிக் கொள்வதில்

எத்தனையோ சங்கடங்கள், தொல்லைகள் இருக்கின்றன. அதற்காகச் சொல்ல வந்தால்........

சுந்த :—ஆமாம், குழந்தை இங்கே பக்கத்திலேயே இருந்தால் உங்களுக்குத் தொல்லையாய்த் தான் இருக்கும்.

வெங்க :—சரி யம்மா. உன் இஷ்டம் போல் செய். அப்புறம் மாத்திரம் என்னை, “ இப்படி வந்து விட்டதே ” என்று கேட்காதே.

## காட்சி 2.

வெங்க :—இந்தா, நான் இப்பவே சொல்லி விட்டேன். உள்ளூர் சம்பந்தத்தைத்தான் பண்ணுவேன் என்று ஒரு காலில் நின்று உன் காரியத்தைச் சாதித்தாய். இப்பொழுது அது போதாதென்று எதற்காகப் பெண்ணையும், மாப்பிள்ளையையும் இந்தத் தெருவிலேயே குடி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறாய்?

சுந்த :—என்ன நீங்கள் இப்படிச் சொல்றேள்? எப்படா பிள்ளைக்குக் கல்யாணம் ஆகும் என்று காத்திருந்தவள்போல் சம்மந்தி அம்மாள் கல்யாணம் ஆனதும் ஆகாததுமாகக் காசிக்குப் புறப்பட்டுப் போய் விட்டாள். குழந்தை ஒத்தாசைக்கு யாரும் இல்லாமல் எப்படி ஒண்டியாய்க் காரியம் செய்வாள்? அதற்காக வந்து........

வெங்க (ஏளனமாய்) :—ஏன் இரண்டு பேரையும் நம்மாத்திலேயே கொண்டு வந்து வைத்துக் கொள்கிறது தானே?

சுந்த :—என்ன, இப்படி நிஷ்டூரமாய்ப் பேசறேள்? அவா ஒன்றும் உங்க நிழலில் வந்து நிற்கக் காத்துக் கொண்டிருக்கவில்லை. அவா சம்பளத்தில் அவா குடித்தனம் பண்ணறா.

வெங்க :—அந்தக் குடித்தனத்தை அங்கேயே பண்ண முடியாதாக்கும்? இந்தத் தெருவுக்கு வந்துதான் பண்ணனு மாக்கும்?

சுந்த :—இந்தத் தெருவுக்கு வந்தால் உங்களுக்கு என்ன? நீங்கள் இந்த வீட்டைத்தான் விலைக்கு வாங்கி யிருக்கேளே யொழிய இந்தத் தெருவையே வாங்க வில்லையே! ஏதோ, குழந்தை கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்போம் என்று நினைத்து அவர்களை எதிர் வீட்டில் குடித்தனம் வைப்போம் என்றால்........

வெங்க (திடுக்கிட்டு) :—என்ன எதிர் வீட்டிலா?

சுந்த :—ஆமாம், எதிர் வீட்டில்தான். ஏன்?

வெங்க :—சரி, ஜமாய். அப்புறம் மாத்திரம் என்னைக் கேட்காதே.

## காட்சி 3.

வெங்க :—ஆமாம். ஆத்தில் இருந்த கிராமபோன் பெட்டி எங்கே காணோம்?

சுந்த :—அவா வாங்கிக் கொண்டு போயிருக்கா.

வெங்க :—யார் அவா?

சுந்த :—மாப்பிள்ளைதான். நேற்று ராத்திரி வந்திருந்தார். "வீட்டில் ரொம்ப 'டல்'லாய் இருக்

கிறது. இந்த கிராமபோன் பெட்டியை எடுத்துக் கொண்டு போய் இரண்டு நாளில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் " என்று சொல்லி எடுத்துக் கொண்டு போனூர்.

வெங் :—ச........ரி.

சுந்த:—என்ன அப்படி இழுத்தாப்போல் சொல்றேள்? கிராமபோன் பெட்டியை எடுத்துக் கொண்டு போனுல் விழுங்கியா விடுவா? பாட்டு வைத்துக் கேட்டு விட்டு இரண்டு நாளில் திருப்பிக் கொடுத்துடரூ.

வெங்க :—சரி, கிராமபோன் திரும்பி வந்தாற் போலத்தான்!

சுந்த :—ஏனும்?

வெங்க :—ஏனுமாவது, தானுமாவது? முதலே வாயிற்போன சாமானுவது திரும்பி வரும். எங்கேயாவது மாப்பிள்ளை கைக்குப் போன பண்டம் திரும்பி வருமா?

சுந்த :—என்னமோ போங்கள்! என்ன இருந்தாலும் நீங்கள் நம் மாப்பிள்ளையைப் பற்றி இத்தனை தாழ்வாகப் பேச வேண்டாம்.

## காட்சி 4.

வெங்க :—இரண்டு நாள் என்று சொல்லி வாங்கிக்கொண்டு போன கிராமபோன் இரண்டு மாதம் ஆகிவிட்டது, திரும்பி வரவில்லை. ஆமாம், இங்கு மாட்டியிருந்த 'வால் கிளாக்' எங்கே? அதை

யும் மாப்பிள்ளை தான் 'இரவல்' வாங்கிக் கொண்டு போயிருக்கிறாரோ?

சுந்த :—அவருடைய கைக் கடியாரத்தை ரிப்பேருக்குக் கொடுத்திருக்கிறாராம். அது திரும்பி வருவதற்கு நாலைந்து நாட்கள் ஆகுமாம். அது வரையில் மணி பார்ப்பதற்கு வேண்டும் என்று வாங்கிக் கொண்டு போனார்.

வெங்க :—சரி, அதுவும் திரும்பி வந்தாற்போலத் தான்.

சுந்த :—என்ன, இப்படி 'அஸ்து' போட்டுக் கொண்டே இருக்கேள்?

வெங் :—நான் சொன்னால் 'அஸ்து' வாய்த்தா னிருக்கும். பின்னாலே நீயே சொல்லுவே.

## காட்சி 5.

வெங்க :—அப்பவே சொன்னேனே கேட்டயா? இப்ப என்னிடம் வந்து அழுது என்ன பிரயோஜனம்?

சுந்த :—இப்படிச் சொன்னால் நான் என்ன பண்ணுவேன்? ஆத்தில் இருக்கிற சாமான் எல்லாவற்றையும் மாப்பிள்ளை இரவல் வாங்கிக் கொண்டு போய் விட்டாரே, என்ன பண்ணுவது?

வெங்க :—நான்தான் அப்பவே முதற்கொண்டு சொல்லிக் கொண்டிருக்கிறேனே. நான் சொன்னதை நீ கேட்டாயா?

சுந்த :—நான் என்ன பண்ணுவேன்? "வீட்டில்

டல்லாய் இருக்கிறது, கிராமபோன் வேண்டும்" என்றார்; கொடுத்தேன். "என்னைத் தேடிக்கொண்டு அடிக்கடி சிநேகிதர்கள் வருகிறார்கள். நாலு நாற்காலி வேண்டும்" என்றார். கொடுத்தேன்........

வெங்க :—"கல்யாணத்திற்குப் போட்டு விட்டுத் திருப்பித் தந்து விடுகிறேன்" என்று வயிரத்தோடு வாங்கிக்கொண்டு போனார். கொடுத்தாய். "இரா வேளையில் மிக்க புழுக்கமாய் இருக்கிறது. 'டேபிள் பான்' கொஞ்சம் கொடுத்தால் தேவலை" என்றார். கொடுத்தாய். "சிநேகிதர்களுக்குக் காப்பி கொடுக்க கொஞ்சம் உங்காத்து 'டீ செட்'டைக் கொடுங்கள்" என்று கேட்டார். கொடுத்தாய்........

சுந்த :—என்னை இப்படி இடித்துக் காட்டினால் நான் என்ன பண்ணலாமாம்?

வெங்க :—நான் என்ன பண்ணலாம்? நான் தான் உள்ளூர் சம்பந்தம் வேண்டாம் வேண்டாம் என்று அப்பவே சொன்னேனே, கேட்டயா?

சுந்த :—இப்ப என்ன பண்ணலாமாம்?

வெங்க :—என்ன பண்ணுகிறது? நம் சாமான் எல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்விட்டபடியால் நாமும் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்விட வேண்டியது தான்!

# சாப்பாடும் கூப்பாடும்

ஒரு வருஷ காலத்துக்குப் பிறகு நான் டில்லியி லிருந்து மூன்று வார லீவில் திரும்பி வந்ததும், என் பழைய ஆபீஸ் நண்பர்கள் எனக்கு அளித்த வர வேற்பு எனக்கே திகைப்பாக இருந்தது. ஏனெனில், அவர்களில் அநேகருக்கு என்னைக் கண்டால் ஒரு மாதிரிதான். தங்களைவிடக் குறைவாகச் சம்பளம் வாங்குகிறேன் என்கிற காரணம் சிலருக்கு. தங் களைவிட நிறையச் சம்பளம் வாங்குகிறேன் என்கிற காரணம் சிலருக்கு. ஐந்து வருஷமாகத் தினந்தோ றும் தன் செலவில் காப்பி ஹோட்டலுக்குக் கூட் டிக்கொண்டு போனவன் இப்பொழுது கொஞ்ச கால மாகக் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விட்டானே என்கிற கோபம் ஒருவருக்கு. அத்தனைக்கும் அவர் கல்யாணமானவர். எனக்குக் கல்யாணமாகி, கஜானா சாவி அம்மாள் கைக்குப் போய்விட்டதால்தான் முன் போல் கூட்டிக்கொண்டு போகவில்லையென்று அவர் அறிந்து கொள்ளவில்லை. இன்னொருவருக்கு என் மேல் இன்னொரு விதத்தில் கோபம். இத்தனை நாளாகத் தடிப் பிரம்மசாரியாக இருந்தவன் இப் பொழுது கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டான் பார்த்தாயா என்று அவருக்கு ஆத்திரம். முன் னெல்லாம்போல் அவருடன் சேர்ந்து நான் சினிமா,

சீட்டு, அரட்டை என்று கொட்டம் அடிப்பதில்லை. ஆக இத்யாதி காரணங்களால் என் பழைய நண்பர்கள் என் மீது கோபம் கொண்டிருந்ததால் அவர்கள் இத்தனை ஆர்வமுடன் வரவேற்பார்கள் என்று நான் எதிர் பார்க்கவே யில்லை.

ஸெண்ட்ரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காலெடுத்து வைக்கவில்லை, அதற்குள் போர்ட்டர்கள் பிய்த் திழுப்பதுபோல் என் நண்பர்கள் என்னைப் பிடித்திழுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஸூட் கேஸைப் பிடித்திழுத்தார் ஒருவர். படுக்கையைப் பிடித்திழுத்தார் இன்னொருவர். கைப் பெட்டியைப் பிடித்திழுத்தார் மூன்றாவது மனிதர். என் மனைவிக்கு விஷயம் இன்ன தென்றே புரியவில்லை. சுற்றி நின்று கொண்டிருந்த போர்ட்டர்களுக்கோ இதை விடத் திகைப்பாயிருந்தது.

"பார்த்தா பெரிய மனுசங்களாகத் தோணுது, நமக்குப் போட்டியா போர்ட்டர் வேலை செய்ய வந்துட்டாங்களே?" என்று அவர்களுக்கு ஆச்சரியம்! என்னை வரவேற்பதற்காக வந்த மாமனாரோ தூரத்தில் இருந்து இதை யெல்லாம் வேடிக்கை பார்த்த வண்ணம் நின்று கொண்டிருக்கிறார்!

"என் பெட்டியை விடுங்கோ ஸார், என் படுக்கையை விடுங்கோ ஸார்! என் கைப் பெட்டியை விடுங்கோ, ஸார்! எதை விட்டாலும், விடா விட்டாலும் ஆளை விடுங்கோ ஸார்" என்று கதறினேன். ஆனால் அவர்கள் கேட்பதாயில்லை. குண்டுக் கட்டாக

என்னை பிளாட்பாரத்துக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்த பிறகுதான் விட்டார்கள். சற்று ஆச்வாசப் படுத்திக் கொண்டு, ஏன் என்னை இப்படி ஹிம்சிக்கிறார்கள் என்று விசாரித்தேன்.

"நேரே எங்கள் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் போனால் தானேச்சு!" என்றார் ஒருவர்.

"எங்கள் வீட்டுக்கு முன்னால் வாரும், பின்னால் அவர் வீட்டுக்குப் போகலாம்" என்றார் இன்னொருவர்.

இம்மாதிரி எல்லாரும் நெருக்கி யடிக்கவே, "சரி, இப்போதைக்கு என்னை விடுங்கள். டில்லிக்குத் திரும்பிப் போவதற்குள் கட்டாயம் உங்கள் எல்லாருடைய வீட்டுக்கும் வந்து சாப்பிட்டு விட்டுப் போகிறேன்" என்றேன்.

"டேய்! ஏமாற்றினாயோ என்ன நடக்கும் தெரியுமோல்லியோ?" என்று பயமுறுத்தினார் ஒருவர்.

"சீச்சீ! சாப்பிடுவதற்கு வலிக்கவா போகிறது? கட்டாயம் வருகிறேன்னா?" என்றேன். ஆனாலும் அவர் விடுவதாயில்லை.

"டேய்! உன் பெண்டாட்டியையும் அழைத்துக் கொண்டு வரவேண்டுமாக்கும், தெரிந்ததா" என்று கூறினார்.

"தம்பதி சமேதராகக் காட்சியளிக்க வேண்டும். ஞாபகம் இருக்கட்டும்" என்றார் சற்று நாசூக்காகப் பேசத் தெரிந்த ஒருவர்.

" உங்கள் குடும்பத்தோடு வந்து சேர வேண்டும் " என்றார் இன்னொருவர்.

அவர் ' குடும்பம் ' என்று குறிப்பிட்டது என் மனைவியை மாத்திரம்; என் தாயார், தமக்கை, தம்பி முதலியவர்களை யல்ல. கடைசியில் அவர்களிடமிருந்து எப்படியோ தப்பி வீடு வந்து சேர்ந்தேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன் !

பழைய ஆபீஸ் நண்பர்கள் தான் இத்தனைபிடிவாதம் பிடித்தார்கள் என்றால் பக்கத்து வீட்டுக்காரர்கள் அதற்கு மேல் இருந்தார்கள். அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யருக்கு எச்சில் கையால் காக்காய் ஓட்ட வேண்டிய சிரமம் கூடக் கிடையாது, அவர் குணம் தெரிந்து ஒரு காக்கையும் அவர் வீட்டுப் பக்கம் தலை காட்டுவது கிடையாது. அப்பேர்ப்பட்டவர், " ஸார், கட்டாயம் ஒரு நாள் எங்கள் வீட்டில் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் " என்று சொன்னதும் எனக்கு மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விடவேண்டும் போல் தோன்றிற்று. ஒரு வேளை காதில் தவறுதலாக விழுந்திருக்கலாமோ என்று நினைத்துத் திரும்பக் கேட்டதில் அதே விஷயம் ஊர்ஜித மாயிற்று.

அண்ணாசாமி அய்யரே சாப்பிடக் கூப்பிடும் பொழுது பாக்கிப் பேர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா ? ஒரே சாப்பாடு அழைப்புகளாகவே வந்து குவிந்துவிட்டது. எனக்குக் கிடைத்த அழைப்புகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ள வேண்டுமானால்

நான் வாங்கிக்கொண்டு வந்த மூன்று வார லீவு போதாது, இன்னும் இரண்டு வார லீவு வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பட்டது!

ஆனல் என்ன காரணமோ, தெரியவில்லை, எனக்கு என் மாமனர் வீட்டை விட்டு விட்டு, வருந்திக் கூப்பிட்டவர்கள் எல்லார் வீட்டுக்கும் போய்ச் சாப்பிடத் தோன்றவில்லை. முன்னெல்லாம் மாமனர் வீட்டில் ஒரு நாள் தங்கினலும் எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். (ஏன், அவர்களுக்கும் கஷ்டமாகத் தான் இருக்கும்.) ஆனல் இப் பொழுதோ, பாங்கியில் பணம் வைத்திருப்பவன் எப்படித் 'தெம்பாக' இருப்பானே, அதைப் போல, "நீங்களில்லா விட்டால் நூறுபேர்" என்கிற 'தெம்பு' இருந்ததால் எனக்கும் கஷ்டமாகத் தோன்றவில்லை, மாமனருக்கும் கஷ்டமாகத் தோன்றவில்லை. ஆகவே, நான் பாட்டில் மாமனர் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

லீவு முடிந்து, டில்லிக்குத் திரும்ப வேண்டிய காலம் நெருங்க நெருங்க என்னைச் சாப்பிட அழைத்தவர்களின் நிர்ப்பந்தம் அதிகரித்துக் கொண்டே வந்தது. மாமனர் வீட்டை விட்டு வெளியில் தலைகாட்டக் கூடப் பயமாகப் போய் விட்டது. வெளியில் தலை காட்டினலோ, விருந்துக்கு அழைத்த யாராவது ஒருவர் பிடித்துக் கொண்டு விடுகிருர்.

"என்ன ஸார்! இப்படி ஏமாற்றுகிறீரே, நியாயமா?" என்கிறார் ஒருவர். "இப்படிச் செய்வது தர்மமா?" என்று தர்ம சாஸ்திரத்தை எடுத்துக் காட்டுகிறார் இன்னொருவர். "எங்கள் வீட்டுக் கெல்லாம் வருவேளா? நாங்களும் பெண்ணைப் பெற்றுக் கொடுத்தால் வருவேள்" என்று கிண்டலாகப் பேசுகிறார் இன்னொருவர்.

எனக்குப் பெரிய தர்ம சங்கடமாக இருந்தது. நான் டில்லிக்குத் திரும்ப வேண்டிய நாளும் நெருங்கி விடவே ஒருவர், இருவர் வீட்டுக்குப் போய் பாக்கிப் பேர் வீடுகளுக்குப் போகாவிட்டால் தகராறு வரும் என்று, யார் வீட்டுக்கும் போகாமல் மாமனார் வீட்டிலேயே இருந்தேன்.

**நா**ன் டில்லிக்குப் புறப்படுவதற்கு இரண்டு நாள் இருக்கும். திடீரென்று, இருந்தாப்போலிருந்து, டில்லிக்குத் திரும்பாமல் சென்னையிலேயே ஒரு கம்பெனியில் வேலை ஒப்புக் கொள்வது என்று தீர்மானித்தேன். அடுத்த நாள் காலை டில்லி வேலைக்கு ராஜிநாமா எழுதிக் கொண்டு தபாலாபீஸ் நோக்கிப் புறப்பட்டேன். வாசலுக்கு வந்ததும், சாப்பாட்டுக்கு அழைத்தவர்கள் யாராவது பார்த்தால் சங்கட மாச்சே என்று நான் கதி கலங்கிக் கொண்டிருக்கையில் யம கிங்கரர் போல் வந்து விட்டார் ஒருவர். "ஓய்! என்ன வென்று நினைத்துக் கொண்டீர்?" என்று ஆரம்பித்தார்.

எனக்குப் பயமாகப் போய்விட்டது. சாப்பாட்டுக்கு டிமிக்கி கொடுத்ததற்காகத் தம் கையில் உள்ள 'வாக்கிங் ஸ்டிக்'கால் நம் மண்டையில் போடப் போகிறார் என்று பயந்து கொண்டு, "இல்லே, வரணும்னுதான் இருந்தேன்" என்று ஆரம்பித்தேன். அதற்குள் அவர்' "என்ன ஐயா! நம்மிடம் சொல்லாமல் ஏமாற்றி விடலாம் என்று பார்த்தீரா? நீர் இங்கேயே இருக்கப் போகிற சமாசாரத்தை நம்மிடம் சொன்னீரா?" என்று அதட்டினார். "சரி, அடுத்தபடியாக, 'சாப்பாட்டுக்கு எப்பொழுது வரப் போகிறீர்?' என்ற கேள்வி பிறக்கப் போகிறது. இதற்கு என்ன பதில் சொல்வது?" என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் என்ன ஆச்சரியம்! குதிரை கீழே தள்ளி விட்டது மன்றி, குழியையும் பறித்தது என்று சொல்வார்களே, அதைப் போல், "எப்ப ஐயா, நமக்கெல்லாம் சாப்பாடு போடுவதாக உத்தேசம்?" என்று கேட்டார் அவர்!

**நா**ன் சென்னையில் உத்தியோகம் ஒப்புக்கொண்டு ஒரு மாத காலம் ஆகப்போகிறது. டில்லியிலிருந்து திரும்பி வந்ததும் அத்தனை வருந்தியழைத்த நண்பர்கள் எல்லாரையும் தினம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்; பேசிக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், ஒருவராவது, "ஏன் சாப்பிட வரவில்லை?'" என்று கேட்க வேண்டுமே, கிடையாது.

டில்லிக்குத் திரும்பிப் போய் விடுவேன் என்று இருந்தபோது, நான், நீ என்று முந்திக்கொண்டு சாப்பிட அழைத்தவர்கள், இப்போது, எப்பொழுது கூப்பிட்டாலும் நான் வரத் தயாராயிருக்கும் பொழுது (நான் இங்கேயே இருப்பது என்று நிச்சய மானதிலிருந்து மாமனர் வீட்டிலும் சாப்பாடு கிடையாது!) ஏன் கூப்பிடவில்லை என்று தெரிய வில்லை. யாராவது மனோ தத்துவ சாஸ்திரியைக் கண்டு தான் இதன் காரணத்தை விசாரிக்க வேண்டும்.

# கண்ணன் காட்டிய வழி

[குரு க்ஷேத்திரத்தில் கண்ணன் காட்டிய வழியைப் பற்றி பகவத் கீதையில் படித்திருப்பீர்கள். ஆனால் அன்று ஹாஸ்டலில் கண்ணன் காட்டிய வழியைப் பற்றி இதைப் படித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்]

ராமு :—கண்ணா ! என் பழைய நண்பர்களுக்கும் புதிய நண்பர்களுக்கும் இடையே என்னைக் கொண்டு போய் நிறுத்து. நான் பொடி போடக் கூடாது என்று புத்தி சொல்ல வந்திருக்கும் இந்தப் பழைய நண்பர்களை நான் பார்க்க வேண்டும்.

[கண்ணன் ராமுவை ஹாஸ்டலின் ஓர் அறைக்கு அழைத்துச் செல்கிறான். அதில் பழைய நண்பர்கள் ஒரு புறமும், புதிய நண்பர்கள் ஒரு புறமும் அணிவகுத்து நிற்கிறார்கள்.]

கண்ணன் :—ராமு ! இதோ இங்கு கூடி நிற்கும் உன் பழைய நண்பர்களைப் பார் !

ராமு (பழைய நண்பர்களைப் பார்த்ததும்) :— கண்ணா ! எனக்குப் புத்தி சொல்ல வேண்டி இங்கு திரண்டு நிற்கும் என் பழைய நண்பர்களைப் பார்த்ததும் என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. மயிர் சிலிர்க்கிறது. பொடி மட்டை

கையினின்றும் நழுவுகிறது.. என்னால் நிற்க முடிய வில்லை. என் மனம் சுழலுகின்றது.

இவர்கள் இஷ்டத்துக்கு மாறாக நடப்பதில் எனக்கு நன்மை தோன்றவில்லை. கண்ணா! நான் பொடியை விரும்புகிலேன். அதனாலுண்டாகும் இன்பங்களையும் வேண்டுகிலேன். என் புதிய நண் பர்கள் என்னைக் கைவிட்டாலும் விடட்டும். என் பழைய நண்பர்கள் இஷ்டத்துக்கு விரோதமாக நான் நடக்கமாட்டேன்.

[கையில் இருக்கும் பொடி மட்டை யைத் தூர எறிந்து விட்டுப் பக்கத் தில் ஒரு நாற்காலியில் சாய்கிறான்]

கண்ணன் :—ராமு, இந்த சமயத்தில் இவ்வுள் ளச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இது மாணாக்கர்களுக்குத் தகாது. புது சிநேகத்தைத் தடுப்பது, அபகீர்த்தி தருவது—ராமு! இழிபட்ட மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில், பழைய நண் பரை மறப்போனே!

ராமு :—கண்ணா! என் பழைய நண்பர்களான சங்கரனையும் கோவிந்தனையும் நான் எப்படி மறுத் துப் பேசுவேன்! மேலும், நான் இவர்கள் சொன்ன படி கேட்பதா, அல்லது அங்கே நிற்கும் என் புதிய சிநேகிதர்களின் சொற்படி கேட்பதா, எது சரி யென்று தெரியவில்லை. எது நன்றென்பதை எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லுக! நான் உன் சீடன். உன்னையே சரண மெனப் புகுந்தேன்.

கண்ணன் (சிரித்துக் கொண்டே) :—ராமு! துயரப்படத் தகாதார் பொருட்டுத் துயரப் படுகின்றாய், ஞான வுரைகளு முரைக்கிறாய். பழைய நண்பர்களைப் பற்றியோ, அல்லது அவர்கள் வருத்தம் அடைவதைப் பற்றியோ, துயர் கொளார் அறிஞர். பொடியானது இதன் முன் எக்காலத்திலும் இல்லாது இருந்ததில்லை. இனிமேல் இல்லாமற் போகவும் மாட்டாது. பொடி போடும் வழக்கம் இவ் வுலகம் முழுதிலும் பரந்து நிற்கும் பொருள் என்று அறி. இதனை யழித்தல் யார்க்கும் இயலாது. நைந்த துணிகளைக் கழற்றி எறிந்து விட்டு மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, பொடி போட விரும்புகிறவன் பழைய நண்பர்களைக் கை விட்டு விட்டுப் புதிய நண்பர்களைக் கைக்கொள்கிறான். ஆகவே இன்பம், துன்பம், இழவு, பேறு, வெற்றி, தோல்வி இவற்றை நிகரெனக் கொண்டு நீ பொடி போடத் தொடங்குக. இந்தா பொடி மட்டை!

[பொடி மட்டையை எடுத்துக் கொடுக்கிறான்.]

ராமு :—கண்ணா! நான் மாட்டேன். ஊருக்குப் போனதும் என் பெற்றோர்கள் இந்த வழக்கத்தைக் கண்டு என்ன சொல்லுவார்களோ என்று பயமாயிருக்கிறது. ஆகவே பொடி போடாமலேயே தான் இருந்து விட்டால் என்ன?

கண்ணன் :—ராமு! பொடி போடாமல் இருப்பதனாலேயே ஒருவன் நல்லவன் ஆகி விடுவதில்லை. கலாசாலை மாணாக்கர்கள் எவரும் ஒரு கெட்ட பழக்க

யின்றி இருப்பதில்லை. இக் கலாசாலைகளின் இயற்கைக் குணங்களே அப்படி எல்லாருக்கும் ஒரு பழக்கம் ஏற்படுத்தி விடுகின்றன. ராமு! என்னைப் பார்! நான் சோம்பரில்லாமல் எப்பொழுதும் பொடி போட்டுக் கொண்டே இருக்கிறேன். நான் மாத்திரம் அப்படி இருக்காவிடில் எல்லா மாணுக்கர்களும் என் வழியைப் பின்பற்றுவார்கள். இதனுல் கலாசாலை களுக்கு மாணுக்கர்கள் வருவது நின்று போகும். கடைசியில் இந்தக் கலாசாலைகளை யெல்லாம் மூடிய குற்றம் என் மேல் சாரும். ஆகவே பழைய நண்பர் களின் சொல்லைத் துறந்து பொடி போடக் கற்றுக் கொள்வாய்!

ராமு:—கண்ணு! எனக்கு என்னமோ இன்னும் யோசனையாய்த்தான் இருக்கிறது. என்னைப் போல் பொடி போடக் கற்றுக் கொண்டோர் இன்னும் யாரேனும் உளரோ!

கண்ணன்:—எத்தனையோ பேர் உளர். ராமு! இந்தப் பொடி போடும் வழக்கத்தை நான் முன்னர் கிட்டனுக்குச் சொல்லிக் கொடுத்தேன். கிட்டன் கோபுவுக்குச் சொல்லிக் கொடுத்தான். கோபு ரங்கனுக்குச் சொல்லிக் கொடுத்தான். இப்படியாகத் தானே இந்த வழக்கம் கலாசாலை முழுவதும் பரவிக் கொண்டு வருகிறது. இன்று அந்தப் பழைய வழக்கத்தையே நான் உனக்குப் போதித்தேன்—நீ என் பக்தனும் தோழனும் என்பது கருதி. ஆகவே பொடி போட ஆரம்பிப்பாய்.

ராமு :—கண்ணா ! இதற்கு முன்னால் எனக்கு உண்டாகி யிருக்கும் ஒரு சந்தேகத்தை நிவர்த்திப்பாய். பொடியை ஆரம்பித்தவன் பின்னால் தன் பெற்றோர்களின் துர்ப் புத்தியாலோ, அல்லது பழைய சிநேகிதர்களின் சகவாசத்தாலோ, இவ் வழக்கத்தை விட்டு விட்டால் என்ன கதி அடைகிறான் ?

கண்ணன் :—ராமு ! அவனுக்கு எவ்விடத்திலும் அழிவில்லை. அவன் கொஞ்ச காலம் இப்படி இருந்து விட்டுக் கடைசியில் என்னை வந்து அடைகிறான்; அல்லது என் நண்பர்கள் யாரிடமாவது சிக்கிக் கொள்கிறான். பிறகு பண்டைப் பழக்கத்தால் இழுக்கப்பட்டுத் திரும்பவும் பொடி போடத் தொடங்குகிறான்.

ராமு :—கண்ணா ! கலாசாலை மாணக்கர்களிடம் எத்தனையோ கெட்ட வழக்கங்கள் இருக்க இதை மட்டும் நீ ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசித்தது போல் உபதேசிப்பானேன் ?

கண்ணன் :—ராமு! எவன் புகையிலையை ஏதாவது ஒரு வழியில் உபயோகிக்கிறானோ, அவனை நான் மற்ற மாணக்கர்களிலும் சிறந்தவனாகக் கருதுகிறேன். ஆனால் இதில் புகை பிடிப்பதைக் காட்டிலும் புகையிலை போடுவது சிறந்தது, புகையிலை போடுவதைக் காட்டிலும் பொடி போடுவது சிறந்தது என்று நான் கருதுகிறேன். ஆகவே பொடி போடக் கற்றுக்கொள். இம் மூன்று பழக்கங்களிலும் பொடி

போடுவதன் மூலம்தான் எனக்கு ஒருவன் மிக்க திருப்தி அளிக்கக் கூடும். இந்த வழக்கத்தில் ஸ்திர மாக நின் சித்தத்தைச் செலுத்த நின்னுல் முடியா தென்றால், பழகிப் பழகி அதைக் கற்றுக் கொள்ள விரும்பு.

ராமு :—கண்ணு! ரொம்ப சரி. ஆனல் பொடி போடுவதால் உண்டாகும் நன்மைதான் என்ன ?

கண்ணன் :—ராமு! பொடி போடத்தான் உனக்கு அதிகாரம் உண்டே ஒழியே, அதன் பலன் களில் உனக்கு எப்பொழுதுமே அதிகாரம் இல்லை. இருந்தாலும் உரைக்கின்றேன் கேள்.

இந்தப் பொடியின் மகிமையை ரொம்ப காலத் துக்கு முன்னரே உலகத்தின் எல்லாப் பாகங்களிலு முள்ள ஜனங்களும் அறிந்து கொண்டு விட்டார்கள். இதற்காக வித விதமான பொடி டப்பிகள், வெள்ளி யிலும் தங்கத்திலும் செய்யப்பட்டன. “பொடி போடுவது புருஷ லக்ஷணம்” என்னும் பழமொழி கூட அதனல்தான் உண்டாயிற்று.

ஒரு சிமிட்டாப் பொடியின் மகிமையை என்ன வென்று கூறுவேன்! நண்பர்களை ஒன்று சேர்த்து வைப்பது அது. பாடங்களை ஞாபகத்தில் வைப்பது அது. பரீட்சை காலத்தில் தூக்கம் வராமல் தடுப்பது அது. ஜல தோஷத்தை விரட்டி அடிப்பது அது. பெரிய மனுஷத்தனம் சம்பாதித்துக் கொடுப்பது அது.

ராமு :—கண்ணு! கடைசியாக ஒரு சந்தேகம்.

பொடி போடுகிறவன் என்ன அடையாளங்கள் உள்ளவன், எப்படி ஒழுகுவான் என்பதையும் எனக்கு எடுத்துச் சொல்லக் கடவாய்.

**கண்ணன்** :—பொடி போடுகிறவன் வாத்தியாரையும் பையன்களையும் சமமாகக் காண்பான். இரண்டு பேரிடமும் பொடி கடன் கேட்பான். பரீட்சையில் தேறுவதையும், தேருமல் இருப்பதையும் நிகராகக் காண்பான். மானத்தையும் அவமானத்தையும் நிகராகக் கருதுவான். நண்பரிடத்தும், பகைவரிடத்தும் நடு நிலைமை பூண்பான்—எல்லாரிடமும் பொடி கேட்கப் போக வேண்டுமோ, இல்லையோ, அதற்காக. இன்னும் அவன் மூக்கு மிக நீண்டிருக்கும். கையில் ஒரு காலிப் பொடி மட்டை விளங்கும். கண்ணில் ஒரு விறுவிறுப்புத் தோன்றும்.

ராமு! இந்த ரகஸ்யமான சாஸ்திரத்தை உனக்கு உரைத்தேன். இதை உணர்ந்தோன் புத்திமானவான்.

**ராமு** :—கண்ணு! மிகுந்த சந்தோஷம். இதற்காக நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!

**கண்ணன்** :—ராமு! நீ பொடி போடக் கற்றுக் கொள்வதைக் காட்டிலும் எனக்குச் செய்யக் கூடிய கைம்மாறு வேறு ஒன்றும் இல்லை. இனிமேலாவது எது செய்யத் தக்கது எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் என்னைப் பிரமாணமாகக் கொள்.

**ராமு** :—அப்படியே!

[ஒரு சிமிட்டாப் பொடி எடுத்து உறிஞ்சுகிறுன்.]

# திருச்சி ஸ்தல புராணம்

**ப**த்து வருஷங்களுக்குப் பிறகு, என் சொந்த ஊராகிய திருச்சிக்குச் சென்றிருந்தேன். ஊரை விட்டுப் போய் வெகு காலம் ஆகிவிட்டதால் திருச்சி மிகவும் மாறுதல் அடைந்திருக்கும் என்று நினைத்தேன். ஆனால் மாறுதல் ஒன்றையும் காணேம். பத்து வருஷங்களுக்கு முன் எங்கள் வீட்டுக்கு முன்னால் இருந்த பழைய முனிசிபல் குழாய் அதே பழைய இடத்தில்தான் காட்சி யளித்தது. முன் போலவே குழாயைச் சுற்றி குடங்கள் மயமா யிருந்தது. குடத்தைச் சுற்றி, குடங்களுக்கு நடுவில், குழாயைச் சுற்றி, குழாய் அண்டையில், எங்கே பார்த்தாலும் ஸ்திரீகள்! ஒரு குடம் நிரம்பினதும் கால் மணி நேரம் குழாய் ஜலம் கீழே வீணுகப் போய்க் கொண்டிருக்கும். இடையில் யார் குடம் முந்தி, யாருக்கு அவசரம் அதிகம் என்று இங்கே சண்டை நடந்து கொண்டிருக்கும். குடங்களோடு குடங்கள் மோதும். அந்தப் பழைய காட்சியைத் தான் நான் அன்றும் பார்த்தேன்.

“கொஞ்சம் அதிகப்படியான குழாய்களை வைத்து, கொஞ்சம் அதிகப்படி நேரமும் ஜலத்தை விட்டு, தேவையானல் கொஞ்சம் அதிகப்படி வரியும் வசூலித்துக் கொண்டால் என்ன, இந்த முனிசிபா

விட்டி அதிகாரிகள்? " என்று ஒரு கணம் நினைத்தேன். ஆனால் மறு கணமே நான் அம்மாதிரி நினைத்தது எவ்வளவு பிசகென்றும், முனிசிபல் அதிகாரிகள் அம்மாதிரி செய்யாமல் இருப்பது எவ்வளவு புத்திசாலித்தனம் என்றும் புலப்பட்டது. குழாய்கள் மாத்திரம் அதிகமாகி, குழாய்ச் சண்டைகள் நின்றுவிட்டால், திருச்சி வாழ்க்கையில் ஒரு ருசிகரமான அம்சம் குலைந்து போய்விடும். பெண்மக்களின் கலகல சப்தம் இல்லாமல், தெருக்கள் சூன்யமாய் விளங்கும். இன்னும், ஒருவர் வீட்டு விஷயங்கள் இன்னொருவருக்குத் தெரியாமற்போய், வாழ்க்கையே 'சப்' பென்று ஆகி விடும்.

**நா**ன் ஊர் போய்ச் சேர்ந்த அன்று, காப்பி சாப்பிட்டானதும், ஒரு புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு திண்ணையில் வந்து அமர்ந்தேன். அது ஓர் ஆராய்ச்சிப் புஸ்தகம். "இந்தியாவில் காணப்படும் கூழாங் கற்கள் கிட்டத்தட்ட அமெரிக்காவில் காணப்படும் கூழாங் கற்களைப் போலவே இருக்கின்றன" என்னும் ஓர் ஆதாரத்தை வைத்துக் கொண்டு, ஒரு காலத்தில் இந்தியர்கள் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினார்கள் என்று அந்தப் புஸ்தகம் வாதிக்கிறது. ஆனால் புஸ்தகத்தில் மனது ஓட மறுக்கவே, தலையை நிமிர்த்தினேன். எதிரே இருந்த குழாய்க் கட்டிடத்தின் மீது கற்பலகையில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் என் கண்களுக்குத் தென்பட்டன.

" மன்னரின் முடி சூட்டு விழா ஞாபகார்த்தமாக ராம சுவாமி அய்யரின் தர்மம் " என்று அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் பலகையை நான் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். திருச்சியில் உள்ள முக்கால் வாசிக் குழாய்களின் மீதும் அது மாதிரியேதான் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். இருந்தாலும் அன்று என்னமோ அந்த எழுத்துக்கள் என்றுமில்லாத ஒரு புது உணர்ச்சியை என் மனத்துள் எழுப்பின. இந்தச் சமயத்தில் ராத்திரியெல்லாம் ரயிலில் மூன்றும் வகுப்பில் வந்த அலுப்பினால் என் கண்கள் தாமாகவே மூடின.

* * *

**நா**ன் கண்களைத் திறந்து பார்த்ததும் எதிரேயிருந்த குழாயைக் காணவில்லை. எங்கே பார்த்தாலும் ஒரே மண் மேடாய் விளங்கிற்று. நான் உட்கார்ந்திருந்த திண்ணையையும் என் வீட்டையும் காணவில்லை. நானும் ஒரு மண் மேட்டின் மீதுதான் உட்கார்ந்திருந்தேன்.

விஷயம் தெரியாமல் நான் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகையில், தூரத்தில் யாரோ ஒருவர் எதையோ தோண்டி எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர் என்னத்தைத் தோண்டி எடுத்துக்கொண்டிருந்தார் என்று நினைக்கிறீர்கள்? எல்லாம் நான் முன்பு குழாயில் பார்த்த கற் பலகை

களே! எல்லாவற்றிலும் மன்னரின் முடி சூட்டுவிழா விற்காக இன்னாரின் தர்மம் என்று எழுதியிருந்தது.

எனக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. கடைசியில் அந்த மனிதரைக் கண்டு பேசிய பிறகு நடந்த விஷயம் ஒருவாறு புரிந்தது.

நான் கண் மூடித் திறப்பதற்குள் ஐயாயிரம் வருஷங்கள் கழிந்து விட்டன. திருச்சி இருந்த இடம் மண் மேடு இட்டு விட்டது! என்ன காரணத் தினலோ நான் மாத்திரம் பிழைத்து இருந்தேன்!

"ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னர் இங்கே ஒரு பெரிய நகரம் இருந்ததாகச் சொல்லிக்கொள்ளு கிறார்கள். அதைப் பற்றி ஆராய்வதற்காகத் தான் நான் இங்கெல்லாம் தோண்டிக் கொண்டிருக் கிறேன். அதிர்ஷ்ட வசமாக நான் கஷ்டப்பட்டது வீணகப்போகவில்லை. இதோ கிடைத்திருக்கும் கற்பலகைகளின் ஆதாரம் ஒன்று போதும். இந்தப் பட்டணத்தின் வாழ்க்கையை அப்படியே நேரில் கண்டது போல் சித்தரித்து விடுவேன்" என்ருர் அந்த மனிதர்.

பத்து நாளைக்குப் பிறகு அவர் தாம் எழுதிய ஆராய்ச்சியை, "வாசித்துப் பாரும்" என்றுகொண்டு வந்து கொடுத்தார். அது பின் வருமாறு:—

இந்த நகரத்தைப் பற்றித் தெரிந்து கொள்வ தற்காக நான் 4347 இடங்களில் தோண்டிப் பார்த்

தேன். அவற்றில் 998 இடங்கள் தான் பலன் அளித்தன. அங்கங்கே "மன்னரின் முடி சூட்டு விழாவுக்காக இன்னாரின் தர்மம்" என்று எழுதப் பட்ட கற்பலகைகள் கிடைத்தன. இதிலிருந்து பின் வரும் விஷயங்கள் தெளிவாகின்றன :—

அ. இந்தக் கற்பலகைகள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதால் இங்கிருந்த ஜனங்களின் தாய் பாஷை ஆங்கிலமாக இருந்திருக்கவேண்டும். ஆகவே ஆங்கிலேயர்கள் என்று முன்னொரு காலத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் இங்கு வசித்திருக்க வேண்டும். இதற்கு மற்றோர் ஆதாரம் இந்தக் கற்பலகைகளில் கண்டுள்ள பெயர்களே யாகும். ராமசாமி என்ற பெயர் 'ராம்சே' என்னும் ஆங்கிலப் பெயரின் திரிபாக இருக்கவேண்டும். 'சாமி' என்னும் பெயர் 'Sam' என்னும் ஆங்கிலப் பெயராகும். இன்னும் உதாரணங்கள் வேண்டுமானால், இத்துடன் கண்டுள்ள அனுபந்தத்தைக் காணவும்.

ஆ. மன்னரின் முடி சூட்டு விழா என்பதிலிருந்து பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன.

i. மன்னரின் முடி சூட்டு விழாவை ஜனங்கள் இத்தனை ஆடம்பரமாகக் கொண்டாடி இருப்பதிலிருந்து இங்கிருந்த ஜனங்கள் மிகவும் ராஜ விசுவாசம் உள்ளவர்கள் என்று தெரிகிறது. அத்துடன் இம்மாதிரி ஏகப்பட்ட கற்பலகைகள் அகப்படுவதால் மன்னர் ஒரு வேளை இந்த ஊருக்கே வந்து முடி சூட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

ii. முடி சூட்டுவது என்னும் வழக்கம் இந்த மன்னர் காலத்தில்தான் ஆரம்பித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனங்கள் இந்த வைபவத்தை இத்தனை ஆடம்பரமாகக் கொண்டாடி யிருக்கமாட்டார்கள். இவருக்கு முன்னால் இருந்த மன்னர்கள் எல்லாம் முடி சூடா மன்னர்களாய் இருந்திருக்க வேண்டும்.

இ. தர்மம், தர்மம் என்று எல்லாவற்றிலும் கண்டிருக்கிறதே யொழிய, எதைத் தர்மம் செய்தார்கள் என்று வெகு காலம் தெரியவில்லை. அதிர்ஷ்டவசமாகக் கடைசியில் ஒரு தடையம் கிடைத்தது. எக்ஸிபிட் 938 ஐப் பார்த்தால் அது விஷயம் விளங்கும். அதில் இந்தத் "தண்ணீர்த் தொட்டி" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. கிணறுகளைத் தான் அவர்கள் அப்படித் தொட்டி என்று குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆகவே அந்தக் காலத்தில் இந்த ஊரில் இருந்த ஜனங்கள் மிகவும் ஜலக் கஷ்டப் பட்டிருக்க வேண்டும் என்றும், ஆகவே மன்னரின் முடி சூட்டு விழாவை உத்தேசித்துப் பணக்காரர்கள் நிறையக் கிணறுகள் தோண்டி யிருக்க வேண்டும் என்றும் ஏற்படுகிறது.

இதனால் இந் நகரத்துக்குப் பக்கத்தில் நதியே இருந்ததில்லை என்றும் தெரிகிறது. இந் நகரத்தின் பக்கத்தில் காவேரி என்னும் நதி இருந்ததாகச் சில பழம் புஸ்தகங்களில் கண்டிருக்கிறது. என்னுடைய

இந்த ஆராய்ச்சியால் அது சுத்தப் பொய் என்று நன்கு நிரூபிக்கப்படுகிறது. நிற்க.

இந்தச் சமயத்தில் 'டங்' என்ற ஒரு சப்தம் கேட்டு நான் கண் விழித்துக் கொண்டேன். ஆராய்ச்சியாளரையும் மண் மேட்டையும் காணும்! பழைய குழாய்ச் சண்டைதான் எதிரில் நடந்து கொண்டிருந்தது! சண்டையில் குடங்கள் ஒன்றோ டொன்று மோதிக் கொண்டது தான் நான் கேட்ட சப்தம்.

அன்று சாயந்திரம் நான், "ராமசுவாமி அய்யரின் தர்மம்" என்று எழுதி வைத்த 'தர்மகர்த்தா' ராமசுவாமி அய்யரைக் கண்டேன். எதனால் கிட்டத் தட்ட எல்லாக் குழாய்களிலும் இம்மாதிரி தர்மம் என்று எழுதப்பட்டிருக்கிறது என்று கேட்டேன். முதலில் "சொல்ல முடியாது. பரம ரகசியமான விஷயம்" என்று 'பிகு' பண்ணிக் கொண்டார். கடைசியில் சொன்னார்.

அதாவது, முனிசிபல் வரிக்குப் பயந்து கொண்டு ஜனங்கள் குழாய்களை வீட்டுக்குள் வைக்காமல் தங்கள் வீட்டு வாசலில் வைத்துக் கொண்டார்களாம். இவை 'பொது' என்று அர்த்தம். இவற்றுக்கு முனிசிபல் வரி கிடையாதாம். ஆனால் கொஞ்ச நாள் கழித்ததும் முனிசிபாலிடியார் விழித்துக் கொண்டார்களாம். இம்மாதிரி குழாய்களை அவர்கள் அனுமதிக்க மறுக்கவே, ஜனங்கள் தங்கள்

பாரத்தை மன்னரின் மீது போட்டார்களாம். 'மன்னரின் முடிசூட்டு விழாவுக்காக' என்று போட்டுவிட்டால் அந்த முனிசிபாலிடியார் என்ன பண்ண முடியும்? இதுதான் ரகசியம்.

ஐயாயிரம் வருஷங்களுக்கு அப்பால் வரப் போகும் அந்த ஆராய்ச்சியாளருக்கு என் அன்பார்ந்த அனுதாபங்கள்!

# வரதட்சிணை வேண்டாம்!

## காட்சி 1.

[பாத்திரங்கள்: வெங்கட்ராமய்யர், அவர் மனைவி சுந்தரி அம்மாள் அவர்கள் பிள்ளை பாலு.]

சுந்தரி :—என்னடா பாலு! இப்படி ஒரே பிடிவாதம் பிடிக்கிறாயே! நானும்தான் எத்தனை நாளைக்கு இந்த மாதிரி உழைத்து உழைத்து, ஓடாய்ப் போவேன்? ஏதோ ஒரு நாட்டுப் பெண் ஆத்துக்கு வந்தாள், நாமும் ஆத்துக் கவலை இல்லாமே ஒரு கோவில், குளம் என்று போவோம்....

பாலு :—அம்மா! உனக்கு வேறு வேலை இல்லையா? எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பேச்சுத்தானா? எனக்கு ஒரு கல்யாணமும் வேண்டாம். வேண்டுமானால் நீ ஒரு கல்யாணம் பண்ணிக் கொள்.

சுந்தரி (சிரித்துக் கொண்டு) :—என்னடா பாலு, இப்படிக் கோவிச்சுக்கிறே? நான்தான் அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறேனே?

பாலு :—பண்ணிண்டுதான் இரண்டு பேரும் ரொம்பச் சுகப்படறேளே?

சுந்த :—என்னடா அப்பா, என் சுகத்துக்குக் குறைச்சல்?

பாலு :—நீ சொன்னால் போதுமா? அப்பாவைக் கேட்டால் சொல்லுவார்.

சுந்தரி (வெங்கட்ராமய்யரைப் பார்த்து) :—என்ன இது? எல்லாம் பிள்ளைக்கு நீங்கள் கொடுக்கிற இடம்தான். அதுதான் இந்த மாதிரி பேசுகிறான்.

வெங் :—நான் என்ன இடம் கொடுத்தேன்? எல்லாம் நீ கொடுக்கிற செல்லம்தான். நான் அவனை ஒரு வார்த்தை சொன்னால்தான் நீ என்னிடம் சண்டைக்கு வந்து விடுகிறாயே?

சுந்தரி :—ஆமாம், என்னைப் பார்த்தால் உங்களுக்குச் சண்டைக்காரியாகத்தான் தோன்றும். சுளையாகப் பணத்தையும் கொடுத்து, என்னையும் இங்கே கொண்டு வந்து தள்ளினாளே, அவாளைச் சொல்லணும்.

[அழ ஆரம்பிக்கிறாள்]

வெங் :—என்னடி பிரமாதப் படுத்தறே? உங்க அப்பா என்ன பிரமாதமா வரதட்சிணை கொடுத்து விட்டார்? ஒரு மூவாயிரம் ரூபாய் கொடுத்தாரே, அவ்வளவுதானே! அதற்கப்புறம் ஒரு ஆடி உண்டா, ஒரு தீபாவளி உண்டா, ஒரு நாள் உண்டா, ஒரு விசேஷம் உண்டா? ஒன்று கிடையாதே!

சுந்தரி :—ஏன் கிடையாது? அவா கூப்பிட்ட போதெல்லாம் நீங்கள் வரமாட்டேன் என்று 'ராங்கி' அடித்தால் அவா என்ன பண்ணுவா?

பாலு :—பலே பேஷ்! பலே பேஷ்! தேவலையே

அப்பாவும் அம்மாவும்! கல்யாணம் ஆகி இருபத்தைந்து வருஷம் ஆகப்போகிறது, இப்ப நினைத்துக் கொண்டு வரதட்சிணைச் சண்டை போடுகிறேளே, பலே பேஷ்! இதற்குத்தான் நான் கல்யாணமே வேண்டாம் என்கிறது. அப்படிப் பண்ணிக் கொள்ளச் சம்மதப் பட்டாலும் வரதட்சிணை ஒரு தம்பிடி கூட வாங்கக் கூடாது.

சுந்தரி :—சரிடாப்பா. உன் இஷ்டப்படியே வரதட்சிணை வாங்கவில்லை. அவ்வளவுதானே!

## காட்சி 2.

[வெங்கட்ராமய்யர் வீடு. அண்ணாசாமி அய்யர் வந்திருக்கிறார். வெங்கட்ராமய்யரும் சுந்தரி அம்மாளும் கூடத்தில் இருக்கிறார்கள்.]

அண்ணா :—நம்மாத்து ஜாதகம் ஒன்று கையில் கிடைத்தது. எங்களுக்குக் குப்பண்ணா ஜோசியர் தான் ரொம்ப கைராசி. அவரிடம் காண்பித்ததில் ஜாதகம் ரொம்பவும் பொருத்தமாயிருக்கிறது என்று சொன்னார். இந்த ஊருக்கு இன்னொரு காரியமாக வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம்னு........

வெங்க :—அதுக்கென்ன! ரொம்ப சந்தோஷம் தாங்கள் வந்தது. ஈசுவரப் பிராப்தம் எப்படி இருக்கிறதோ, அப்படியே நடக்கட்டும்!

அண்ணா :—ஈசுவரன் மேலேயே எல்லா பாரத்

தையும் போட்டால் போதுமா? மனுஷ யத்தனமும் வேண்டாமா? ஆமா, லௌகிக விஷயம் எப்படி?

வெங்க:—அதெல்லாம் நம்ப ஆத்துக்காரியைத் தான் கேட்கணும். இதெல்லாம் பொம்மனாட்டி விஷயம் பாருங்கோ, நான் எல்லாம் இதில் தலையிடு கிறதே இல்லே. என்ன சுந்தரி, சொல்லேன்!

சுந்தரி:—நான் என்னத்தைச் சொல்லுகிறது? இதெல்லாம் அவாளுக்கே தெரியாதா என்ன? பையன் ஆனர்ஸில் பர்ஸ்ட் கிளாஸில் பாஸ் பண்ணி யிருக்கிறான். இருநூறு ரூபாய் உத்தியோகம் கொடுத்தாலும் பார்ப்பதற்குச் சாமர்த்தியம் உள்ள வன்.

வெங்க:—உன் பிள்ளை பெருமை இருக்கட்டும். உனக்கு என்ன வரதட்சிணை வேண்டும், சொல் லேன்!

அண்ணு:—ஏன் அண்ணா கோவிச்சுக்கிறேள்? பிள்ளேளா பெருமையா யிருக்காதா? நீங்க சொல் லுங்கோ அம்மா, உங்களுக்கு எவ்வளவு வரதட்சிணை வேண்டும்?

சுந்தரி:—அப்படி ஒன்றும் நான் அதிகமாகக் கேட்டுவிடுவேன் என்று பயப்படாதேயும். நான் வந்து ஒரு மூவா........

[உள்ளே யிருந்து பாலு வருகிறான்.]

பாலு:—அம்மா! யார் இது? என்ன சமாசாரம் பேசிண்டிருக்கேள்?

சுந்தரி :—இவாதான் உனக்குப் பெண் கொடுக்கிறதாக வந்திருக்கா. என்ன வரதட்சிணை வேண்டும் என்று கேட்டார்.

பாலு :—நீ என்ன சொன்னே?

சுந்தரி :—நான் என்னத்தைச் சொல்லுவேன்? நீ சொன்னதைத்தான் சொன்னேன்.

பாலு :—வரதட்சிணை வேண்டாம் என்ரு சொன்ணய்?

சுந்தரி :—ஆம், அப்படித்தான் சொன்னேன்.

[பாலு போகிருன்.]

அண்ணு :—என்னம்மா! வரதட்சிணை வேண்டாமா?

சுந்தரி :—ஊம், வேண்டாம். எனக்கு வரதட்சிணை வேண்டாம். என் பிள்ளை என்னமோ வரதட்சிணைப் பணத்தை யெல்லாம் நான் எடுத்து முடிந்து கொள்வது போல் நினைத்துக் கொண்டிருக்கிருன். அதற்காக வரதட்சிணையே வேண்டாம் என்று தீர்மானித்து விட்டேன்.

அண்ணு :—தேவலையே! இந்த மாதிரி நல்லவாளை நான் எங்கே பார்க்கப் போகிறேன்? இந்த மாதிரி நல்ல இடத்தில் தான் என் பெண் வாழ்க்கைப் படணும் என்று எனக்கு ரொம்ப நாளாக ஆசை. இப்படி வரதட்சிணைக்கு ஆசைப்படாதவா, நாட்டுப் பெண்ணையும் தங்கமாக வைத்துக் கொள்ளுவா என்பதில் சந்தேகமில்லை. சரி, முகூர்த்தத்துக்கு நாள் பார்த்துடலாமா?

சுந்தரி :—அதுக்கென்ன ! பார்த்தாப் போச்சு. ஆனால், ஒண்ணுன்னு. மாப்பிள்ளைக்கு ஒரு நூறு ரூபாயில் நல்ல பட்டு எடுக்கணும்.

அண்ணு :—அதுக்கென்ன, எடுத்தாப்போச்சு.

சுந்தரி :—அப்புறம் ஒரு நூறு ரூபாயில் ஒரு ரிஸ்ட் வாச்.

அண்ணு :—அதையும் வாங்கிக் கொடுத்தால் போச்சு.

சுந்தரி :—அப்புறம், ஒரு ஐந்நூறு ரூபாயில் ஒரு வைரக் கடுக்கன்.

அண்ணு :—என்ன ! வைரக் கடுக்கனு ?

சுந்தரி :—ஆமாம், அண்ணு, வைரக் கடுக்கன் தான். நான் தான் வரதட்சிணை வேண்டாம் என்கிறேனே ? வரதட்சிணை என்று ஒரு செல்லாத் தம்படி கூட எங்கள் கையில் கொடுக்க வேண்டாம்.

அண்ணு :—சரி.

சுந்தரி :—அப்படியே பொண்ணுக்கும் ஒரு ஜோடி வைரத் தோடு........

அண்ணு :—வைரத் தோடா ?

சுந்தரி :—ஆமாம் அண்ணு, ஆமாம். நான்தான் வரதட்சிணை வேண்டாம் என்கிறேனே. ஒரு தம்படி வரதட்சிணை கொடுக்க வேண்டாம். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஏதோ நாங்க ஆசைப்பட்டுக் கேட்கிறதைச் செய்யுங்கோளேன் போதும். பையன் கூட ரொம்ப நாளாக ஒரு மோட்டார் ஸைக்கிள் வேணுமென்று ஆசைப் பட்டுக்கொண்டிருந்தான். ஆகவே

கல்யாணத்தின் போது ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் தேவலை.

அண்ணா:—மோட்டார் சைக்கிளா! என்னமோ வரதட்சிணை வேண்டாம் என்று சொன்னேளே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன்—

சுந்தரி:—இப்ப மட்டும் நாங்கள் என்ன வரதட்சிணையைக் கொண்டா என்றா கேட்கிறோம்? நான் தான் வரதட்சிணை வேண்டாம், வரதட்சிணை வேண்டாம் என்று படித்துப் படித்துச் சொல்கிறேனே. இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேன். வைரம் வாங்கும்பொழுது, பெண்ணுக்கு ஒரு வைர பேஸரியும், ஒரு வைர நாகொத்தும் வாங்கி விடுங்கள்....ஏன், என்ன யோசனை பண்ணுகிறீர்கள்?

அண்ணா:—ஒண்ணுமில்லை. வந்து, வந்து....... (வெங்கட்ராமய்யரைப் பார்த்து) ஏன் அண்ணா! நீங்க ஒண்ணும் சொல்லாமல் பேசாமல் இருக்கிறீர்களே?

வெங்:—நான் என்னத்தைச் சொல்ல இருக்கிறது! நம்ப சம்சாரம் எதாவது அதிகப்படியாக இத்தனை கொண்டா, அத்தனை கொண்டா என்று வரதட்சிணை கேட்டால் 'கொஞ்சம் குறைத்துக் கொள்ளேண்டி!' என்று நான் தலையிடலாம். அவள்தான் வரதட்சிணையே வேண்டாம் என்று சொல்லி விட்டாளே?

சுந்த:—வரதட்சிணை வேண்டும் என்று கேட்

டால் பிள்ளையாண்டான் கோபித்துக் கொள்கிறான். அதற்குத்தான் நான் வரதட்சிணை வேண்டாம் என்று முன்னடியே சொல்லி விட்டேன். இன்னும் ஒரே ஒரு வார்த்தை. கையோடு கையாக, பெண்ணுக்கு ஒரு காசு மாலை பண்ணிப்போட்டு விடுங்கள். அவ்வளவுதான். எனக்கு வரதட்சிணை ஒரு தம்படி வேண்டாம்.

[தாயார் சொன்ன கடைசி வார்த்தையைக் கேட்டுக் கொண்டு பாலு உள்ளே நுழைகிறான்.]

பாலு :—என்ன அம்மா கடைசியில் என்ன நிச்சயம் பண்ணினே ?

சுந்த:—அதுதான் வரதட்சிணை ஒரு தம்படி கூடவேண்டாம் என்று சொல்லி விட்டேன்.

பாலு :—அவர் என்ன சொன்னார் ?

அண்ணு :—நான் என்னத்தைச் சொல்றது? உங்கள் தாயார் இவ்வளவு பெரிய மனசு பண்ணும் போது நான்சின்ன மனசாய் நடந்து கொள்ளலாமா? அதனால் ஒரு யோசனை பண்ணி விட்டேன். என் பெண்ணுக்குக் கூடக் கல்யாணத்துக்கு அவ்வளவு அவசரமில்லை. என் பிள்ளைக்கு உங்கள் பெண்ணைப் பண்ணிக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். வரதட்சணை கேட்பேனே என்று பயப்படாதீர்கள் ! வரதட்சணை ஒரு செல்லாத் தம்படி வேண்டாம். பையனுக்கு மாத்திரம் ஒரு ரிஸ்ட் வாட்ச், ஒரு ஜதை வைரக் கடுக்கன், ஒரு மோட்டார் சைக்கிள், பெண்ணுக்கு ஒரு காசு மாலை, ஒரு ஜதை வைரத்தோடு....

[சுந்தரி அம்மாள் திகைக்கிறாள். திரை விழுகிறது.]

# நல்ல வேளை

(நல்ல வேளை பார்த்து எழுத ஆரம்பித்தது)

ஜனங்கள் தாங்கள் செய்யும் காரியங்களில் தோல்வி யுற்று, அதைக் குறித்து என்னிடம் வந்து ஒரு ராகம் அழும்போது, எனக்கு இமை கொட்டு கிறது, மூச்சு வாங்குகிறது, நெஞ்சு படபட வென்று அடித்துக் கொள்கிறது, உடம்பு 'டெம்பரேச்சர்' 98.4 டிகிரிக்கு மேல் போகாமல் நின்று விடுகிறது. ஜனங்களுக்கு உபகாரம் பண்ணுவதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம் என்று வேதங்கள் என்னிடம் முறை யிடுகின்றன. ஆனால், யாருக்கு யார் உபகாரம் பண்ண வேண்டும் என்கிற விஷயம் மட்டும் தெளி வாகத் தெரியவில்லை. பிறர்தான் எனக்கு உபகாரம் பண்ணட்டுமே என்று நான் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்கலாம். இருந்தாலும் எனக்கு ஜீவகோடிகளின் மேல் உள்ள வாஞ்சையினால், நான் இவ்வுலகை விட்டுப் போகுமுன் (அதற்கு நல்ல வேளை இன்னும் வரவில்லை) ஜனங் களுக்கு ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

போதுமா பீடிகை?

நமப் பார்வதீ....பதையே! ஹரஹர மகாதே....வா!

மக்கள் முறையிட்டுக் கொள்வதற்கு மாத்திரம் என்னிடம் ஓடி வருகிறார்களே யொழிய, அவர்கள் வெற்றி யடையாததற்குக் காரணம் அவர்களுக்காகவும் தெரியாது, என் போன்ற தெரிந்தவர்களைக் கேட்டும் தெரிந்து கொள்ள மாட்டார்கள். ஜனங்கள் தங்கள் காரியங்களில் வெற்றி யடையாததற்குக் காரணம் அவற்றை நல்ல வேளையில் ஆரம்பிக்காதது தான். ஆகவே பொது ஜன உபகாரார்த்தம் சில காரியங்கள் செய்வதற்கு மாத்திரம் நல்ல வேளை சொல்லுகிறேன்.

## காப்பி சாப்பிட

உலகத்தில் நம் உயிர் நிலைத்திருப்பதே இந்தக் காப்பியினால்தான். சில வேளை காப்பிக்காகத்தான் நாம் ஜன்மம் எடுத்தோமோ என்று கூடத் தோன்றுகிறது. காப்பி உண்டான நாழிகையை வைத்துக் கொண்டு, ஜாதகம் கணித்துப் பார்த்தால், குரு ஏழாம் மடத்தில் இருப்பதாலும், சனி எட்டாம் மடத்தில் இருந்து கொண்டு ஒன்பதாம் மடத்திலுள்ள புதனைப் பார்ப்பதாலும், காலை 7-30 மணிக்கும், மத்தியானம் 1-மணிக்கும், சாயந்திரம் 4-30 மணிக்கும் காப்பி குடிப்பது சுபம். பாக்கி வேளைகளில் மத்திமம். கோசார ரீதியாகப் பார்க்கப் போனால், காப்பி குடிப்பதற்கு நல்ல வேளையே பார்க்க வேண்டாம்; தோன்றின போதெல்லாம் காப்பி சாப்பிடலாம்; (வீட்டில் காப்பிப் பொடி, சர்க்

கரை, பால் இருந்து, வீட்டுக்காரி முகத்தைச் சுளித்துக்கொள்ளாமல் போட்டுக் கொடுத்தால். இல்லாவிடில் கையில் பணமிருந்து ஹோட்டலும் பக்கத்திலிருந்தால்!)

## சாப்பாடு சாப்பிட

ஏதற்கு நல்ல வேளை பார்த்தாலும், பார்க்கா விட்டாலும், சாப்பாட்டுக்குக் கட்டாயம் நல்ல வேளை பார்க்க வேண்டும். நல்ல வேளையில் சாப்பி டும் சாப்பாடுதான் வயிற்றில் தங்கும். பாக்கி சாப் பாடு வயிற்றில் தங்காமல் ஜீரண மாய்விடும். இந்த விஷயத்தை முன்னொரு காலத்தில் ஷேக்ஸ்பியர், கம்பர், காளிதாஸர், இம்மூவரும் சேர்ந்து ஆலோ சனை பண்ணி, கீழ்க் கண்ட முடிவுக்கு வந்தார்கள். பசித்த போது சாப்பிடுவது மூடத்தனம். மிருகங்கள் தான் பசித்தபோது சாப்பிடுகின்றன. மனிதர்கள் தோன்றினபோது சாப்பிடுவதுதான் நல்லது என் பதுதான் அந்த முடிவு. ஜாதக ரீதியாய்ப் பார்த்துச் சொல்வதற்கு எனக்குச் சாப்பாடு பிறந்த வேளை தெரியாததால், இப் பெரியார்கள் சொன்னதையே வேத வாக்காக வைத்துக் கொள்வோம்.

## ஆபீஸ் போக

ஜனங்கள் தங்கள் வாழ்நாட்களின் பாதிப் பொழுதை ஆபீஸில் கழிப்பதால் இதற்குக் கட் டாயம் நல்ல வேளை பார்க்கத்தான் வேண்டும். இதைப் பொருத்துத்தான் அவர்கள் துரையிடம்

வசவு, திட்டு, டாம், இடியட், அல்லது இங்காபி ஷேகம் முதலியவைகள் வாங்குவதும் வாங்காததும் இருக்கிறது. இம்மாதிரி துரையிடம் திட்டு, வசவு முதலியவைகள் வாங்குவதில் ஸ்வதா பிசகு ஒன்று மில்லை. இவைகளைப் போல் நமக்குப் பொறுமை யையும் தன்னடக்கத்தையும் கற்றுக் கொடுக்கக் கூடிய காரியங்கள் வேறொன்று மில்லை. இங்கே கற்றுக்கொள்ளும் பொறுமை, ஆபீஸை விட்டு வீட்டிற்குப் போனதுங் கூட உபயோகப்படும்.

ஆபீசுக்கு நல்ல வேளை பார்த்துப் போக வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சொல்லியாய் விட்டது. இனிமேல் ஆபீசுக்குப் போவதற்கு நல்ல வேளை எது என்பதைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறேன். உங்களுக்கு ஆபீஸ் எத்தனை மணிக்கு ?........பத்து மணிக்கா! அடடடடா! அதைப் போல திவ்யமான வேளை கிடையாதே! ஆபீசுக்குப் பத்து மணிக்குப் போக வேண்டியது தான். இன்னும் பத்து நிமிஷம் முன்னாலேயே கூடப் போகலாம்.

## டென்னிஸ் விளையாட

**மா**தம் ரூ. 100-க்குக் குறைந்து சம்பளம் வாங்குகிறவர்களுக்கு, டென்னிஸ் விளையாட நல்ல வேளை மாதம் ரூ. 100-க்கு மேல் சம்பளம் ஆன பிறகுதான். மாதம் ரூ. 100-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இந்த விளையாட்டே வேண்

டாம். அப்படிப் பிடிவாதமாக விளையாடத்தான் செய்வேன் என்றால், சாயந்திரம் 5 மணியிலிருந்து 6-30 மணி வரை போன்ற நல்ல வேளை கிடையாது. ஏனெனில் அப்பொழுதுதான் டென்னிஸ் பந்துக்கு அதிகாரியான சூரியனும், டென்னிஸ் மட்டைக்கு அதிகாரியான சந்திரனும் சண்டை போட்டு மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள்.

## மனைவியுடன் சண்டை போட

இந்த நல்ல காரியத்திற்கு நல்ல வேளை பார்த்துச் சொல்வதற்கு முன், உலக சரித்திரத்தில், புருஷன் மனைவி சண்டை எப்பொழுது முதல் முதலில் உண்டாயிற்று என்னும் பெரிய விஷயத்தை ஆராய வேண்டி யிருக்கிறது. இதற்காகக் கன்னிமரா வாசக சாலையிலுள்ள புஸ்தகங்களை யெல்லாம் புரட்டிப் பார்த்தேன். ராமாயணத்திற்கு வந்ததும், ஒரு வண்ணான் தன் மனைவியுடன் சண்டை போட்டதாகக் கண்டிருந்தது. இதுதான் உலக சரித்திரத்திலேயே முதல் புருஷன்-மனைவி சண்டை! அந்த வண்ணான் எந்த வேளையில் இந்தப் புருஷன்-மனைவி சண்டையை ஆரம்பித்து வைத்தானோ, ராமாயணமும் சுபமாக முடியவில்லை; இந்த சண்டையும் ஓயவில்லை. ஆகவே புருஷன் தன் மனைவியுடன் சண்டை போடுவதற்கு நல்ல வேளையே கிடையாது. என் புத்தியைக் கேட்காமல் போட்டால் லாப நஷ்டம் உங்களுடையது.

## புருஷனுடன் சண்டை போட

**மே**லே சொன்ன விஷயத்திற்குப் பிறகு இதைச் சொல்லா விட்டால், ஸ்திரீ நேயர்கள் தங்கள் அடுப்பு வேலையை விட்டு விட்டு என்னுடன் சண்டை போட வந்து விடுவார்கள். கொஞ்ச நேரம் கழித்து, ஆபீஸ் சமையல் என்னால்தான் கெட்டது என்று இவர்களுக்குப் பின்னால் இவர்கள் புருஷர்களும் சண்டைக்கு வந்து விடுவார்கள். சரி, சொல்லி விடுகிறேன். புருஷர்களோடு சண்டை போட எந்த வேளையும் நல்ல வேளைதான். சரிதானா?

[புருஷர்கள் காதோடு ஒரு வார்த்தை: வீணாக என்னோடு மனஸ்தாபப் படாதீர்கள். நான் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சதா சர்வகாலம் அவர்கள் உங்களுடன் சண்டை போட்டுக் கொண்டு தான் இருக்கப் போகிறார்கள். ஆபீஸ் ஒன்று இருக்கோ, பிழைத்தீர்களோ!]

## தூங்க

**இ**து பிறந்த வேளை எதுவென்று கண்டுபிடித்து விட்டால், அதைக் கொண்டு ஜாதகம் கணித்து, நல்ல வேளை கண்டு பிடித்துச் சொல்லி விடலாம். பைபிளின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தைப் புரட்டுங்கள்—கடைசியிலிருந்து. முதல் அத்தியாயத்திற்கு வந்து விட்டீர்களா? சரி, பக்கத்தைப் புரட்டுங்கள். இரண்டாவது அத்தியாயமா? வாசியுங்கள். "கர்த்தர் ஆதாமைச் சிருஷ்டித்ததும், அவனைத்

தூங்கப் பண்ணி அவன் விலா எலும்பை எடுத்து ஏவாளைச் சிருஷ்டித்தார்." தெரிந்ததா? அப்பொழுது பிடித்த தூக்கம் இன்னும் மனிதனை விடுவதாயில்லை.

தூங்குவதற்கு நல்ல வேளை தூக்கம் வருகிற போதெல்லாம். மத்தியானம் ஒரு மணியிலிருந்து மூன்று மணிவரை தூங்குவது மிகவும் சுபம். (ஆபீஸ் துரை பார்க்காமலிருந்தால்.)

## மோட்டாரில் அகப்பட்டுக்கொள்ள

[சென்னை வாசிகளுக்கு மாத்திரம்]

**கொ**ஞ்ச காலமாகச் சென்னை வாசிகளுக்கு இந்த நவீன விளையாட்டில் அதிகப் பிரேமை ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. ஆனால் இந்த விளையாட்டின் சுவாரஸ்யத்தைப் பற்றி நம் போலீஸ் புலிகளுக்கு ஒன்றும் தெரிவதில்லை. மோட்டாரில் அகப்படுக் கொண்டவனை, "வண்டிப் போக்குவரவைத் தடுத்தல்" என்ற சட்டத்தின் கீழ்க் கைது செய்து விடுகிறார்கள். ஆகவே போலீஸ்காரன் இல்லாத சமயம் பார்த்துத்தான் இந்த விளையாட்டில் இறங்க வேண்டும்.

**அ**வ்வளவுதான். வேறு ஏதாவது, பிள்ளைக்குக் காது குத்தல், பள்ளிக்கூடம் வைத்தல், பெண்ணுக்குக் கலியாணம் பண்ணல் முதலான காரியங்களுக்கு நல்ல வேளை பார்த்துச் சொல்ல வேண்டுமென்றால், என்னை என்னுடைய ஆபீஸில் இரவு பகல் எந்த வேளையிலும் வந்து பார்த்து விட்டுப் போகலாம். நான் இருக்க மாட்டேன்!

# கம்பர் குறை தீர்ந்த படலம்

[தேவ லோகத்தில் திருவள்ளுவர் கம்ப ராமாயணம் வாசித்துக் கொண்டிருக்கிறார்.]

வள்ளு :—ஆஹா! என்ன அழகு! என்ன நயம்! ஒவ்வொரு அட்சரமும் லட்சம் பொன் பெறும். கம்பர் நமக்கு முன்னால் பிறக்காமல் பின்னால் பிறந்து விட்டாரே! அப்படிப் பிறந்திருந்தால் அவர் ராமாயணத்தை நாம் பூலோகத்திலேயே வாசித்து மகிழ்ந்திருக்கலாம். இதன் அழகை மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்டி யிருக்கலாம்.

[கம்பர் வருகிறார்.]

அதோ, அவரே வருகிறார். கம்பரே, வர வேண்டும். தங்களைப் பற்றித்தான் இப்பொழுது நினைத்துக் கொண்டிருந்தேன்; தாங்களே வந்து விட்டீர்கள். தங்களுக்கு நூறு வயதுதான், போங்கள்.

கம்ப :—என்ன வள்ளுவரே, நூறு வயது என்று கூறுகிறீர்கள்! நாமெல்லாம் அமரத்வம் பெற்று தேவ லோகத்தில் அல்லவா வசித்து வருகிறோம்? அதை மறந்து விட்டீர்களா, என்ன?

வள்ளு :—கம்பரே, மன்னிக்க வேண்டும். ஏதோ பழைய பூலோக ஞாபகத்தில் கூறி விட்டேன். ஆம்,

அது இருக்கட்டும். தங்கள் முகம் வாட்டமுற்று இருப்பதாகத் தோன்றுகிறதே, ஏன்?

கம்ப:—இல்லையே, அப்படி யொன்று மில்லையே.

வள்ளு:—கம்பரே! யாரிடம் மறைக்கிறீர்கள்?

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்**

என்ற குறள் நான் இயற்றியதே.

கம்ப:—தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவரே! தங்களிடம் விஷயங்களை மறைப்பதில் பயனில்லை. தாங்கள் கூறுவது உண்மையே. கடன் பட்டார் நெஞ்சம் போலும் கலங்கி வாடுகின்றேன்.

வள்ளு:—காரணம் யாதோ?

கம்ப:—பூலோகத்தில், பள்ளிக் கூடங்களிலும், கலாசாலைகளிலும் வைக்கப்படும் தமிழ்ப் பாட புத்தகங்களைச் சின்னாளாகப் பார்த்து வருகிறேன்—

வள்ளு:—ஏன், ஏதாவது வித்வான் பரீக்ஷை கொடுக்கப் போகிறீர்களோ?

கம்ப:—தங்களுக்கு எதுவும் வேடிக்கைதான், வள்ளுவரே! அது இருக்கட்டும், நான் சொல்வதைச் சற்றுக் கேளும். அப்பாட புத்தகங்களில் அடியேன் இயற்றிய ராமாயணத்தி லிருந்தும் சில பகுதிகள் வெளியிடுகிறார்கள்.

வள்ளு:—ஆசா! அப்படியா! ரொம்ப சந்தோஷம்! பாட புஸ்தகம் வைக்கும் அதிகாரிகள் கற்றுணர்ந்த அறிஞர்களாக இருக்க வேண்டும்.

தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

அல்லவா ?

கம்ப :—எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவதுபோல் இருக்கிறதே தாங்கள் கூற்று! என் வருத்தத்தைத் தங்களிடம் சொல்லி மன ஆறுதல் பெறலாம் என்று வந்தால்—

வள்ளு :—வருத்தமா ? எதற்காக வருத்தம் ?

கம்ப :—நான் இயற்றிய ராமாயணப் பாடல்களை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கிறார்களே என்று தான்.

வள்ளு :—ஏன், இதில் வருத்தப் படுவதற்கு எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லையே ? தங்கள் ராமாயணத்தை மாணவர்களுக்குப் பாடமாக வைப்பதில் என்ன தவறு ?

கம்ப :—என்ன தவறு! அந்த மாணவர்கள் தங்கள் பாட புஸ்கங்களை வாசிக்கும் காட்சியைப் பார்த்தால் தாங்கள் இப்படிக் கூறமாட்டீர்கள். வேண்டா வெறுப்புடன் விளக்கெண்ணெய் குடித்தவர்கள்போல் தங்கள் முகத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் கம்ப ராமாயணம் படிக்கும் காட்சி என்றால் துளிகூடச் சகிக்க முடியவில்லை.

வள்ளு :—ஏன், எதற்காக அப்படிச் செய்ய வேண்டும் ? தங்கள் ராமாயணத்தைப் போன்ற அழகிய கிரந்தம் இதுவரை வெளி வந்ததாகத் தெரிய வில்லையே. நான் கூடத் தங்கள் ராமா

யணத்தைத் தினம் வாசித்து மகிழாமல் இருப்ப தில்லையே!

கம்ப:—தங்களைப்போல் படித்து மகிழ்கிறவர் களும் இருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல வில்லை. ஆனால் அவர்கள் மகிழ்ச்சி எல்லாம் இம் மாணாக்கர்கள் செய்யும் இகழ்ச்சியில் மறைந்து விடுகிறது.

வள்ளு:—ஏன், இகழுவானேன்?

கம்ப:—பாவம், அந்த மாணவர்களையும் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவர்கள் என்ன பண்ணுவார்கள்? ஒன்றும் இல்லை. அவர்களாக வாசக சாலைகளி லிருந்து எடுத்து வாசிக்கும் புஸ்த கங்களை எவ்வளவு ஆவலாக வாசிக்கிறார்கள்! ஏன், என் ராமாயணத்தையே அவர்கள் வயது வந்து உத்தியோகத்தில் அமர்ந்ததும் எவ்வளவு ஆசையாக வாசிக்கிறார்கள்! யாராவது வாசித்துச் சொன்னால் எவ்வளவு அக்கரையுடன் கேட்கிறார்கள்! என் புஸ்தகத்தையும் எவ்வளவு ஜாக்கிரதையாகக் கண் ணினைக்காக்கும் இமை போல் காக்கின்றனர். ஆனால் பாடப்புத்தகமாக வைத்து, கட்டாயப் படுத்தி, இதில் மார்க் வாங்கினால்தான் பரீட்சையில் தேறலாம், இல்லாவிடில் இல்லையென்று சொன்னால் யாருக்கும் வேம்பாகத்தான் இருக்கும். ஏன், என்னையே என் ராமாயணத்தைப் பரீட்சைக்குப் பாடமாக படி என்றால், "ஏண்டா ஒருவன் இப்படி எழுதித் தொலைத்து விட்டுச் சென்றான்?" என்று

என்னையே நொந்து கொள்வேன். இல்லை, அப்படித் தான் படித்தேன், கட்டாயம் 'கோட்' அடித்து விடு வேன், சந்தேகமில்லை.

வள்ளு :—ஒரு வகையில் தாங்கள் கூறுவது சரி யென்றே தோன்றுகிறது. மிக உயர்ந்த காட்டுத் தேனாக இருந்தாலும் அதை வலுக் கட்டாயத்தின் பேரில் புகட்டினால் கசக்கத்தான் செய்யும். ஆனால் இதைப் பற்றித் தாங்கள் கவலைப் படுவானேன்? மாணவர்கள் இகழ்ந்தால் இகழ்ந்து விட்டுப் போகட் டுமே. தாம் செய்தது எவ்வளவு பெரிய பிசகு என்று அவர்களே பின்னால் உணர்வார்கள்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

அல்லவா ?

கம்ப :—வள்ளுவரே ! தாங்கள் துறவி யாதலால் இதை யெல்லாம் பொருட் படுத்தாமல் இருக்க முடியும். ஆனால் என் போன்றோரால் எப்படி முடியும் ?

" தோன்றிற் புகழொடு தோன்றுக "

என்ற தங்கள் அருள் மொழியைக் கடைப் பிடித்து புகழுக்காக அல்லவோ இத்தனை அரும்பாடு பட் டேன் !

வள்ளு :—கம்பரே, தாங்கள் கூறுவது சரிதான். தென்னாலிராமன் பூனை வளர்த்தது போன்று இப் பரீட்சை அதிகாரிகள் மாணாக்கர்களுக்குக் கல்வி

போதிக்கிறார்கள். எதையும் நாம் கட்டாயப் பாடமாக வைத்து வாசிக்கச் சொல்வதால் அப் பூனை பாலை வெறுத்தது போன்று இம் மாணவர்களும் பெரிய கிரந்தங்களை ரஸிக்க விரும்புவதில்லை. ஆனால் பூலோகத்தில் நடக்கும் இக் காரியத்துக்குத் தேவ லோகத்தில் உள்ள நாம் என்ன செய்ய முடியும்? நமக்குத் தெரிந்து எந்தக் காரியத்தையும் சாதிக்க வல்லவர் தேவ லோகத்தில் பாரதியார் ஒருவர் தான். ஆமாம், அவர் விஷயம் என்ன? அவர் பாடல்களைப் பாடமாக வைக்க வில்லையோ! அவர் மிகவும் கோபக்கார ராச்சே? தம்மைப் பற்றி யாராவது ஏதாவது சொன்னால் அவர் துளி கூடப் பொறுக்க மாட்டாரே?

கம்ப:—அவர் பாடல்கள் எல்லாம் சுதந்திர உணர்ச்சியை வலி யுறுத்துவதால் சர்க்காருக்குப் பயந்து கொண்டு, யாரும் இது வரை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கவில்லை. பாடமாக இல்லாமற் போகவே மாணவர்கள் விழுந்து விழுந்து படிக்கத் தொடங்கினார்கள், பாடத் தொடங்கினார்கள். எட்டுத் திசையும் அவர் புகழ் பரவிற்று. பாரதியாரும் மிகக் கொம்மாளமாகவே இருந்தார். ஆனால்—

வள்ளு:—ஆனால் என்ன?

கம்ப:—ஆனால் கொஞ்ச காலமாக அவர் பாடல்களையும் பாடமாக வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

வள்ளு :—அப்படியா! சந்தோஷம், சந்தோஷம்! இது விஷயம் தெரிந்தும் தாங்கள் சந்தோஷப் படாமல் இருக்கிறீர்களே !

கம்ப :—என்ன வள்ளுவரே ! தாங்கள் சொல்வது ஆச்சரியமாக வல்லவா இருக்கிறது ! பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போய் விட்டது என்ற காரணத்துக்காக நமக்கும் ஒரு கண் போனால் பரவாயில்லை என்று இருக்க முடியுமா ?

வள்ளு :—என் கருத்தைத் தாங்கள் புரிந்து கொள்ள வில்லை. அதனால்தான் தாங்கள் துள்ளிக் குதிக்காமல் சீதையைப் பிரிந்த ராமனைப்போல் முக வாட்டத்துடன் விளங்குகிறீர்கள். பாரதியார் பாடல்களையும் பாடமாக வைக்கத் தொடங்கி விட்டார்களோ, இல்லையோ ?

கம்ப :—வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

வள்ளு :—அப்படியானால் கவலையற்று இரும். அவருக்காகிறது தங்களுக்கும் ஆகி விட்டுப் போகிறது.

கம்ப :—அப்படியென்றால் ?

வள்ளு :—அப்படியென்றால் பாரதியார் மிகவும் கோபக்காரர். இதற்குள் இதற்கு ஏதாவது வழி கண்டு பிடித்திருப்பார். அந்த வழியைத் தாங்களும் கையாளலாம்.

[வெற்றி, வெற்றி, வெற்றி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்ற குரல் கேட்கிறது. ]

அதோ அவரே வருகிறார், கள்ளுண்டவர் போலே.

[பாரதியார் வருகிறார்.]

பாரதி :—வெற்றி, வெற்றி, வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி மற்றாங்கே........எண்ணுமெண்ணங்கள் யாவினும் வெற்றி, எங்கும் வெற்றி யெதனினும் வெற்றி !

வள்ளு:—பாரதியாரே! வரவேண்டும். வரவேண்டும். என்ன இத்தனை சந்தோஷம் ? இந்தியாவுக்கு ஒரு வேளை சுயராஜ்யம் கிடைத்து விட்டதா, என்ன ?

பாரதி :—என் தாய்த் திருநாடு தளை அறுத்த தென்றால் நான் இங்கேயா இருப்பேன்! என் செந்தமிழ் நாட்டைப் பார்க்க ஓடி விட மாட்டேனா? ஆ!

**செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே.**

வள்ளு :—பின் விஷயம் என்ன ?

பாரதி :—விஷயமா ? பூலோகத்துப் பரீட்சை அதிகாரிகளின் எண்ணத்தில் மண் போட ஒரு யுக்தி கண்டு பிடித்து விட்டேன். அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!

வள்ளு (ஒன்றும் தெரியாதவர் போல்) :—அவர்கள் உம்மை என்ன செய்தார்கள் ?

பாரதி :—செய்தார்களாவது! என்னை என்ன செய்தாலும் பரவா யில்லையே, என் பாடல்களை அல்லவா கொல்லப் பார்த்தார்கள்! என் பாடல்

களைப் பாடமாகவா வைக்கப் பார்க்கிறார்கள்! பார்த்து விடுகிறேன், இவர்களை ஒரு கை! இச்சகத்துளோ ரெல்லாம் எதிர்த்து நின்ற போதினும் அச்ச மில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!

வள்ளு:—ஓ! தங்கள் பாடல்களை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கிறார்கள் என்று கோபமா? அப்படிச் சொல்லும்! கம்பரும் இதே விஷயமாகத் தான் என்னை நாடி வந்துள்ளார். இதைத் தடுப்பதற்கு ஏதாவது ஒரு வழி செய்துதான் ஆக வேண்டும்.

பாரதி:—எல்லா வழிக்கும் ஏற்பாடு செய்தாகி விட்டது. இதற்கென்று ஒரு நல்ல யுக்தி கண்டு பிடித்து விட்டேன்.

வள்ளு:—யுக்தியா! என்ன யுக்தி கண்டு பிடித்தீர்கள்? அதைச் சொல்ல வில்லையே!

பாரதி:—நம் சந்திரமவுலித் தலைவன் மைந்தனை கணபதியைச் சற்று சரிப் படுத்தினேன். 1008 கொழுக்கட்டை பண்ணித்தருவதாகச் சொன்னேன். அவரும் ஒப்புக் கொண்டு விட்டார்.

வள்ளு:—என்ன ஒப்புக்கொண்டு விட்டார்? எனக்கு விஷயம் ஒன்றும் விளங்க வில்லையே! விநாயகருக்கும் பூலோகத்துப் பரீட்சைப் பாடங்களுக்கும் என்ன சம்பந்தம்?

பாரதி:—என்ன சம்பந்தமா? பூலோகத்து மாணவர்களுக்குப் பரீட்சைகளில் மார்க் வாங்கிக் கொடுக்கும் வேலையை விநாயகர் ஒப்புக் கொண்

டிருக்கிறரே, தெரியாதா? இதற்காக பூலோகத்து மாணவர்கள் அவர் கோயிலே வலம் வருகிறர்கள். தோப்புக் கரணம் போடுகிறர்கள். சதிர்த் தேங்காய் போடுகிறர்கள். கொழுக்கட்டை நிவேதனம் செய்கிறர்கள்.

வள்ளு :—சரி, அதனல் ?

பாரதி :—அதனல் எல்லா மாணவர்களுக்கும் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கிக் கொடுத்து விடுவது என்று அவர் ஒப்புக்கொண்டு விட்டார்.

வள்ளு :—அதனல் ?

பாரதி :—என்ன இப்படிக் கேட்கிறீர்கள் ?....... ஓ, மன்னிக்க வேண்டும். தங்களுக்கு இந்தக் காலத்துப் பாட புஸ்தக அதிகாரிகளின் மனேபாவம் தெரியாது, அதுதான் அப்படிக் கேட்கிறீர்கள்.

வள்ளு :—விஷயத்தைச் சற்று விளக்கமாகத் தான் சொல்லுமே.

பாரதி :—அதுவா ? இப்பாட புஸ்தக அதிகாரிகள் இருக்கிறர்களே, அவர்கள் இப் பையன்களுக்கு எந்தப் பாடத்தை வைத்தால் 'கோட்' அடிப்பார்கள் என்று கண்டு பிடிப்பதில் தான் கண்ணும் கருத்துமா யிருப்பார்கள். தமிழ்ப் பாடத்தில் எல்லாரும் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கத் தொடங்கி விட்டாலோ, தமிழ்ப் பாடம் சம்பந்தப்பட்ட மட்டில்

இவர்கள் கொட்டம் அடங்கி விடும். "சட்! தமிழைப் பாடமாக வைத்துப் பயனில்லை. எல்லாப் பசங்களும் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கி விடுகிறார்கள்!" என்று தமிழ்ப் பாடம் பரீட்சைக்கு வேண்டாம் என்று விட்டு விடுவார்கள். என் பாடல்களும் பிழைக்கும், ஏன் கம்பரே! தங்கள் ராமாயணமும் பிழைக்கும்.

வள்ளு :—சபாஷ் பாரதியாரே! அருமையான யோசனை.

கம்ப :—பாரதியாரே! தாங்கள் கெட்டிக்காரர், காரியவாதி என்பதில் சந்தேகமில்லை. போகட்டும். 1008 கொழுக்கட்டைகளையும் தாமே சிரமப்பட்டுக் கொண்டு செய்யவேண்டாம்! 504 நான் பண்ணித் தருகிறேன்.

[திரை]

# அலாரம் கடிகாரம்

அலாரம் கடிகாரம் கண்டு பிடித்த மகானு பாவனை என் எதிரே கொண்டு வந்து நிறுத்தி, எனக்கு அவனை என்ன வேண்டுமானாலும் பண்ண லாம் என்று அதிகாரம் கொடுத்துவிட்டால், அவனை நான் என்ன பண்ணுவேன் என்று நினைக்கி றீர்கள் ?....நானே இன்னும் நிச்சயம் பண்ண வில்லை ; அவனைத் தூக்கிலிடுவதா, கழுவில் ஏற்று வதா, சிரச்சேதம் பண்ணுவதா, அல்லது சித்திர வதை செய்வதா என்று. இதெல்லாவற்றையும் விட மிகக் கொடிய தண்டனை, அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிற சமயம் பார்த்து, அவன் கண்டு பிடித்த அலாரம் கடிகாரங்கள் ஒரு லட்சத்தை அடிக்கப் பண்ணி அவனை அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கச் செய்வதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த மாதிரி ஒரு தடவை செய்தால் போதும். இரண்டாம் தடவை செய்வ தற்கு நமக்கு இடம் கொடுக்காமல் ஆள் சுவர்க் கத்திற்கு டிக்கட் வாங்கிக்கொண்டு போய் விடுவான்.

இந்த அலாரம் கடிகாரங்களைக் கண்டு எனக்கு ஏன் இத்தனை ஆத்திரம் என்று தானே கேட் கிறீர்கள் ? சொல்லுகிறேன்.

**நா**ன் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்த போதுதான் முதல் முதலில் எனக்கு என் தகப்பனர் ஓர் அலாரம் கடிகாரம் வாங்கிக் கொடுத்தார். சாதாரணமாக நான் பள்ளிக்கூடத்தில் அத்தனை சூடிக்கை யில்லை. அதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். நான் மாத்திரம் நன்ருகவும் சூடிக்கையாகவும் வாசித்திருந்தால் ஒரு டாக்டராகவோ, அல்லது ஒரு வக்கீலாகவோ ஆகி, என் வீட்டு வாசலில் ஒரு அழகிய போர்டு மாட்டிக் கொண்டிருக்கலாம் அல்லவா? அதில் என்னுடைய பெயர், நான் வாங்கி யிருக்கும் பட்டங்கள், நான் என்னுடைய கக்ஷிக்காரர்களையோ, அல்லது நோயாளிகளையோ (யாரேனும் இருந்தால்) பார்க்க இசையும் நேரம், முதலியவற்றைப் போட்டுக் கொண்டிருக்கலாம் அல்லவா? அப்படிச் சூடிக்கையாய் இல்லாததனல்தான் இப்போது புனைபெயர் பூண்டு கட்டுரை எழுதும் தொழிலில் (இதுவும் ஒரு தொழிலா?) இறங்க வேண்டியதாயிற்று.

இது நிற்க. நான் பள்ளிக்கூடத்தில் அதிக சூடிக்கையாய் இருக்கவில்லை யென்று சொன்னேனல்லவா? ஆனல், வழக்கத்திற்கு அதிகமான வருஷங்கள் நான் பத்தாவது வகுப்பில் தங்க ஆரம்பிக்கவே, என் தகப்பனருக்கு என் மேல் யோசனை பிறந்து விட்டது. இதற்கு முன்னல் எல்லாம் நான்

ஒரு வகுப்பில் இரண்டு வருஷம், தப்பினல், மூன்று வருஷங்களுக்கு மேல் தங்குவதில்லை. நான் பண்ணும் விஷமத்தனத்தையும் போக்கிரித்தனத்தையும் பொறுக்காமல் எந்த வாத்தியாரும் என்னை ஒரு வகுப்பில் இரண்டு வருஷங்களுக்கு மேல் தங்க விடுவதில்லை. மிகவும் தைரியம் வாய்ந்த வாத்தியாராயிருந்தால், "எனக்காச்சு, இவனுக்காச்சு" என்று என்னை மூன்றும் வருஷம் தங்கப் போட்டு விடுவார். ஆனல் அந்த மூன்றும் வருஷத்துக்குள் அவர் தைரியமெல்லாம் காற்ருய்ப் பறந்து விடும். "ஏண்டா, அப்பேர்ப்பட்ட மூடத்தனமான காரியத்தைச் செய்தோம்" என்று அவர் தம்மைத் தாமே நொந்து கொள்ளும்படி நேரிடும். கடைசியாக அந்த வருஷம் எப்படித் தொலையப் போகிறது என்று காத்திருந்து, மூன்றும் வருஷம் வந்ததோ இல்லையோ, என்னை மேல் வகுப்புக்கு மாற்றி விடுவார். "இவனை மேல் வகுப்பிற்கு மாற்றின லாச்சு. இல்லாவிடில் நான் என் உத்தியோகத்தை ராஜீநாமாச் செய்து விடுவேன்" அன்று வாத்தியார் பிடிவாதமாகச் சொல்லும்போது ஹெட்மாஸ்டர் என்ன பண்ணுவார், பாவம்!

ஆனல் பத்தாவது வகுப்பில் மட்டும் நான் வழக்கமான மூன்று வருஷங்களுக்கு மேலேயே தங்கும்படி நேரிட்டதற்குக் காரணம், பத்தாவது வகுப்பு வாத்தியார் மிகத் தைரிய சாலியாக இருந்தது தான் என்று நினைக்காதீர்கள். பத்தாவது வகுப்புப்

பரீக்ஷை சர்க்கார் பரீக்ஷையானபடியால் பள்ளிக்கூட வாத்தியார்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை— எனக்கு ‘செலக்ஷன்’ கொடுப்பதைத் தவிர. இது தெரியாமல் என் தகப்பனார் எனக்கு ஒரு வருஷம் ‘பிரைவேட்’ டியூஷன் வைத்துப் பார்த்தார். பிரைவேட் வாத்தியாரும் எவ்வளவோ சிரமப்பட்டுப் பார்த்தார். என் மண்டையை உடைத்து, விஷயங்களைப் புகுத்துவதைத் தவிர வேறு வழியில்லை யென்று உணர்ந்தார். ஆனால் அவர் அப்படிச் செய்வதற்கு முன் நான் அவர் மண்டையை உடைத்து விடுவேனாதலால் என்னைக் கை விட்டு விட்டுப் போய்விட்டார்.

ஒரு நாள் நானும் என் தகப்பனாரும் கடை வீதிக்குப் போய்விட்டுத் திரும்பி வருகையில் ஒரு கடிகாரக் கடையில் பின் வரும் விளம்பரத்தைக் கண்டோம்:

“உங்கள் பையன் பரீக்ஷையில் தேறவில்லையா? அப்படியானால் அவனுக்கு ஒரு அலாரம் கடியாரம் வாங்கிக் கொடுங்கள். விடியற்காலையில் படித்தால் தான் மூளையில் தங்கும் என்று பிரபல டாக்டர்கள் கூறுகிறார்கள்.”

அவ்வளவுதான். ஒரு அலாரம் கடிகாரத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினோம்.

வீடு போய்ச் சேர்ந்ததும், என் தகப்பனார்

என்னைத் தினம் காலை நான்கு மணிக்கு அலாரம் கடிகாரத்தின் உதவியால் எழுந்திருக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படியே முதல் நாள் ராத்திரி நான்கு மணிக்கு அலாரம் வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். விடியற்காலம், "ட்ர்ர்ர்........" என்று அலாரம் என் காதைத் துளைத்தது. கண்ணை விழித்துக் கொண்டேன். ஆனால் தூக்கத்தை விட்டு எழுந்திருக்க மிகவும் சோம்பலாயிருந்தது. கடிகாரம் தானாக நிற்கட்டும் என்று விடுவோமென்றால், அந்த அலாரம் கடிகாரம் கால் மணி நேரத்துக்குக் குறைந்து நிற்காது என்று கடைக்காரன் சொல்லி யிருந்தான். அதற்காக எழுந்து, கடிகாரத்தை நிறுத்தி, விளக்கை ஏற்றிப் பார்த்தால் மணி சரியாக நாலு! "அட சனியன் பிடித்த கடிகாரமே. கொஞ் சம் முன்னே பின்னே அடித்தால் தான் என்ன!" என்று வாய் விட்டுச் சொன்னேன்.

நான் சொன்னதை கடியாரம் புரிந்து கொண்டது என்று தோன்றிற்று. அடுத்த நாள் படுத்து ஒரு கண் தூங்கியிருக்க மாட்டேன், அலாரம் "ட்ர்ர்ர்..........." என்று அடித்தது. "என்னடா இது! இப்பொழுது தான் படுத்துக் கொண்டோம் போலிருக்கிறது! அதற்குள்ளாகவா மணி நாலா கியிருக்கும்?" என்று நினைத்துக் கொண்டு மணி யைப் பார்த்தால் மணி பன்னிரண்டு! நான்தான் அலாரம் முள்ளைத் தவறுதலாக வைத்து விட்டேனோ என்று நினைத்துக் கொண்டு அலாரம் முள்ளைப்

பார்த்தால் அது சரியாக நாலில்தான் இருந்தது. சரி, இனிமேல் எந்த மணிக்கு அலாரம் அடிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அதற்கு நான்கு மணி தள்ளி அலாரம் முள்ளை வைக்கவேண்டு மென்று தீர்மானித்தேன். ஆகவே பன்னிரண்டு மணிக்கு எழுந்த நான், திரும்பவும் காலை நான்கு மணிக்கு விழித்துக் கொள்வதற்காக அலாரம் முள்ளை எட்டில் வைத்து விட்டுத் தூங்கப் போனேன்.

"என்னடா! இதுதான் படிப்பா! மணி எட்டடிக்கப் போகிறது. இன்னும் தூங்குகிறாயா? அலாரம் வாங்கிக் கொடுத்தது மிகவும் அழகாயிருக்கிறதே" என்று என் தகப்பனார் குரல் கேட்டு எழுந்தேன். மணி அப்பொழுது எட்டு அடிக்க ஐந்து நிமிஷம்!

"நான் என்ன பண்ணுவேன்! அலாரம் அடிக்கவில்லை" என்றேன்.

"அலாரம் அடிக்கவில்லையா? எட்டு மணிக்கு அலாரம் வைத்தால் எட்டு மணிக்குத் தான் அடிக்கும்" என்றார் அலாரத்தை ஒரு பார்வை பார்த்து விட்டு.

"இல்லை யப்பா. அலாரத்தில் ஏதோ ஒரு தப்பு இருக்கிறாப்போல் இருக்கிறது. நான்கு மணிக்கு அலாரம் அடிக்க வேண்டுமானால் அலாரம் முள்ளை

எட்டில்வைக்க வேண்டுமென்று கணக்குப் போட்டுப் பார்த்தேன். இன்று விடியற்காலம் ஏனே அடிக்கவில்லே. ஆனால் நீங்கள் வேண்டுமானல் பாருங்கள். இன்று சாயந்திரம் நான்கு மணிக்கு அலாரம் அடிக்கும்" என்றேன்.

"அட தடியா, தூங்குகிறதையும் தூங்கி விட்டுப் பொய் வேறு சொல்லுகிருயா?" என்ருர் தகப்பனர்.

அந்த சமயத்தில் அந்தப் பாழும் அலாரம் கடிகாரம் என் தகப்பனர் சொல்வதை ஆமோதிப்பது போல், "ட்ர்ர்ர்" என்று அடித்தது.

அடுத்த நான் இதற்காக அலாரம் முள்ளே நான்கில் வைத்து விட்டுப் படுத்துக் கொண்டேன். அலாரம் அடிக்கவு மில்லே, நான் எழுந்திருக்கவுமில்லே. ஏழு மணி சமயத்திற்கு நான் எழுந்திருந்தேன். அப்பொழுதுதான் அலாரமும் தானும் இத்தனே நாழி தூங்கிவிட்டு விழித்துக் கொண்டது போல் அடிததது!

அன்றைய தினத்திலிருந்து எத்தனே மணிக்கு வைத்தால் எத்தனே மணிக்கு அலாரம் அடிக்கும் என்று நிர்ணயிக்க முடியவில்லே. அந்த அலாரம் கடிகாரம் ஒவ்வொரு நாளேக்கும் ஒவ்வொரு மாதிரி அடிக்கும். ஒரு நாளேக்கு ஒருவர் தயவு மில்லாமலே பன்னிரண்டு தடவை அடிக்கும். ஒவ்வொரு தடவை அலாரம் அடிக்கும்போதும் உண்டாகும் அதிர்ச்சி

யினால் அலாரம் முள் தானாகவே ஒரு மணியைவிட்டு இன்னொரு மணிக்கு நகர்ந்து விடும். இரவு முழுவதும் அலாரத்தை நிறுத்தி வைப்பதுதான் என் வேலையாய்ப் போய்விட்டது. நான்கு மணிக்கு எழுந்திருக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. தூங்கினாலல்லவா எழுந்திருப்பதற்கு!

அலாரம் எப்படியாவது அடித்துத் தொலைத்துவிட்டுப் போகிறது, மணியாவது சரியாக ஓடிக்கொண்டிருந்ததே, அதற்கும் கேடுகாலம் வந்துவிட்டது. கடிகாரம் தன்னைச் செங்குத்தாய் நிறுத்தி வைத்தால் ஓட முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டது. பாவம், அதற்கும் கிழடு தட்டிவிட்டது போலும்! அதற்காக ஒரு புஸ்தகத்தை அண்டக் கொடுத்து, அதைச் சுவரில் சாய்த்து வைத்தேன். கொஞ்ச நாளானதும் இந்த நிலையில் அது ஓட மறுத்தது. அதற்காக அதை மேஜையில் மல்லாக்காகப் படுக்க வைத்தேன். இந்த நிலையிலும் கொஞ்ச நாள்தான் அதற்குச் சரிப்பட்டு வந்தது. இதற்குப் பிறகு மேஜையில் தலைக் குப்புற வைத்தால்தான் அது ஓடும். ஆனால் அந்த சமயங்களில் மணி பார்ப்பதற்காகக் கடியாரத்தை நிமிர்த்திப் பார்த்தால், 'டக்' கென்று நின்றுவிடும். இதற்கு நான் ஒரு யுக்தி பண்ணினேன். கடிகாரத்தின் அளவுக்குச் சற்றுச் சிறிதாக மேஜையில் ஒரு துவாரம் செய்து துவாரத்தின் மேல் கடிகாரத்தைப்

பொருத்தினேன். யாருக்காவது மணி பார்க்க வேண்டுமானல் மேஜைக்கு அடியே குனிந்துதான் பார்க்க வேண்டும்.

அந்தப் பாழும் கடிகாரத்திடம் போன ஜன்மத்தில் நான் என்ன கடன் வாங்கியிருந்தேனே, தெரியவில்லை, அது என்னைப் படாத பாடெல்லாம் படுத்தி விட்டது. இது நடந்ததெல்லாம் கடன் நிவாரண மசோதாவுக்கு வெகு வருஷங்களுக்கு முன்பாதலால் கடிகாரத்திற்கு என்னை மன்னிக்க வேண்டும் என்று தோன்றவில்லை. இவ்வளவு தூரம் என்னைச் சிரமப்படுத்தினது போதாதென்று, திடீரென்று ஒரு நாள் இரண்டு தடவை சாவி கொடுத்தால்தான் போவேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டது. மறு நாள் மூன்று தடவை சாவி கேட்டது. பிறகு நான்கு தடவை, ஐந்து தடவை, இப்படி ஏறிக் கொண்டே போய் நூறு தடவை வரையில் கொண்டு போய் விட்டு விட்டது!

ஒரு நாள் நூருவது தடவையாக சாவி கொடுத்துக் கொண்டிருந்தேன். கடியாரம் ஓடணுமே? ஊஹூம்! ஓடவே யில்லை. எனக்கு அந்தக் கடிகாரத்தின் மீது இருந்த ஆத்திரத்தை யெல்லாம் வைத்துக்கொண்டு அதை என் முழு பலங்கொண்டு தூக்கி எறிந்தேன். கடியாரம் சுவரின்மேல் மோதி, "ஐயோ" என்று கத்துவது போல் 'ட்ர்ர்ர்' என்று மணி அடித்துக் கொண்டே தன் ஆவியை விட்டது!

இப்பொழுது என் பிள்ளையும் நான் வாசித்த லக்ஷணப்படிதான் வாசித்துக்கொண்டு வருகிறான். என் நண்பர்கள் அநேகர் அவனுக்கு ஒரு அலாரம் கடிகாரம் வாங்கிக் கொடுக்கும்படி சிபார்சு பண்ணுகின்றனர். அலாரம் கடிகாரமா! நான் அதன் கிட்டவே போகமாட்டேன். என் பிள்ளையாண்டானுக்கு, வேண்டுமானால், அவன் விடியற்காலம் எழுவதற்காக ஒரு சேவல் கோழி வாங்கித் தரத் தயாராயிருக்கிறேன்!

# அமளி துமளி

## காட்சி 1.

[ நாரதரும் ஊர்வசியும் தேவலோகத்தி
லிருந்து ககன மார்க்கமாகப் பூலோ
கத்துக்கு வருகிறார்கள். ]

ஊர்வசி :—ஆஹா ! எவ்வளவு ரமணீயமாய் இருக்கிறது பூலோகம் ! அதுதான் தாங்கள் அடிக்கடி இங்கே விஜயம் செய்ய வந்துவிடுகிறீர் கள் போலும் ! ஆஹா, இந்த மலைகளும் சோலை களும் அருவிகளும் எவ்வளவு மனோகரமா யிருக்கின்றன ! அதோ தூரத்தில் ஒரே வீடுகள் மயமாகத் தெரிகின்றனவே, அது என்ன நாரதரே !

நார :—அதுதான் சென்னைப் பட்டணம். நாம் சென்று பார்ப்போம் வா.

[பட்டணத்துக்குள் நுழைகிறார்கள்.]

ஊர் :—ஏன் நாரதரே ! பூலோகத்தில் ஜனத் தொகை மிகவும் அதிகரித்து விட்டதோ ! ஜனங்கள் இத்தனை நெருக்கடியாக வாழ்கிறார்களே !

நார :—அப்படி யொன்று மில்லை. இந்தக் காலத்தில் ஜனங்கள் அதிகமாகக் கிராமங்களில் வசிப்பதில்லை. இம்மாதிரி நெருக்கமாக வசித்தல் தான் நாகரிகம் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதோ பார்த்தாயா, கடை வீதி, அங்கு ஜவுளிக் கடைகளும்—

ஊர் :—ஜவுளிக் கடைகளா! ஜவுளிக் கடைகளா!

நார :—ஊர்வசி! ஏன் இத்தனை ஆச்சரியம்! கடை வீதியென்றால் ஜவுளிக் கடைகள் இருக்காதா?

ஊர்:—இல்லை, நாரதரே! தாங்கள் ஜவுளி என்றதும் அவற்றைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று துடி துடிக்கிறது என் மனம். தாங்களும் வருகிறீர்களா! பார்த்து விட்டு வருவோம்.

நார :—கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை, ஊர்வசி! அதோ பிரம்மாண்டமாய் ஒரு கட்டிடம் தெரிகிறது பார்த்தாயா? அங்கு போய்க் காத்திருக்கிறேன். நீ அங்கே வந்து சேர்.

ஊர் :—சரி நாரதரே!

[போகிறாள்.]

## காட்சி 2.

[படம் பிடிக்கும் ஸ்டுடியோ. அன்று தேவேந்திரன் சபா சீன் படம் பிடிக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டத்தில் நாரதராகவும் ஊர்வசியாகவும் நடிக்கப் போகும் இருவர் வேஷம் போட்டுக் கொண்டு, ஒரு பக்கத்தில் பேசிக் கொண்டிருக்கின்றனர். சினிமா நாரதரின் வாயில் ஒரு சிகரெட் விளங்குகிறது.]

சினிமா நாரதர்:—என்ன ஊர்வசி! பலே ஷோக்காயிருக்காயே, இன்னிக்கு? உன் பெயர்தான் ஊர்வசி

என்ருல், வேஷமும் ஊர்வசி! தேவலோகத்தில் ஊர்வசீன்னு யாரோ ஒருத்தி இருக்காளாமே, அவ இங்கே வந்தான்னு, உனக்கும் அவளுக்கும் வித்தியாசமே தெரியாது, போ!

சி. ஊர்வசி:—போங்கோன்னு! உங்களுக்கு என்னைக் கண்டால் கேலி தான்!

சி. நார:—என்ன அப்படிச் சொல்றே! நான் என்னிக்காவது உன்னைக் கேலி காட்டியதுண்டா? கோயமுத்தூரிலே நாடகக் கொட்டகையிலே நான் கோவலனாகவும், நீ மாதவியாகவும் 'ஆக்ட்' பண்ணினோமே, ஞாபகம் இருக்கா?

சி. ஊர்:—இருக்கு. அதுக்கு என்ன இப்போ?

சி. நார:—அன்னைக்கு உன் அழகைக் கண்டு மயங்கிப் போய் விழுந்தவன் தான்! உன் அழகைக் கண்டு மயங்கித்தானே உன்னை 'ரிஜிஸ்தர் மாரியேஜ்' பண்ணிக் கொள்வதாய்ச் சொல்லியிருக்கிறேன்! .... ஆமா. அது என்ன ஷூட்டிங்குக்கு இன்னைக்கு ஒரே நாழியாகிவிட்டது? எத்தனை நேரந்தான் இந்தப் பாழும் வெய்யலில் நிற்பது?

சி.ஊர்:—இந்த ஷூட்டிங் தொல்லையே எப்பொழுதும் இப்படித்தான். என்னமோ பிரமாதமா காலம்பர ஆறு மணிக்கே அவசரப்படுத்தி வேஷத்தைப் போட்டு வச்சு இந்தப் பொசுக்கிற வெய்யலில் நிறுத்தி வச்சுட்டார்கள். இந்த வெய்யல் அடிக்கிற அடியில் எங்கே பயித்தியம் பிடித்துவிடுமோ என்று பயமாய் இருக்கிறது.

சி. நார (சிரித்துக் கொண்டு) :—இனிமேலா நம் இரண்டு பேருக்கும் பயித்தியம் பிடிக்கப் போகிறது? நம் இருவருக்கும் ஏற்கெனவே தான் பயித்தியம் பிடித்து விட்டதே—எனக்கு உன் மேலும், உனக்கு என் மேலும்........சரி, அது இருக்கட்டும். என் சிகரெட் பெட்டியை அங்கேயே வைத்து விட்டேன் போலிருக்கு. அதைப் போய்க் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வாயேன்.

சி. ஊர் :—நல்ல சிகரெட் பயித்தியம்! இதோ போய் கொண்டு வருகிறேன். [போகிருள்.]

சி. நார :—என்ன வெய்யல் இப்படிச் சுள் என்று அடிக்கிறது! பகலெல்லாம் சொஸ்தமாகத் தூங்கி விட்டு, இரவில் நாடகம் ஆடின காலம் போய் இப்படிச் சினிமாவிலே சேர்ந்து சிரிப்பாச் சிரிக்க வேண்டி யிருக்கிறது!

[நிஜ ஊர்வசி வருகிருள்.]

ஊர்வசி! ஏன் போனவள் உடனே திரும்பி வந்துட்டே?

நிஜ ஊர் :—கடையெல்லாம் பார்த்தாகி விட்டது. திரும்பி விட்டேன்.

சி. நார :—கடையா! சிகரெட் பெட்டியை எடுத்துண்டு வான்னு சொன்னேன், என்னமோ கடை கண்ணி யென்று உளறுகிருயே!

நிஜ ஊர் :—நாரதரே! என்ன தாறுமாருகப் பேசுகிறீர்! சிகரெட் என்கிறீர், பெட்டி என்கிறீர்! எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே!

சி. நார :—உனக்கு என்னமோ இன்றைக்குத் தமாஷ் பண்ணணும் போல் தோன்றுகிற தாக்கும்! சரி, சிகரெட் பெட்டியை எடுத்துண்டு வரப் போகிறாயா, இல்லையா?

["எங்கே ஊர்வசி?" "எங்கே ஊர்வசி?" என்ற குரல்கள் படம் பிடிக்கும் இடத்திலிருந்து எழுகின்றன.]

சரி, நீ சிகரெட் பெட்டி அப்புறம் கொண்டு வரலாம். உன்னைக் கூப்பிடுகிறார்கள். போ!

நிஜ ஊர் :—கூப்பிடுகிறார்களாவது! யார் கூப்பிடுகிறார்கள்? நான் எங்கே போவது?

சி. நார :—என்ன ஊர்வசி! நீ தமாஷ் தான் பண்ணுகிறாயா, அல்லது கொஞ்ச நாழிக்கு முந்தி சொல்லிக் கொண்டிருந்தாயே, அது மாதிரி வெய்யலில் நின்று நின்று உனக்கு மூளைக் கோளாறு தான் ஏற்பட்டு விட்டதா?

நிஜ ஊர் :—நாரதரே, எனக்கு ஒரு மூளைக் கோளாறும் உண்டாக வில்லை. தங்களுக்குத்தான் அப்படி ஏதோ நேர்ந்து விட்டது போல் தோன்றுகிறது. இல்லாவிடில் இம்மாதிரி சிகரெட் என்றும் பெட்டி என்றும் உளற மாட்டீர்!

["எங்கே ஊர்வசி?" "எங்கே ஊர்வசி?" என்ற குரல்கள்.]

சி. நார :—என்ன ஊர்வசி! உன்னைத்தான் டைரக்டர் கூப்பிடுகிறார்! போய் நாட்டியமாடு. அப்புறம் வைத்துக் கொள்ளலாம் உன் வேடிக்கைப் பேச்சை!

## காட்சி 3.

[படம் பிடிக்கும் இடம். நிஜ ஊர்வசி நாட்டியமாடிக் கொண்டிருக்கிருள். அதை டைரக்டர் படம் பிடித்துக் கொண்டிருக்கிருர்.]

டைரக்டர் :—சட் ! சுத்த மோசம்! சுத்த மோசம். இந்த மாதிரி ஆடு.

[ஆடிக் காண்பிக்கிருர். நிஜ ஊர்வசி ஆடுகிருள்.]

டைரக்டர் :—அப்படி யில்லே, இப்படி !

[ஆடிக் காட்டுகிருர். ஆனல் நிஜ ஊர்வசிக்கு அம்மாதிரி ஆடத் தெரிய வில்லே. டைரக்டர் மாறி மாறி " அப்படி யில்லே, இப்படி," " இப்படி யில்லே, அப்படி" என்று தொண்டைத் தண்ணீர் போகக் கதறுகிருர். நிஜ ஊர்வசி அதைப் பிடித்துக் கொள்வதா யில்லே.]

சட் ! மோசம், மோசம்! இது என்ன ஆட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிருய்?

நிஜ ஊர் :—ஏன், நான் தேவலோகத்தில் வழக்கமாக இந்திரனுக்கு முன்பாக நாட்டிய மாடுவதைப் போலத் தானே இன்றும் ஆடினேன்?

டைரக்டர் :—தேவலோகமா ?

நிஜ ஊர் :—ஆம், நான் யாரென்று உங்களுக்குத் தெரிவிக்கவில்லே. தெரிந்தால் இப்படி மரியாதைக் குறைவாக நடத்த மாட்டீர்கள்.

டைரக்டர்(ஏளனமாக) :—தாங்கள் யார் என்று

அடியேனுக்குத் தெரிவித்தால் மிகவும் நன்றியறிதல் உள்ளவனய் இருப்பேன்.

நிஜ ஊர் :—ஆ! அப்படிக் கேளுங்கள் மரியாதையுடன்! நான்தான் ஊர்வசி. தேவலோகத்தில் நாட்டியத்தில் என்னை மிஞ்சுவதற்கு ஒருவரும் கிடையாது. நானும் நாரதரும் இன்று காலைதான் ககன மார்க்கமாய்ப் பூலோகத்துக்கு வந்தோம்—

டைரக்டர் :—அப்படியே ககன மார்க்கமாகவே தங்களைப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு நாங்கள் அனுப்புகிறோம். ஐயோ பாவம்! திடீரென்று பயித்தியம் பிடித்து விட்டது! கவலைப் படாதீர்கள்....யாரப்பா அங்கே, உடனே டாக்டருக்கு 'போன்' பண்ணு!

## காட்சி 4.

[கடை வீதியைப் பார்க்கச் சென்ற ஊர்வசியைக் காணுமே என்று நிஜ நாரதர் காத்துக் கொண்டிருக்கிறார்.]

நிஜ நாரதர்:—என்ன இருந்தாலும் ஸ்திரீ ஜன்மம்தானே? தேவலோக ஸ்திரீயா யிருந்தால் என்ன, பூலோக ஸ்திரீயா யிருந்தால் என்ன? ஜவுளி என்றதும் ஓடிப்போய் விட்டாள். தேவலோகத்தில் இல்லாத ஜவுளி தினுசுகளா இங்கே? ஆனல் போனவள், போனதும் வந்ததுமாக வரக் கூடாதோ!

[சினிமா ஊர்வசி கையில் சிகரெட் பெட்டியுடன் திரும்புகிருள்.]

நிஜ நார :—என்ன ஊர்வசி! போனல் எத்தனை கால தாமதம்? நான் பயந்தே விட்டேன்.

சி. ஊர் :—நன்ன பயந்தேள்! போய் சிகரெட் பெட்டியை எடுத்துக் கொண்டு வருவதற்குள் எந்தத் திருடன் என்னைப் பிடித்துக்கொண்டு போய் விடுவான் என்று பயந்தேள்?

நிஜ நார :—சிகரெட்டாவது, பெட்டியாவது! கையில் என்ன இது? என்னமோ சிகரெட் பெட்டி என்று சொன்னயே, அது தானே இது?

சி. ஊர் :—நல்ல கூத்து இது! இப்படி சிகரெட் குடித்துக் குடித்துக் காசைக் கரியாக்காதீர்கள் என்று அடியா அடித்துக் கொண்டிருக்கிறேன். நீங்க அதைக் காதிலே வாங்கிக் கொள்ளாமே நாளைக்கு நூறு சிகரெட் குடிக்கிறீர்கள். இப்ப சிகரெட் பெட்டின்ன எப்படி யிருக்கும் என்று கேட்கிறீர்கள்!

நிஜ நார :—ஊர்வசி! இது என்ன, கன்னு பின்னுவென்று உளறுகிறாய்? நீதான் பேசுகிறாயா, அல்லது—

சி. ஊர் :—எல்லாம் நான்தான், உங்கள் ஊர்வசி பேசுகிறேன். உங்கள் நாரதர் வேஷத்தை யெல்லாம் என் கிட்டே காட்ட வேண்டாம்.

[நாரதரைக் கட்டித் தழுவ முயல்கிறாள்.]

நிஜ நார :—சட்! துஷ்டே! (உதறித் தள்ளுகிறார்) தேவலோகத்தி லிருந்து பூலோகத்துக்கு

வந்ததும் உனக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது என்று தோன்றுகிறது.

சி. ஊர்:—தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தேனு! அட பாவமே! இந்த வெய்யலில் நின்று நின்று உங்களுக்கு மூளை குளறிப் போச்சுப் போலிருக்கே!

["நாரதர் எங்கே?" "நாரதர் எங்கே?" என்ற கூச்சல்.]

அதோ டைரக்டர் உங்களைக் கூப்பிடுகிறார். போங்கோ, அங்கே போய் ஏதாவது கன்னு பின்னு என்று உளறி வைக்காதேங்கோ.

நிஜ நார:—நாராயண! நாராயண! திடீரென்று ஊர்வசி ஏன் இப்படி மாறி விட்டாள், தெரியவில்லையே! இந்திரன் என்னைக் கோபித்துக் கொண்டால் நான் என்ன பதில் சொல்லப் போகிறேன்!

[போகிறார்.]

## காட்சி 5.

[படம் பிடிக்கும் இடம். நிஜ நாரதரும், டைரக்டரும்]

நிஜ நார:—தாங்கள் என்னைத் தேடின காரணம் யாதோ!

டைரக்டர்:—என்ன ஐயா! ஷூட்டிங் ஆரம்பிக்கிற சமயம் பார்த்து எங்கேயோ போய் விட்டு, எதற்காகக் கூப்பிட்டீர் என்று கேட்கிறீரே! நாழியாகிறது, பாட ஆரம்பியும்.

நிஜ நார :—பாடவா !

டைரக்டர் :—பின் இங்கு எதற்காக வந்திருக் கிறீர் ? ஆடவா ?

நிஜ நார :—நான் ஆடவும் வரவில்லை, பாடவும் வரவில்லை. திரிலோக சஞ்சாரி நான். இன்று காலை தான் நானும் ஊர்வசியும்—

டைரக்டர் :—தேவலோகத்தி லிருந்து வந்தீர்க ளாக்கும் !

நிஜ நார :—அது விஷயம் தங்களுக்கு எப்படித் தெரிந்தது ?

டைரக்டர் :—தங்கள் காதலி ஊர்வசி சொல்லத் தெரிந்து கொண்டேன்....

நிஜ நார :—ஊர்வசி என் காதலியா ! சிவ, சிவ !

டைரக்டர் :—சரி, சரி. நான் நினைத்தது சரி யாய்ப் போய் விட்டது. ஊர்வசிக்குப் பிடித்திருக் கும் பயித்தியம் இவருக்கும் பிடித்திருக்கிறது........ யார் அப்பா அங்கே ! ஊர்வசியை வைத்திருக்கும் அறையிலேயே இவரையும் கொண்டு போய் வை.... டாக்டருக்கு ‘ போன்’ பண்ணினயா ?—திரும்பவும் பண்ணு ! போ ! இன்றைக்கு ஷூட்டிங் குட்டிச் சுவர்தான் !

## காட்சி 6.

[ சினிமா நாரதர் ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருக்கிறர் . ]

சி. நார :—நான் சந்தேகப் பட்டது சரியாய்த் தான் போயிடுத்து. அப்பவே நினைச்சேன். அதற்

கேற்றுப் போலேயே இப்ப அவளுக்கு மூளைக் கோளாறு என்றும், அவளை யாரும் போய்த் தொந்தரவு கொடுக்கக் கூடாதென்றும் டாக்டர் சொல்லி விட்டார். அடடே! அவளே அதோ வருகிறாளே!

[சினிமா ஊர்வசி வருகிறாள்.]

ஊர்வசி! வா! உடம்பு என்னம்மா பண்ணுகிறது! போய் சிகரெட் பெட்டி கொண்டுவான்னேன். நீ போகாமயே திரும்பி வந்தே. என்னென்னமோ உளறினே! அப்புறம் ஷூட்டிங் போதும் ஏதோ கன்னு பின்னு வென்று உளறினாயாம்—

சி. ஊர் :—அட நாராயணா! உங்களுக்கு மூளை சரியா யில்லை யென்றும், டாக்டர் வந்திருக்கிறார் என்றும் கேள்விப்பட்டேனே அது நிஜந்தான் போலிருக்கு. என்னை இன்னிக்கி ஷூட்டிங்குக்கே கூப்பிடல்லை. நீங்கள் என்னடானுக்கே—

சி. நார :—சரிதான், உனக்குப் பயித்தியம் தான் பிடித்திருக்கிறது. சந்தேகமில்லை!

சி. ஊர் :—அட பாவமே! உங்களுக்குன்னு பயித்தியம் பிடித்திருக்கு!

சி. நார :—உனக்குத் தான் பயித்தியம்! உனக்குத் தான்!

சி. ஊர் :—உங்களுக்குத் தான், உங்களுக்குத் தான்! வேணும்னு டைரக்டரையே கேட்போம், வாருங்கள்!

[போகிறார்கள்.]

## காட்சி 7.

[ஸ்டுடியோவில் ஓர் அறை. ஒரு கட்டிலில் நிஜ நாரதரும், இன்னொரு கட்டிலில் நிஜ ஊர்வசியும் படுத்துக் கிடக்கிறார்கள். பக்கத்தில் டைரக்டர் முதலானோர் நின்று கொண்டிருக்கிறார்கள்.]

நிஜ நார:—நான் என்ன சொன்னாலும் நம்பமாட்டீர்களா! நான் தேவலோகத்து நாரதர்! எனக்குப் பயித்தியமுமில்லை, ஒன்றுமில்லை, ஐயா! தயவு செய்து என்னை விட்டுவிடுங்களேன்!

நிஜ ஊர்:—நான் தேவலோகத்து ஊர்வசி! எனக்கும் பயித்தியமும் இல்லை, ஒன்றும் இல்லை. தயவு செய்து என்னையும் விட மாட்டீர்களா!

டைரக்டர்:—ஐயோ பாவம்! இரண்டு பேருக்கும் சரியாகப் பயித்தியம் பிடித்து விட்டது!

நிஜ நார:—ஐயா! நான் சொல்வதை நம்ப மாட்டீரா? இன்று காலை தான் நானும் ஊர்வசியும் தேவலோகத்திலிருந்து புறப்பட்டு வந்தோம். வந்த இடத்தில் ஊர்வசிக்குத் திடீரென்று மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது.

நிஜ ஊர்:—நாரதரே! யாரைப் பார்த்துப் பயித்தியம் என்கிறீர்! தங்களுக்குத் தான் பயித்தியம் பிடித்திருக்கிறது. என்னைக் கண்டதும் சிகரெட் என்றும், பெட்டி யென்றும் உளறினீர்.......

நிஜ நார:—இல்லை. உனக்குத் தான் பயித்தியம்!

நீ தான் எங்கிருந்தோ ஒரு சிகரெட் பெட்டிஎடுத்துக் கொண்டு வந்தாய். நான் சிகரெட் குடியன் என்ருய்!

நிஜ ஊர்:—என்ன பொய்! என்ன பொய்! உங்களுக்குத் தான் பயித்தியம்.

நிஜ நார:—இல்லே, உனக்குத்தான் பயித்தியம்!

டைரக்டர் :—ஏன் இப்படிச் சண்டை போடுகிறீர்கள்? உங்கள் இருவருக்கும் தான் பயித்தியம்?

[வாசலில் இரைச்சல் கேட்கிறது. "இல்லே உனக்குத்தான் பயித்தியம்" "இல்லே, உங்களுக்குத்தான் பயித்தியம்" என்று கூறிக் கொண்டே சினிமா நாரதரும், சினிமா ஊர்வசியும் உள்ளே வருகிருர்கள்.]

சி. நார :—டைரக்டர்வாள்! நீங்களே சொல்லுங்கள்! நான் பயித்தியமா, அவள் பயித்தியமா?

சி. ஊர் :—டைரக்டர்வாள்! நீங்களே சொல்லுங்கள்! நான் பயித்தியமா, அவர் பயித்தியமா?

நிஜ நார (சி. ஊர்வசியைப் பார்த்து) :—ஊர்வசி! இத்தனே நாழி எங்கு போயிருந்தாய்? (நிஜ ஊர்வசியைக் காண்பித்து) இது யார்? பயித்தியம் உன்னேப் போலவே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறதே?

நிஜ ஊர் (சி. நாரதரைப் பார்த்து) :—நாரதரே! தாங்கள் எங்கு சென்றிருந்தீர்கள்! (நிஜ நாரதரைச் சுட்டிக் காண்பித்து) இது யார், தங்களேப் போலவே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது?

டைரக்டர் :—இது என்ன களேபரம்! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! இரண்டு நாரதர், இரண்டு ஊர்வசி! நான் படம் பிடித்து நாசமாப் போனாற் போல் தான்!

நிஜ நார :—தாங்கள் என்ன சொன்னீர்கள்? படம் பிடிப்பதாகவா சொன்னீர்கள்!

டைரக்டர் :—ஆம்.

நிஜ நார :—என்ன படம்.

டைரக்டர் :—என்ன படமா? குட்டிச் சுவராய்ப் போன டாக்கி படந்தான்!

நிஜ நார :—அப்படிச் சொல்லும்! (சிரிக்கிறார்) அதுதான் இத்தனை அமளி துமளி நடந்து விட்டது! நான் தேவலோகத்து நாரதர்; ஊர்வசியை அழைத்துக் கொண்டு வந்ததில்........

நிஜ ஊர் :—நான் தேவலோகத்து ஊர்வசி.

டைரக்டர் :—அட நாராயணா! என் படத்தைக் குட்டிச்சுவராக அடிப்பதற்காகவா நீங்கள் இரண்டு பேரும் வந்து சேர்ந்தீர்கள்? இன்றைய ஷூட்டிங் வீணாகிப்போய் விட்டதே, ஐயா! அப்படித்தான் வந்தீர்களே, நடிக்கவாவது தெரிந்ததா? சட்! சுத்த மோசம், சுத்த மோசம்!

(திரை)

# ஒண்டுக் குடித்தனம்

"வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்!" என்று சொல்வார்கள். அதைப் போல ஒண்டுக் குடித்தனமும் இருந்து பார்த்தால் தான் தெரியும். ஒண்டுக் குடித்தனம் இருந்து பாராதவர்கள், "இது என்ன பிரமாத விஷயம்! மாதா மாதம் முதல் தேதி வாடகையைத் தலையைச் சுற்றி எறிந்தோம்; நாம் உண்டு, நம் இடம் உண்டு என்று இருந்தோம்" என்று சொல்லலாம். ஆனால் என்னைப்போல் ஒண்டுக் குடித்தனம் இருந்தவர்களுக்குத்தான் தெரியும் இதில் உள்ள கஷ்டங்கள்!

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்"

என்றெல்லாம் பாடிய தாயுமானவ ஸ்வாமிகள் ஒண்டுக் குடித்தனம் இருந்து பார்த்ததில்லை போலிருக்கிறது! அப்படி அவர் இருந்து பார்த்திருந்தால் கட்டாயம், "ஒண்டுக் குடித்தனமும் இருந்து விடலாம்" என்று அப்பாட்டில் ஒரு வரி சேர்த்திருப்பார்.

இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதே, இந்தப் பயங்கர யுத்தம், இதற்குக் காரணம் விஞ்ஞானம்தான் என்று எல்லாரும் கூறுகிறார்கள். இது

எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனல் எத்தனையோ குடித்தனக்காரர்களுக் கிடையில் இந்தப் பாழும் விஞ்ஞானம் எலெக்டிரிக் லைட் ரூபமாக நாரதர் - கலகம் விளைத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

விளக்குக்கு இத்தனை கொடுக்கிறேன் என்று என்னதான் நீங்கள் வீட்டுக்காரருடன் முதலில் பேசிக் கொள்ளுங்கள், அவர்களுக்கும் சேர்த்து ஆகும் மொத்த விளக்குச் செலவில் முக்கால்வாசி தான் கொடுக்கிறேன் என்று ஒப்புக் கொள்ளுங்கள், உங்கள் வீட்டில் விளக்கு எரிந்துகொண்டிருக்கும் போதெல்லாம் அது அவர்கள் கண்ணை உறுத்திக் கொண்டேயிருக்கும்.

நான் முன்ஞெரு தடவை பதினைந்து நாட்கள் குடி யிருந்த வீட்டின் சொந்தக்காரரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஏ. ஆர். பி. வார்டனைப் பார்ப்பது போலவே யிருக்கும். ஏ. ஆர். பி. வார்டன்களாவது தேவலை, விளக்கு எரிந்து கொண்டிருந்தால் மறைக்கும்படி விசில் கொடுக்கிருர்கள். இவரோ மெயின் ஸ்விச்சை டக் கென்று அணைத்து விடுவார். யார் யாரையோ ஏ. ஆர். பி. வார்டன்களாக எடுத்துக் கொள்ளும் சர்க்கார், இப்பேர்ப் பட்ட வீட்டுக்காரர்களை அமர்த்திஞல் இவர்கள் ஊர் முழுவதையும் கும்பிருட்டாகச் செய்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**நா**ம் விளக்கு எரியவிடுவது புருஷர்கள் கண்ணை உறுத்தினாலும் உறுத்தா விட்டாலும் வீட்டுக்கார அம்மாளின் கண்ணைக் கட்டாயம் உறுத்துமென்பதில் சந்தேகமில்லை. இதற்காக இவர்கள் கையாளும் முறையே அலாதி. நம் காது கேட்க, தன் புருஷனிடம், "என்னமோ போங்கள், இது குடித்தனமாகவே தெரியவில்லை. இப்படி மாதம் பத்து ரூபாய் எலெக்ட்ரிக் பில் அழுகிறது என்றால் யாரால் முடியும்? அத்தனைக்கும் நான் ஒரு விளக்குக்கு மேல் போட்டுக் கொள்வது கிடையாது. எல்லாம் அவாவாளுக்குத் தெரிந்தால் தேவலை" என்று தினம் ஒரு தடவை நாம ஸ்மரணை பண்ணுவாள்.

இந்தக் கஷ்டத்துக்கெல்லாம் பயந்துகொண்டு எலெக்ட்ரிக் லைட் இல்லாத வீட்டுக்குக் குடி போவோமென்றால், மண்டை உடைபடுகிறதும், மண்ணெண்ணெய்ப் புட்டி உடைபடுகிறதும் மிச்சமேயொழிய மண்ணெண்ணெய் கிடைப்பதாயில்லை.

**மா**மியார், நாத்தனார் யாரும் கூட இல்லாமல் புருஷனுடன் தனிக் குடித்தனம் செய்யும் ஸ்திரீகளுக்கு ஒரு வார்த்தை.

வீட்டில் மாமியார், நாத்தனார் யாரும்தான் இல்லையே, நம் இஷ்டப்படி இருக்கலாம் என்று நினைத்தீர்களோ, வந்தது விபத்து! அடுத்த நாளே

சட்டி தூக்கவேண்டியதுதான் ! ஆகவே வீட்டுக்காரரின் மனைவியையே உங்கள் நாத்தனாராகக் கொண்டு, வீட்டுக்காரரின் தாயாரையே உங்கள் மாமியாராகக் கொண்டு அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளுங்கள். என்னைக் கேட்டால், நிஜ நாத்தனார், மாமியார்களை அலட்சியம் பண்ணினாலும் பண்ணலாம், இவர்களைப் பண்ணக் கூடாதென்று கூறுவேன். இவர்களுக் கெதிரில் கோண வகிடு எடுத்துக் கொள்ளாதீர்கள். புடவையை முன் கொசவம் வைத்துக் கட்டிக் கொள்ளாதீர்கள். புருஷனுடன் கல கல வென்று பேசிக் கொண்டிருக்காதீர்கள். (இந்த வார்த்தை என்னுடன் தனிக் குடித்தனம் செய்து கொண்டிருக்கும் சரசுவுக்கும் தான்— என்ன பண்ணலாம்! நேரில் சொல்லுவதற்கு யோசனையா யிருக்கிறது.)

இந்த வீட்டுக்காரர்களுடைய குழந்தைகள் இருக்கின்றனவே, அவற்றுடன் பழகுவதற்கு மிக மிக சாமர்த்தியம் வேண்டும். எல்லாம் ஒரே வக்ரப் பிச்சங்கள் அல்லது குட்டிப் பிசாசுகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஒன்று நம் வீட்டுச் சாமான்களைத் திருடிக்கொண்டு போகும். இன்னொன்று நாம் புருஷன், மனைவி பேசிக் கொண்டிருப்பதைப் பத்துப்பேரிடம் போய்ச் சொல்லும். ஒன்று நாம் ஏதாவது தின்பண்டம் வாங்க அங்காடிக் காரனைக் கூப்பிட்டால் நமக்கு முன்னால் வந்து நிற்கும். சரி, போகிறது என்று இந்த ஒரு குழந்

தைக்கு வாங்கிக் கொடுத்தால், அது மற்றக் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வந்து நிற்கும். இன்னும் சில, நாம் புருஷனும் மனைவியும் ஆசையாகப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் ஒளிந்து, மறைந்து எட்டி எட்டிப் பார்க்கும். இப்படிப்பட்ட வக்ரப் பிச்சங்களை இந்தக் கன்னத்தில் ஒன்று அந்தக் கன்னத்தில் ஒன்று என்று பளீர் பளீர் என்று கொடுக்கத் தோன்றுமா, தோன்ருதா, நீங்களே சொல்லுங்கள்! ஆனல்அப்படி மனதில் தோன்றியதைக் காரியத்தில் செய்து காட்டினதற்காக நான் இதுவரை குறைந்தபட்சம் இருபது வீடுகள் மாறி யிருப்பேன்.

குழாய் மாத்திரம் இருந்து, கிணறு இல்லாத வீட்டுக்குக் குடி போகவே போகக்கூடாது என்று சபதம் செய்திருக்கிறேன். இது விஷயமாகப் பார்க்கப் போனல், வைஷ்ணவர்கள் இருக்கிருர்களே, அவர்கள் கெட்டிக்காரர்கள் என்று தான் கூற வேண்டும். கிணறு இல்லாத வீட்டுக்கு அவர்கள் குடி போக மாட்டார்கள்.

கிணறு இல்லாமல் குழாய் மாத்திரம் இருந்தது, அதுவும் உங்கள் கட்டில் இருந்ததோ, வேறு அனர்த்தம் வேண்டாம், வீட்டுக்காரரும் வீட்டுக்கார அம்மாளும், அவர்கள் குழந்தை குட்டிகளும் உங்களைப் பார்க்க வந்துகொண்டே யிருப்பார்கள். ஏதோ உங்களைப் பார்க்க ஆசை கொண்டுதான்

வருகிறார்கள் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். "தோழி மனம் நீர்க் குடத்தே" என்பதுபோல் அவர்கள் நாட்டமெல்லாம் அக் குழாய் மீதுதான். எங்கே குழாய் ஜலத்தை நீங்கள் கொட்டி இறைத்துக் கொண்டிருக்கிறீர்களோ என்று அவர்களுக்கு எண்ணம். குழாயிலிருந்து ஒரு சொட்டு ஜலம் கீழே கொட்டினால் இவர்கள் கண்ணிலிருந்து இரண்டு சொட்டு ஜலம் கொட்டும்.

இந்த வீட்டுக்காரர்கள் இருக்கிறார்களே........ சரி, மீதி கட்டுரையை இன்னொரு நாள்—ஏன், இன்னொரு வீட்டில்தான் எழுத வேண்டும். நான் எலெக்ட்ரிக் லைட் வெளிச்சத்தில் கட்டுரை எழுதிக் கொண்டிருப்பது வீட்டுக்கார அம்மாளின் கண்ணை உறுத்த ஆரம்பித்து விட்டது! "ஏன்னா, இவாளைக் குடி வைக்காதேங்கோன்னு முதல்லேயே அடிச்சிண்டேனே. கேட்டேளா?" என்று வீட்டுக்கார அம்மாள் வீட்டுக்காரரை அதட்டுவது காதில் விழுகிறது! சரி, நாளைக்குச் சட்டி தூக்க வேண்டியதுதான்!

---

# கதர் வாங்கிக் கட்டாது!

"கதர் வாங்கிக் கட்டாது! ஆம், இனிமேல் நம்மால் கதர் வாங்கிக் கட்டாது."

இதைச் சொன்னதுமே அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் என்னைப் பழிக்க ஆரம்பித்து விட்டார். சமயா சமயத்துக்கு உபகாரமாக இல்லா விட்டாலும் சமயம் ஏற்பட்ட போதெல்லாம் குத்திக் காட்டுவதற்கென்றே இந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள் போலும்! (ஆமாம், உங்கள் "அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர்" எப்படி? அவரும் இதே ரீதி தானே?)

அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் ஆரம்பித்தார். "எனக்கு அப்பொழுதே தெரியும் ஐயா! எப்பொழுது காந்தி ஒரு ரூபாய் கதர் வாங்குவதற்கு அரையணு நூல் கொடுக்க வேண்டும் என்று சொன்னாரோ, அப்பொழுதே நீர் கதரை இனிக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க மாட்டீர் என்று தெரியும். ஆனால் நீர் என்னமோ சூரப்புலி மாதிரி பெட்டி ராட்டை வாங்கி வைத்துக் கொண்டு நூற்க ஆரம்பித்தீர். ஆனால் நூற்கத்தான் ஆரம்பித்தீரே, சரியாகத்தான் நூற்கக் கற்றுக் கொண்டீரா? ஒரு கால் மணி நூற்பதற்குள் நூறு தடவை நூலை அறுத்துக்கொண்டு நிற்பீர்—"

"எனக்கு நூல் அடிக்கடி அறுந்து போவது உமக்கு எப்படி ஐயா தெரியும்? நீர்தான் கதர் என்றால் காதவழி அப்பால் ஓடுகிறவராச்சே! இது விஷயத்தை நான் இதுவரையில் உங்களிடம் சொன்னதாக ஞாபகமில்லையே!"

"என்னமோ குட்டிச்சுவரில் முட்டிக் கொள்வதற்குக் கண்ணாடி வேண்டும் என்று சொன்ன மாதிரி அல்லவா இருக்கிறது! தினம் காலையில் எழுந்து காப்பி சாப்பிட்டதும், ஒரு கால் மணி நேரம் வீட்டில் இருக்கிற எல்லார் மீதும் வேட்டை நாய் சீறி விழுவதுபோல் சீறி விழுகிறீரே, அது எனக்குக் காது கேட்க வில்லை என்று நினைத்துக் கொண்டீரா, என்ன? நீர் நூற்கும்போது நூல் அடிக்கடி அறுந்து போவதால் தான் அப்படிச் சீறி விழுகிறீர் என்று ஊகித்துக் கொள்வதற்கு துப்பறியும் ஷெர்லாக் ஹோம்ஸ் வரவேண்டுமா, என்ன."

"சரி, அதற்காக?"

"அதற்காக என்ன? ரூபாய்க்கு அரைணா நூல் கொடுக்க வேண்டும் என்று இருந்தபோதே நீர் நூற்பதற்குத் திக்கு முக்காடிப் போனீர். உங்கள் வீட்டில் உள்ளவர்களும் உம் கோபம் பொறுக்காமல் திணறிப் போனார்கள். இப்பொழுது ரூபாய்க்கு ஒரணா நூல் தரவேண்டும் என்று வந்து விட்டதே, நீர் எப்படி நூற்கப் போகிறீர்? இல்லை அப்படித்தான் பிடிவாதமாக நூற்க ஆரம்பித்தீர்,

உம் சம்சாரம் என்னமோ உம்மை விடுவாள் என்று எனக்குத் தோன்ற வில்லை. முன்பு வாங்கின வசவைப்போல் இரண்டத்தனை வசவு வாங்க புத்தியுள்ள எவளாவது ஒருப்படுவாளா, என்ன?"

அண்ணுசாமி அய்யர் இப்படியே சொல்லிக் கொண்டு போனதைப் பார்த்தபோது எனக்கு ஒரு விதத்தில் கோபம் வந்தாலும் இன்னொரு விதத்தில் சிரிப்பே வந்தது.

எந்தக் காரியத்திலும் அதில் உள்ள கஷ்டங்களைப் பற்றி அதில் சம்பந்தப்பட்டவர்களைக் காட்டிலும் அதில் சம்பந்தப்படாதவர்கள் தான் வெகு அக்கரை காட்டுவது வழக்கம்.

இந்தக் கதருக்கு நூல் கொடுக்கும் காரியத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன்!

வழக்கமாகக் கதர் கட்டுகிறவர்களும் கதரில் நம்பிக்கை உள்ளவர்களும் மட்டும் அல்லவா இந்த நூல் கொடுக்கும் திட்டத்தினல் கதர் அபிவிருத்தி அடையுமா, அல்லது க்ஷீணதசை அடையுமா என்றெல்லாம் கவலைப்படவேண்டும்! கதர் கட்டாதவர்களும் கதரில் நம்பிக்கை இல்லாதவர்களும் ஏன் கதரைப் பற்றிக் கவலைப்பட்டுக் கதறுகிருர்களோ, தெரியவில்லை.

ஆனல், உண்மையில் நான் "கதர் வாங்கிக் கட்டாது" என்று சொன்னதன் உண்மைக் காரணம் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யருக்குத் தெரியாது.

நீங்கள் எல்லாரும் துணி மணிகள் வாங்கும் போது யாருக்காக வாங்குகிறீர்களோ, எனக்குத் தெரியாது. ஆனால் நான் வாங்கும் போது எனக்காக மட்டும் வாங்குவதில்லை. துணி எனக்குப் பிடித்த மானதுதானா என்று கவனிக்கும் போது எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வரும் இன்னொரு நபருக்கும் பிடித்தமாக இருக்குமா என்று கவனிக்க வேண்டியிருக்கிறது.

நான் வாங்கும் துணி மணிகள் எனக்குப் பிடித்தமாக இருக்கிறதா என்பதைவிட அந்த நபருக்குப் பிடித்தமாக இருக்கிறதா என்பதைப் பற்றித்தான் சரசுவுக்குக் கவலை! அதற்காக நான் கதர்த்துணி வாங்கப் புறப்படும் போதெல்லாம் அவளும் என் கூடவே கடைக்குப் புறப்பட்டு வந்து விடுவாள்.

நான் ஏதாவது சற்றுச் சீக்கிரமே கிழிந்து போகக் கூடிய துணியாக வாங்கினால் சரசு சண்டைக்கு வந்து விடுவாள்.

“ இந்தாருங்கள், இந்தத் துணியை வாங்காதீர்கள். இது உறுதியாகவே இல்லை. அதோ, அந்தத் துணி இருக்கிறதே, அதை வாங்குங்கள். விலை ஒன்றுக்கு இரண்டாக இருந்தாலும் பரவாயில்லை ” என்பாள்.

ஏனெனில் அந்த நபருக்குச் சீக்கிரம் கிழிந்து போகக் கூடிய துணிமணிகளைக் கண்டால் துளி கூடப் பிடிக்காது.

“ என்னம்மா ! உங்களுக்குத் துளிகூட நல்ல துணியாக்ப் பார்த்து வாங்கத் தெரியவில்லையே! இத்தனை திராபையாகப் பார்த்து வாங்கியிருக் கிறீர்களே !” என்பார் அந்த நபர்.

ஆகவே அந்த நபரிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காகவே, என்ன வேலை இருந்தாலும் சரி எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு, சரசு என்னுடன் கதர்க் கடைக்கு வந்து விடுவாள்.

இந்த நபர் விஷயமாக சரசு இத்தனை அக்கரை எடுத்துக் கொண்டதைப் பற்றி எனக்குத் துளி கூட வருத்தம் கிடையாது. ஒரு விதத்தில் இந்த நபரைக் கண்டால் என்க்குப் பிடித்தமே!

யாரைக் கண்டாலும் பணம், பணம் என்று பயித்தியம் பிடித்து அலையும் இந்தக் காலத்தில், பணம் என்றால் கண்ணால்கூட ஏறெடுத்துப் பார்க்க விரும்பாத சிலரும் இருக்கிறார்களென்றால் நமக்குத் திருப்தியாக இருக்காதா?

உலகத்திலேயே எனக்குத் தெரிந்து மூன்று பேர் தான் பணம் என்றால் வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள். குடு குடுப்பாண்டிகள், வட தேசத்துப் பிச்சைக்காரர்கள், நான் இத்தனை நாழி நபர், நபர் என்று குறிப்பிட்ட ஜாடிக்காரர்கள்.

இந்த மூன்று பேருக்கும் நீங்கள் என்ன பணம் தான் கொடுத்துப் பாருங்கள், உடனே வேண்டாம் என்று கண்ணை மூடிக்கொண்டு விடுவார்கள்.

இவர்களுக்கு வேண்டியதெல்லாம் சட்டை, துணிமணி, புடவை அவ்வளவுதான்.

இந்த மூன்று பேரிலும் எனக்கு மிகவும் பிடித்தவர்கள் ஜாடிக்காரர்கள்தான்.

இந்த வடதேசத்துப் பிச்சைக்காரர்களுக்கு, என்ன துணி கொடுத்தும் அவர்களுக்கு லாபம் இல்லை. என்ன துணி கொடுத்தாலும் அவர்கள் அதைப் பையில் ஒளித்து வைத்துவிட்டு, பழைய படியே முக்கால் உடம்பில் சூரிய வெளிச்சம் படும்படி தான் வெளிவருவார்கள். அதிலும் இந்த வடதேசத்துப் பிச்சைக்காரிகள் இருக்கிறார்களே, அவர்கள் இது விஷயத்தில் மிகவும் மோசம்.

குடு குடுப்பாண்டிகள் இருக்கிறார்களே, அவர்களுக்குத் துணி கொடுப்பதில் கெட்ட பெயரே யொழிய நல்ல பெயர் கிடையாது.

அவன் குடு குடுப்பைச் சத்தம் பொறுக்காமல், அவன் வார்த்தையை நம்பி, அவன் கேட்கும் கந்தலையோ, கிழிசலையோ கொடுக்கிறோமல்லவா? இதை வைத்துக்கொண்டு, அந்தக் குடு குடுப்பைக் காரன் போகும் இடமெல்லாம் நம்மை எவ்வளவு அவமானப் படுத்துகிறான் என்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

நம் கிழிசல் சட்டையை அவன் இன்னொரு வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய், "மெத்தை வூட்டு ஐயா கொடுத்தாரு, கூரை வீட்டு ஐயா கொடுத்தாரு" என்று நம்மைக் குறிப்பிடுவது

நமக்கு அவமானமா, இல்லையா, நீங்களே சொல்லுங்கள்.

ஆகவேதான் இந்த மூன்று பேரிலும் எனக்கு ஜாடிக்காரனை மிகவும் பிடித்திருக்கிறது.

இத்தகைய அவமானம் நேரிடும்படி நம் ஜாடிக்காரன் ஒரு நாளும் விடமாட்டான். ஜாடிக்காரன் நம்மிடமிருந்து ஏதாவது சட்டை வாங்கிக் கொண்டு போய் அதை வெளியில் காட்டினல், அதனல் நமக்குப் பெருமையே யொழிய, அவமானமே கிடையாது.

துளி கிழிந்திருந்தாலும், அல்லது துளி பழசாக இருந்தாலும் தான் ஜாடிக்காரன் வாங்குவதே கிடையாதே? ஆகவே அவன் நம் சட்டைகளை எடுத்துக் கொண்டு போய், கிழிசல் துணிகள்தான் கொடுப்பேன் என்று சண்டை பிடிக்கும் பக்கத்து விட்டு ஸ்திரீகளிடம், "அடுத்த வீட்டு ஐயா கொடுத்தாரு" என்று அவற்றைக் காண்பிக்கும்போது அவர்களிடையில் நம் மதிப்பு எத்தனை முழ உயரம் உயரும் என்கிறீர்கள்? "ஜாடிக்காரனுக்கே இத்தனை புதுசாகச் சட்டைகள் கொடுப்பவர், தாம் எத்தனை நல்ல சட்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டும்" என்று நம்மைப் பற்றி நினைப்பார்கள்.

ஆனல் அவர்களுக்கு உண்மை எங்கே தெரியப் போகிறது? நல்ல சட்டைகளை யெல்லாம் ஜாடிக்காரனுக்காக எடுத்து வைக்க வேண்டி யிருப்பதாலேயே நாம் எப்பொழுதும் கிழிந்த சட்டைகளைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்னும் விஷயம் அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

கிழிந்து போனல் ஜாடிக்காரன் வாங்கிக் கொள்ள மாட்டானே என்பதற்காக நான் இது

வரை நூறு வண்ணான்கள் மாற்றியிருப்பேன். துணி போட்டால், வெளுத்துக் கொடுப்பதற்காக போடுகிறார்கள் என்று எண்ணாமல் பித்தான்களை உடைத்துக் கொடுப்பதற்காகவும், துணியைக் கிழித்து கொடுப்பதற்காகவும் அல்லவா போடுகிறோம் என்று இந்தச் சலவைத் தொழிலாள நண்பர்கள் நினைத்துக் கொண்டு விடுகிறார்கள்! பித்தானை உடைப்பதற்கும், துணியைக் கிழிப்பதற்கும் நமக்குத் தெரியாதா, என்ன? இதற்கு என்று ஒரு வண்ணான் நியமித்து, அவனுக்கு நூற்றுக்கு, ஐந்தும் ஆறும் அழ வேண்டுமா, என்ன?

ஆகவே, என்ன வண்ணானை மாற்றியும் அவர்கள் துணியைக் கிழித்துக் கொண்டே போனதால் ஜாடிக்காரனுக்குப் புது சட்டைகளாகவே கொடுப்பது என்று தீர்மானித்து விட்டேன்.

ஆனால் இந்த நூல் கொடுக்கும் திட்டம் வந்தாலும் வந்தது, அதிலும் ரூபாய்க்கு ஒரணா நூல் கொடுக்கும் திட்டம் வந்தாலும் வந்தது, என்னால் எனக்கும் ஜாடிக்காரனுக்கும் சேர்த்துக் கதர் வாங்கிக் கட்டாது என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டேன். இரண்டு பேருக்கும் சேர்த்து நூற்க என்னால் முடியாது. ஆகவே, இனி எனக்கு வேண்டிய கதருக்கு மாத்திரம் நூற்றுக் கொண்டு, ஜாடிக்காரனுக்குச் சுதேசி துணிதான் வாங்கிக் கொடுக்கப் போகிறேன். ஜாடிக்காரன் தனக்கும் கதர்தான் வேண்டுமென்றால், நூற்று, நூல் கொடுக்கட்டு நான் முன் போலவே கதர்ச் சட்டைகளாகவே தைத்துக் கொடுக்க ஆட்சேபணை இல்லை.

---